பக்கங்கள்: பதினாறு+VIII=24

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 11 வெள்ளிக்கிழமை (27.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 001

பொதுசன நூலகம்

# எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் ஜெனரல் பொன்சேகாவே

## நேற்று உத்தியோகபூர்வ அறிவிப்பு



கொழும்பு, நவம்பர் 27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவே எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்தப்படுகின்றார் என ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளன.

ஜே.வி.பி. ஏற்கனவே ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாக தெரிவித்துள்ள நிலையில் ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் நேற்றுத் தமது ஆதரவை வெளியிட்டுள்ளன. (16ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் I,II பாடத்துக்கான மாதிரி வினாத் தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கணிதம் I,II பாடத்துக்கான மாதிரி வினாத் தாள்கள்.

## உதய வேளையில் உங்களுடன்... 24

அன்பு சால் வாசகர் பெருமக்களே! ஆதவாளர்களே, அபிமானிகளே!!

உங்களின் உதயனுக்கு இன்று இருபத்திநான்காவது பிறந்தநாள். அவன் தனது 25 ஆவது அகவையில் கால் பதிக்கின்றான். இந்த வருடம் அவன் வெள்ளி விழா இளைஞன்.

உதயனின் நாயகர்கள் நீங்களே. ஈழத் தமிழ் மகன்களில் ஒருவனாக நின்று உங்களுக்குப் பணியாற்றுவது என்பதை தனது பிறந்த நாள் முதல் வரித்துக் கொண்டு சேவை புரிந்து வருகிறான் அவன்.

'உதயன்' ஈழத் தமிழ் மக்களுக்காக ஓங்கி ஒலிக்கும் குரல். அவனின் உயிர்ப்பின் நோக்கமும், இயக்கத்தின் விசையும், வீச்சும், பணிசார் பொறுப்பும் அதன்பால் எழும் தாற்பரியமும் உயர்ந்தவை.

தமிழ் மக்களின் ஊடகம் என்பதால் நீங்கள் எதிர்கொண்ட அவலங்களை, இழப்புகளை, இன்னல்களை, வேதனைகளை, அராஜகங்களை, அச்சுறுத்தல்களை அவனும் அனுபவித்தான்.

தமிழ் மக்களின் விடுதலை, உங்களின் உரிமைகள், உங்களின் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த பறைசாற்ற என்றுமே முன் வரிசையில் நின்றவன், நிற்பவன் உதயன்.

நீதி, நியாயம், அறம் என்பவற்றை எடுத்துச்சொல்லும் ஒரு பத்திரிகைக்குரிய கடமையைச் செய்வதற்கு உதயன் என்றும் பின்நின்றதில்லை. வாசகர்களாகிய நீங்களே இதற்குச் சாட்சிகள்.

மக்களின் சார்பில் நியாயத்துக்காக, நீதிக்குரல் எழுப்பி அவர்களுக்கு உன்னத தொண்டாற்றியதற்காக உதயன் எதிர்கொண்ட அச்சுறுதல்கள், வன்முறைகள், உயிர் பறிப்புக்கள், இடையூறுகள் தனித்தனியே இங்கு விரித்துக் கூறின் அடங்கா.

கடந்து சென்ற 24 ஆண்டுகளில் சந்தித்த சவால்கள் இழப்புக்கள் நெடிது. நீண்டதொரு பட்டியல். அவற்றில் சில மட்டும் உள்ளே தரப்பட்டுள்ளன.

உதயனின் வாழ்வியக்கத்தை சீர்குலைக்கவும் அவனது குரலை நீர்த்து விடச்செய்யவும் மக்களுக்கான பணியை முடக்கி விடவும் பல்வேறு தீய சக்திகள் வெவ்வேறு வடிவங்களில் முயன்றன; இன்னமும் முயன்றுகொண்டே இருக்கின்றன.

ஆயினும், வாசகர்களாகிய நீங்கள் - எமது மக்கள்- உதயனுக்கு ஊட்டும் பலத்தினாலும், தோன்றாத்துணையாக நின்று வழிகாட்டும் பேரருள் சக்தியாலும் மக்களுக்குரிய சீரிய பணியை அவன் சோர்வின்றி, ஓய்வு ஒளிச்சலின்றி ஆற்றி வருகின்றான்.

உதயன் வழி, தமிழ் மக்களின் உரிமைகளின் மேம்பாடு நோக்கிய உன்னத பணி; சிறந்த வழி. உங்கள் தொண்டனாக நின்று உழைத்ததால் உண்டான வளர்ச்சியை அன்றும், இன்றும் அவன் தனது இதயத்தில் இருத்தி இறும்பூதெய்துகின்றான்.

அவன் இலங்கை வாழ், குடாநாடுவாழ் தமிழ் மக்களின் தொண்டனாக மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களின் சேவையாளனாகவும் அவர்கள் அனைவருக்கும் தகவல் சொல்லும் நண்பனாகவும் பணி செய்கிறான். 'யாழ். குடாநாட்டின் முகம் உதயன்' என்று புலம்பெயர் மக்கள் கூறும் அளவுக்கு அவனது சேவை அகிலமெல்லாம் பரந்து விரிந்துள்ளது.

கடந்த 24 ஆண்டுகளாக சீரிய மக்கள் பணிக்காக நாம் சந்தித்த சோதனைகளுக்கு மத்தியிலும் உறுதி தளராது உறுதுணையாக விளங்கும் வாசகர்கள், விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள் மற்றும் சளைக்காது பக்க பலமாக நின்று உழைக்கும் பணியாளர்கள் , பிரதேச செய்தியாளர்கள் மற்றும் படைப்பாளிகள் அனைவருக்கும் இன்றைய நன்னாளில் உதயன் தனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றான்.

*வணக்கம்*

-நிர்வாகத்தினர்.

## தேர்தலில் ஆளுந்தரப்புக்கு ஆதரவில்லை; பொதுவேட்பாளரா? தமிழ் வேட்பாளரா?

### டிசெம்பர் 3 இல் முடிவு என்கிறார் மனோ எம்.பி.

கொழும்பு, நவ. 26

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளுந்தரப்புக்கு ஆதரவில்லை. இருப்பினும், பொதுவேட்பாளரை ஆதரிப்பதா அல்லது தமிழ் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதா என்பது குறித்த தீர்க்கமான முடிவு டிசெம்பர் 3 ஆம் திகதி அறிவிக்கப்படும் - என்று மனோகணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணி அதன் தலைவர் (16ஆம் பக்கம் பார்க்க)


## மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறுவேன் என நினைத்தேன்! தேசிய மட்டத்தில் அதனைப் பெற்றது மகிழ்ச்சி தருகிறது

### ஹாட்லிக் கல்லூரியின் ஜோன் நிராஜ் பெருமிதம்

யாழ்ப்பாணம், நவ.27

பொறியியலாளராக வேண்டும் என்ற இலக்குடன் கல்வி பயின்றுவந்த நான் பெற்றோர், ஆசிரியர்களின் உதவியுடன் இன்று அதனை ஈட்டியுள்ளேன். மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறுவேன் என்று நினைத்திருந்தேன். இன்று தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றதையிட்டு அளவற்ற மகிழ்சி கொள்கிறேன்.

பாடசாலைகளின் உயர்தர பரீட்சை முடிவுகள் 15 ஆம் பக்கத்தில்



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை திட்டமிட்டபடி டிசெ.11 இல்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தகவல்

கொழும்பு, நவ. 26

இவ்வருடத்துக்கான ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை திட்டமிட்டவாறு எதிர்வரும் டிசெம்பர் 11 ஆம் திகதி ஆரம்பிக்க உள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இப்பரீட்சை 22 ஆம் திகதிவரை நடைபெறும் என்றும் அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப் பரீட்சைக்கு இம்முறை 5 லட்சத்து 45 ஆயிரத்து 132 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். நிவாரணக் கிராமம் மற்றும் மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதி நீங்கலாக நாடு முழுவதும் 3,215 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி மகிந்த டிசெ.8 இல் வருகிறார்

யாழ்ப்பாணம்.நவ.27

இலவச பாடநூல் வழங்கும் தேசிய மட்ட நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதில் கலந்துகொண்டு பாடநூல் வழங்கலை ஆரம்பித்து வைப்பார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மினி பஸ்களும் விரைவில் யாழ். – வவுனியா சேவையில்

யாழ்ப்பாணம், நவ.27

யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவுக்கும் இடையிலான பயணிகள் சேவையை நடத்துவதற்கு மினி பஸ்களுக்குப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு இந்த அனுமதிகளை வழங்கியுள்ளதாக தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அச்சங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

ஏ-9 பாதை ஊடாக தனியார் மினி பஸ்களையும் பயணிகள் சேவையில் ஈடுபட அனுமதிக்குமாறு தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் அரச அதிபர் ஊடாகப் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதியைக் கோரியிருந்தது.

இதனடிப்படையில் தனியார் பஸகளைப் பயணிகள் சேவையில் ஈடுபடுத்து (16ஆம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞானப் பிரிவில் முதலிடம் மைதிலிக்கு

கொழும்பு, நவ.27

நேற்று வெளியாகியுள்ள 2009 ஆம் ஆண்டிற்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளில், கொழும்பு சைவ மங்கையர் கழகத்தில் கல்வி பயின்ற மைதிலி சிவபாதசுந்தரம் என்ற மாணவி அகில இலங்கை ரீதியில் விஞ்ஞான பிரிவில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகிறோம்



2009 க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
வர்த்தகப் பிரிவில்
3ஏ சித்திபெற்ற

## செல்வி சபீனா சுவேந்திரன்

அவர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.
(வணிக அறிவுப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர்)

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

# கண்ணீர் அஞ்சலி



யா/நல்லூர் சென்.பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் உப A.V.E! திருமதி ஜெயபாரதி விமலன் அவர்களின் தந்தை

## அமரர் சுப்பிரமணியம் குமாரசுவாமி

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சென்.பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# 19ஆம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 27 |
| ★ | ★ |
| 03 | 11 |
| ★ | ★ |
| 1923 | 1990 |



## அமரர் பொன்.ஐயம்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர், வலந்தலை காரைநகர்)

நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிமாய்ப் பிரகாசிக்கின்ற சூரியபிரகாசம் போலிருக்கும் (நீதிமொழிகள் 4:5)

என்றும் மாறா நினைவுடன்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

11/1 கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (92525)

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் பல வருடங்களாகக் கடமையாற்றியவரும், நண்பருமாகிய இ.மணிவண்ணன் அவர்களின் அன்புத் தந்தை

## மயில்வாகனம் இரத்தினராசா

23.11.2009 திங்கட்கிழமை காலமானார்.
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும்,
ஊழியர்களும்,
11,12 டாட் என்ரபிறைஸ்
நவீனசந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

021 222 3098
021 222 7622 (92523)

# மரண அறிவித்தல்

## இராசையா மகேஸ்வரன்

தாவடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கலைமணி வீதி, கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மகேஸ்வரன் (வவா - தேனு தேநீர்க்கடை உரிமையாளர், கல்வியங்காடு) நேற்று (26-11-2009) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் நிமலன், துவாரகா, தனேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமணி வீதி,
கட்டைப்பிராய். (A)

தகவல்
குடும்பத்தினர்.


# தேவை

விளம்பர நிறுவனம் ஒன்றிற்கு விளம்பரங்களைச் சுவர்களில் (wall Painting) வரையக் கூடியவர்கள் உடனடியாகத் தேவை.
தொடர்பு: 0212264875

# வாகனம் விற்பனை

LX-30 Van உடன் விற்பனைக்கு.
T.P: 0779235856.


# பெற்றுக்கொள்ளவும்

நாவற்காடு, வரணியைச் சேர்ந்த நடேசபிள்ளை பிரியா என்பவரது அடையாள அட்டை (805582057V) மற்றும் ஒரு தொகுதிப் பணம் அடங்கிய கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
தொடர்புகளுக்கு - இல.95, வீரகாளி அம்மன் வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல - 0779672761

## வடமராட்சி கிழக்கு மாணவருக்குக் கருத்தரங்கு

வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தால் யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நாளையும் மறுதினமும் காலை 8.30 மணியில் இருந்து பிற்பகல் 3.30 மணி வரை அம்பன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறும்.

மாணவர்களுக்கு இலவசக் கையேடுகளும் அங்கு வழங்கப்படவுள்ளன. (ஒ-1)

## தாதிய விஞ்ஞானமாணிக் கற்கைநெறி

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தாதிய விஞ்ஞான மாணிபட்டக் கற்கை நெறி 2010/2011 ஆம் கல்வியாண்டுக்கான தெரிவுப் பரீட்சை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார். இப் பரீட்சை கொழும்பில் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-1)

## ஞாயிறன்று நூல் வெளியீடு

டாக்டர் ஆ.பேரின்பநாதன் எழுதிய ''வாழ்வியல் கல்வி'', ''பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்கு''ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ், வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி முகாமையாளர் திருமதி சிவநந்தினி துரைசுவாமி ஆகியோர் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக புவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் வரவேற்புரையினையும், நல்லை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள். பங்குத்தந்தை அருட்தந்தை நீல் ஆம்ஸ்ரோங் ஆகியோர் ஆசியுரைகளையும் வழங்குவர்.

வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், கலாநிதி க.குணராசா, ஸ்கந்த வரோதயா கல்லூரி அதிபர் ஆறு.திரு முருகன், போராசிரியர் வி.சிவசாமி, பேரா சிரியர் மா.சின்னத்தம்பி, முன்னாள் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் - முன்னாள் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம், யாழ். மாவட்ட அரச சார் பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் வழங்குவர். 'பிள்ளைகளின்கல்வி பெற்றோரின் பங்கு' எனும் நூலை திருமதி சிவநந்தினி துரைசுவாமி வெளியிட்டு வைப்பார். இந்நூலுக்கான வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் போராசிரியர் சி.சிவலிங்கராசா நிகழ்த்துவார். வாழ்வியல் கல்வி எனும் நூலை திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டு வைக்க நூலுக்கான வெளியீட்டு [illegible] நிகழ்த்துவார். (ஒ-14)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாடகைக்கு வீடு தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்கு வசதியாக சகல வசதிகளுடனும் கூடிய, அண்ணளவாக 1,600 சதுர அடி பரப்பளவுள்ள, குறைந்த பட்சம் ஐந்து அறைகள், இரண்டு இணைப்புக் குளியலறைகள் உடைய வீடு யாழ். பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதியில் வாடகைக்குத் தேவை (பல்கலைக் கழகத்தில் இருந்து 2 கி. மீ எல்லைக்குள் இருப்பது விரும்பத்தக்கது)

வீட்டை வாடகைக்குத் தர விரும்புவோர் உதவிப் பதிவாளர், நிர் வாகம் அவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 11.12.2009 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் உதவிப்பதிவாளர்/நிர்வாகம் யாழ்.பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் விருந்தினர் விடுதிக்கான வீடு எனக் குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக் கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

(சி/562745) பதிவாளர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குமாரசாமி வைரமணி



மதுரையைப் (இந்தியா) பிறப்பிடமாகவும், கன்னாதிட்டி ,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி வைரமணி நேற்று (26.11.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவகாமி (மதுரைப்பத்தர்) தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சந்தானம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், கஸ்தூரிதேவி, காலஞ்சென்ற கலாதேவி, மற்றும் வாசுகிதேவி, வனஜாதேவி, கதிரவேலு(பாபு), கமலவேணி, புஸ்பலதா, சிவராணி(ஆசிரியை- யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜகோபால், கருணாநிதி, நாகராஜா, மகேஸ்வரன், அம்பிகைபாகன், கருணாகரன், சத்தியபாமா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (92511)

இல 14/6, கன்னாதிட்டி லேன், யாழ்ப்பாணம்.
தொ.இல- 0772720119, 0776450740

தகவல்: கதிரவேலு (பாபு-மகன்)

## திருமதி அத்தனாஸ் செபஸ்தியானா



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியானா நல்லம்மா, 24.11.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய சந்தியாப்பிள்ளை - மரியசலோமை தம்பதியின் மகளும், காலஞ்சென்ற இராயப்பு- அத்தனாசின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகம், மேரியம்மா ஆகியோரின் சகோதரியும், அந்தோனியாப்பிள்ளை, யேசுராசா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), கிறிஸ்தீனம்மா, ஜெயசீலன் (இராசு), ஜெயசீலி (அமெரிக்கா), அடைக்கலமலர், சகாயமலர், காலஞ்சென்றவர்களான மத்தியூஸ், எஸ்.பெரித்தம்மா ஆகியோரின் அருமைத் தாயாரும், பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்), மேசி ஜெய றோசா (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி), காலஞ்சென்ற அன்ரன் மற்றும் அல்போன்ஸ் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், அமெரிக்கா), மரியதாஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (28.11.2009) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, இல 1, ஓடைக்கரை வீதி, குருநகர் இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 1, ஓடக்கரை வீதி, குருநகர்.
தொடர்பு: 021 222 4532, 021 321 4653 (92524)

தகவல்: அ.யேசுராசா (மகன்).

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் குமாரசுவாமி

### (இளைப்பாறிய அதிபர்)

நெடுந்தீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 36/12 செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்டவருமான சுப்பிரமணியம் குமாரசுவாமி நேற்று (26.11.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சிவாகாமி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற தையல்முத்துவின். அன்புக்கணவரும், ஜெயகௌரி (கனடா), ஜெயபாரதி ( ஆசிரியர், நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.த.வி.), ஜெயக்குமார் (நிர்வாக உத்தியோகத்தர், வடக்கு மாகாணம், திருகோணமலை), ஜெயப்பிரகாஷ் (கனடா), ஜெகதீஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சக்திவடிவேல் (கனடா), விமலன் (ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), ஜெயவாணி (ஆசிரியர், திருகோணமலை, செல்வநாயகபுரம் இந்து மகா வித்தி), வாசுகி (கனடா), பாலமுகுந்தன் ( கனடா) ஆகியோரின் மாமனாரும், அஞ்சனா, கௌதமி, அருண் பிரகாஷ், வாரணன், சுபோதனன், பவகேஷன், அஸ்வின், பிரவீன், காவ்யா, தரண்யா ஆகியோரின் பேரனும், கண்மணி, காலஞ்சென்றவர்களான கதிரவேலு, பசுபதி, சோமசுந்தரம், வள்ளியம்மை, குமாரவேலு, மற்றும் முத்துத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற லட்சுமிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, குமாரசுவாமி, சுவாமிநாதன், முத்துப்பிள்ளை கனகசபை, முத்துக்குமாரு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2009) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/12 செட்டித்தெரு,
நல்லூர். (92498)

தகவல்:
மருமகன் கு.விமலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944


# இருதரப்பு தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் தமிழர்களுக்கு ஏதும் இருக்கப்போவதில்லை

ஜனாதிபதி வேட்பாளர்கள் வெளியிடும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அந்த வேட்பாளர்கள் முன்வைக்கும் தீர்வுத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே, இந்தத் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் என அக்கட்சி தெரிவித்திருக்கின்றது.

வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட பின்பே இந்த முடிவு எடுக்கப்படும் என்றும் கூட்டமைப்பு கூறியிருக்கின்றது.

ஆக, தமிழர் தரப்பில் பிரதான கட்டமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு, கட்சி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பாகத் தங்கியிருக்கப் போகின்றது.

ஆனால், இதிலும் ஒரு சிக்கல் இருக்கின்றது. எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகா நிறுத்தப்படுவது உறுதியாகுமானால், அவரிடமிருந்து வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் திட்டவட்டமான தீர்வு நோக்கத்தை உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை எதிர்பார்க்க முடியாது என்பதே யதார்த்த நிலைமையாகும்.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், அவரது அரசையும் உடனடியாக வீட்டுக்கு அனுப்பவும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அடியோடு ஒழிக்கவும், புதிய அரசியல் முறைமை ஒன்றை ஏற்படுத்தவும் வசதியாக ஓர் இடைக்கால ஏற்பாடாகவே ஜெனரல் சரத் பொன்சேகாவை களத்துக்குக் கொண்டு வருகின்றது எதிர்க்கட்சிகளின் கூட்டணி.

அத்தகைய வேட்பாளரிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனையோ, திட்டமோ இருக்கப்போவதுமில்லை. அவர் அத்தகைய திட்டம் எதையும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்போவதுமில்லை என்பது தெளிவு.

மேலும் அத்தகைய தீர்வு யோசனைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் வகையில் நீண்டகாலம் ஜனாதிபதித் கதிரையில் அமர்வதற்கு அவருக்கு இடமளிக்கும் விதத்தில் அவரை எதிர்க்கட்சிகள் இப்பதவிக்குக் கொண்டுவர முயலவில்லை என்பதும் வெளிப்படையானது. எனவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திட்டம் ஒன்றைத் தமது பொதுவேட்பாளர், அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரேரிப்பதற்கு, அவரை அத்தேர்தலில் முன்நிறுத்துகின்ற எதிர்க்கட்சிகளின் கூட்டு அனுமதிக்கப் போவதுமில்லை.

எதிர்க்கட்சிக் கூட்டைப் பொறுத்தவரை, தமது பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் வென்று, பதவிக்கு வந்ததும், தற்போதைய அரசைக் கலைத்துப் புதிதாகக் காபந்து அரசு ஒன்றை ஸ்தாபித்து, புதிய தேர்தல்களை நடத்த வேண்டும், அதேசமயம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து புதிய அரசியல் கட்டமைப்பு ஏற்பாட்டை விரைந்து கொண்டு வருவதற்கு புதிய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே அதன் ஒரே நிலைப்பாடாகும். புதிய பொதுத் தேர்தல் மூலம் வருகின்ற அரசே இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எதிரணியின் பிரதான கட்சிகளின் - தரப்புகளின் - நிலைப்பாடாகவும் உள்ளது.

எனவே, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகள் ஏதும் இருக்கும் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தாம் முன்வைத்த 'மஹிந்த சிந்தனை' தேர்தல் விஞ்ஞாபனமே, இம்முறையும் அப்படியே முன்வைக்கப்படும் என்பதை நேற்று அலரிமாளிகையில் தம்மைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடம் அவரே உறுதிப்படுத்திவிட்டார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை - குறிப்பாக வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை - 'மஹிந்த சிந்தனை'யில் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பாக சிந்திப்பதற்கு ஏதும் இல்லை என்பதுதான் அவர்களின் தெளிவான கருத்து; உறுதியான பட்டறிவு.

தாம் ஜனாதிபதிப் பதவிக்கு வந்தால் மூன்று மாதங்களுக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தென்னிலங்கையின் இணக்கமான கருத்து நிலைப்பாட்டை உருவாக்கி, அதனடிப்படையில் தீர்வுக்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவார் என்று 2005 ஆம் ஆண்டின் இறுதியில் 'மஹிந்த சிந்தனை' என்ற பெயரில் தமது தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழியை மீண்டும் ஒரு தடவை நம்பி ஏமாறுவதற்குத் தமிழர்கள் அவ்வளவு ஒன்றும் முட்டாள்கள் அல்லர் என்பதே உண்மையாகும்.

ஆகவே, தேர்தல் விஞ்ஞாபனங்களைப் பொறுத்தவரை, இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள் விடயத்தில் -

எதிர்க்கட்சிப் பொதுவேட்பாளரிடம் எந்தத் திட்டமும் இருக்கப்போவதில்லை. ஆளுங்கட்சி வேட்பாளரான ஜனாதிபதியிடம் இருந்தும் புதிய திட்டம் ஏதும் வரப் போவதுமில்லை.

எனவே, தேர்தல் விஞ்ஞாபனங்களை வைத்து, யாரை ஆதரிப்பது என்று தீர்மானிக்க ஏதும் தமிழர்களுக்கு இருக்காது என்பதுதான் உண்மை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்காக 'மஹிந்த சிந்தனை' விஞ்ஞாபனத்தை மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டபோது - 2005 இல் - தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கும், கிழக்கும் நிர்வாக ரீதியிலேனும் இணைக்கப்பட்டிருந்தது. அவரது ஆட்சிச் சீத்துவத்தின் கீழ் அது இப்போது துண்டிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில், 'வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கே இனி இடமில்லை' - என்று தெளிவுபடுத்தி விட்டார் ஜனாதிபதி மஹிந்தர்.

அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் உள்வாங்கி முடிவெடுப்போம் என்று கூறும் தமிழ்க் கூட்டமைப்புக்கு அவரின் இந்த நிலைப்பாடு பற்றிய தகவல் சமர்ப்பணம்.

# காலத்தின் தேவை உணர்ந்து உறுதியோடு செயற்பட்டவன் உதயன்



உண்மையை எடுத்துரைப்பதில் உயர்ந்து நின்று பணியாற்றும் ''உதயன்'' பத்திரிகை தனது சேவையின் 24 ஆண்டுகளை வெற்றியுடன் நிறைவு செய்து 25ஆவது வருடத்தில் கால்பதிக்கும் இம் மகிழ்ச்சியான நாளில் நாமும் மகிழ்ந்து உதயனை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

காலத்தின் தேவைகளை உணர்ந்து பல தடங்கல்கள், எதிர்ப்புக்களையும் தாங்கி உண்மையை எடுத்துரைப்பதில் உறுதியோடு செயற்பட்டது உதயன். இலங்கைத் தமிழர்கள் ஒரு கொடூரமான போரைச் சந்தித்துச் சிரமங்களை அனுபவித்து தாங்கொணாத் துயரத்தில் அமிழ்ந்திருந்தவேளை நடுநிலை பிறழாது தனது பணியைச் செய்து தமிழ் மக்களுக்கும் செய்திகளைக் கொடுத்திருக்கின்றது. தொடர்ந்தும் அரசியல் சிக்கல்கள் நிறைந்த இக்காலத்தில் நல்வழி நிலையில் மக்களுக்கு வழிகாட்டும் பணியைத் தொடர்ந்தாற்ற ஆசித்து இதன் வளர்ச்சியில் பங்கெடுக்கும் உதயன் நிர்வாகத்தினர், பணியாளர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ்.ஆயர்,ஆயர் இல்லம்,யாழ்ப்பாணம்.

# வீச்சும் வினைத்திறனும் மேலும் பெருகிடுக!



இன்றைய அதிநவீன அறிவியல் காலகட்டத்திலே இதழியில் ஊடான பணி பல பரிமாணங்களை எடுத்துள்ளது. அவற்றுள் இப்போது முதன்மை இடத்தைப் பிடித்திருப்பது முதன்மையானது ''உயிராபத்து''. இந்தப் படுபாதகமான பரிமாணத்தை எதிர்கொண்டு போராடும் பீனிக்ஸ் பறவைகளாக இன்றைய ஊடகவியலாளர்கள் திகழ்கின்றார்கள். அப்பேர்ப்பட்ட இதழியல் ஊடகப் பறவைகளைத் தன்னகத்தே கொண்ட ''உதயன்'' பத்திரிகை தனது 24ஆவது ஆண்டு நிறைவைக் கண்டு எழுச்சி நடைபோடுகின்றது.

மக்களுக்காகவும் மக்கள் சார்ந்த பிரச்சினைகளுக்காகவும் வாதாடும் இதழியல் வழக்கறிஞர்களாகத் திகழ்வதே மக்களாட்சித் தத்துவப் பத்திரிகையாளர்களின் தனிப்பெரும் பண்பாக இருக்க வேண்டும். அப்படி இருப்பதற்கு அரசுகளும், பொறுப்பு வாய்ந்தவர்களும் உடன்படல் மிகமிக அவசர அவசியமானதாகும்.

உள்ளதை உள்ள வண்ணமே எழுதிப் பிரசுரிப்பது மட்டுமல்லாமல், உரிய தீர்வுகளையும் எடுத்துச் சொல்வதில் ''உதயன்'' நாளிதழ் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெற்றிருக்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பத்திரிகைகளில் உதயனின் தனித்துவம் இதுவே. இலங்கை முழுவதற்குமான நாடளாவிய தமிழ் நாளிதழ்களுக்கும், யாழ்ப்பாண தமிழ் நாளிதழ்களுக்கும் உள்ள சாதக, பாதக விளைவுகளைக் கணக்கிலெடுத்துப் பார்த்தால், உதயன் நாளிதழின் வீச்சும், வினைத்திறனும் நன்றாகவே புலப்படும்; அதுமென்மேலும் பெருகிடுக!

சமூகத்தின் பல்பரிமாணத்தின் உணர்வு பூர்வநிலைகள் சார்ந்த யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழர்களின் ஒற்றுமைப் பாலமாகவே உதயன் உருவெடுத்திருக்கின்றான். ''கூரான கத்தி விளிம்பில் குதிக்கால்களை ஊன்றி நடப்பது போன்ற'' இந்த இதழியல் ஊடகவித்தை கைவரப்பெற்ற உதயனின் பத்திரிகைப் பணிகளை நெஞ்சார வாழ்த்தி, இன்னும் பல்லாண்டு தொடர்ந்து பணி செய்ய இறை ஆசி வழங்கிப் போற்றுகின்றேன்.

அதிவண.அருட்கலாநிதி.டானியல். S. தியாகராஜா
பேராயர், தென்னிந்திய திருச்சபை, தலைவர் அமெரிக்கன் இலங்கை மிஷன்

# கிராமசேவை அதிகாரிகளாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

## ஜனாதிபதி மகிந்த ஆலோசனை

கொழும்பு, நவ. 27

சமுர்த்தி உத்தியோகத்தர்களை கிராம சேவை அதிகாரிகளாக நிய மிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச நிர்வாக மற்றும் பொது நிர்வாக அமைச்சுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அமைச்சரவை அங்கீகாரத்துடன் நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான அனுர பிரியதர்சனயாப்பா தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்திருந்தார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களில் பலர் விவசாய அபிவிருத்தி அதிகாரி களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனையோரை கிராமசேவை அதிகாரிகளாக நியமிப்பதற்கு தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (50)

# சமுர்த்தி நிவாரணம்

யாழ்ப்பாணம், நவ.27

தென்மராட்சி பிரதேச ப.நோ.கூ சங்கக் கிளைகளில் வழங்கப்பட்டு வரும் ஒக்ரோபர்,நவம்பர் மாதங்களுக்குரிய சமுர்த்தி நிவாரணப் பொருள்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

# பொதுநூலகத்தை மாணவர்கள், வாசகர்கள் இடையூறு இன்றிப் பயன்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ். பொது நூலகத்தை மாணவர்கள் வாசகர்கள் இடையூறின்றிப் பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். மாநகர சபை உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வெளி நிகழ்வுகள் பல இதுவரை யாழ். பொது நூலகத்தில் இடம் பெற்றுவந்தன. இதனால் மாணவர்கள், வாசகர்கள் நூலகத்தை முறையாகப் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. இது பொது மக்களிடையே பெரிதும் விசனத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இவ்விடயம் தொடர்பான நிலைமையை விளக்கிய மகஜர் யாழ். மாநகர சபை முதல்வரால் பலாலி இராணுவ தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், அதன் பிரதி யாழ் மாவட்ட அரச அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இதனைத் தொடர்ந்தே தற்போது, மாணவர்கள், வாசகர்கள் நூலகத்தை முறையாகப் பயன்படுத்தக்கூடியவாறு- இடையூறுகள் ஏற்படாத வகையில் பொது நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பணத்திற்கு வருகை தரும் அனைத்து பிரமுகர்களினதும் வரவேற்பு பொதுக்கூட்ட மண்டபமாக யாழ். பொதுநூலகம் மாறிவிட்ட தாகவும் இதனால் இது போன்ற நிகழ்வுகள் இடம்பெறும் போது பொது நூலகத்தில் தமது தேவையை பூர்த்தி செய்து கொள்வதில் சிரமங்களை எதிர் கொள்வதாக மாணவர்களும், வாசகர்களும் விசனம் தெரிவிக்கின்றனர் என்னும் செய்தி கடந்த மாதம் 22ஆம் திகதி உதயனில் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்து. (50-14)

# மாணவருக்கு மூக்குக் கண்ணாடிகள் திங்களன்று விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த மாதம் நடத்தப்பட்ட கண் பரிசோதனையின் போது பங்குபற்றி பார்வையில் குறைபாடு காணப்பட்ட மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் வைத்து மாணவர்களுக்கு விநியோக்கப்படும்.

கைதடி நலன்புரி நிலையப் பாடசாலையில் கடந்த 19 ஆம் திகதி நடத்தப்பட்ட கண்பரிசோதனையில் மூக்குக் கண்ணாடிபெறத் தகுதி பெற்ற பின்வரும் மாணவர்களை பெற்றோருடன் வருகைதந்து பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

ஏ.தினேஸ்குமார், வை. பிரதீபன், எஸ். மரியரொரின்டோ, பி.தாமரைச் செல்வி, கே.தேனுஜா, எம். ஜூஜினா, வை. கோபிநாத்,கே.வித்மன், ரி. சிவகரன். (ஒ-207)

# நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை | 12 | 28.11.2009 |
| | | சனிக்கிழமை |
| திதி: | | ஏகாதசி |
| | | பி.ப.04.50 வரை |
| நட்சத்திரம்: | | ரேவதி |
| | | பி.இ.03.48 வரை |
| [illegible] | | 03.13-04.43 வரை |
| [illegible] | | 09.13-10.43 வரை |

# காலிக் கடலில் கைதான 142 பேரும் பூஸா முகாமில் தடுத்து வைப்பு

கொழும்பு, நவ. 27

சட்ட விரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சித்த நிலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 142 பேரும் பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் விசாரணை நடத்துவதற்காக இரகசிய பொலிஸ் பிரிவைச் சேர்ந்த விஷேட குழுவொன்று நேற்றுக் காலை அங்கு புறப்பட்டுச் சென்றுள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலிய பாதுகாப்பு தரப்பினரால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையரிடம் விசாரணை நடத்துவதற்காகவும் இரகசிய பொலிஸ் பிரிவைச் சேர்ந்த விஷேட குழு வொன்று அந்நாட்டுக்குச் சென்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

சட்ட விரோதமான முறையில் வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் தொடர்பில் கடந்த ஒரு வாரகாலமாக பொலிஸார், விமானப்படையினர் மற்றும் கடற்படையினர் இணைந்து முன்னெடுத்த விஷேட திட்டத்தின் வாயிலாக கடந்த இரு தினங்களில் மாத்திரம் 142 பேர் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் அதற்காகப் பயன்படுத்தப்பட்ட றோலர் படகுகள் நான்கும் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைக்கு உட்பட்டதன் பின்னர் பூஸா தடுப்பு முகாமில் மேலதிக விசாரணைகளுக்காக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் விசாரணை நடத்துவதற்காகவே இரகசியப் பொலிஸ் குழுவொன்று அங்கு சென்றுள்ளது.

உரிய விசாரணைகளின் பின்னர் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்த பொலிஸ் குழு நடவடிக்கை எடுக்கும் என்று இரகசியப் பொலிஸ் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீரால் காணிக்கை தந்தோம்

எமது கல்லூரி உப அதிபர் திரு.கு.விமலன் அவர்களின் அன்பு மாமனார்

### அமரர் சுப்பிரமணியம் குமாரசாமி

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தவருக்கு ஆறுதல் கூறுவதோடு, ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

(92518)


## இன்னும் 04 நாட்கள் மட்டுமே!

அமெரிக்கன் விசாவிற்கான தங்கள் அதிஷ்டத்தை பரீட்சிக்க
உடன் நாடுங்கள்
தங்கள் பாஸ்போட் அளவிலான படத்துடன்
உள்நாட்டு வெளிநாட்டு கடிதங்கள் பொதிகள் சேவையில்
யாழ் நகரில் முன்னணி வகிக்கும்,
Nokia யாழ் மாவட்ட முகவரான

திருமுருகன் கொம் நெற்

259 கே.கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்
46 ஆடியபாதம் வீதி திருநெல்வேலி
T.P No: 021 222 7835



## அன்னை புத்தகசாலை அனுசரணையுடன்

மாபெரும் புத்தகப் பெருவிழா

பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

### கொழும்பு
### காயத்திரி பப்ளிகேஷன்
### மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

**தேடித் தேடி, ஓடி ஓடி வாங்கும்....**

இலகு வழி ஆங்கிலம், இலகு வழி சிங்களம், கட்டுரைக் கனிகள், கல்வி நூல்கள், பாடசாலைப் பாடத்திட்டங்களுக்கு இசைவாக விஷேட நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்கள், கல்விமான்கள் எழுதிய சர்வதேச தரம் வாய்ந்த புத்தகங்களைத் தந்து கொண்டிருக்கும் ''காயத்திரி பப்ளிகேஷன்'' நிறுவனத்தின் பிரமாண்டமான புத்தகக் கண்காட்சி....

பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நூல் அறிமுகம் எதிர்வரும் ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

அனுமதி இலவசம்

கழிவு 30% வரை

இடம்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
காலம்: நவம்பர் 29, 30, டிசெம்பர் 1
நேரம்: காலை 8 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை.

(சி/562749)


## கைதடி வாசிக்கு
# ரூ.30 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்.நவ.27

அனுமதிப்பத்திரமின்றி வீட்டில் கள்ளு வைத்திருந்த கைதடிவாசி ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரித்திணைக்களத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்தநபர் ஏற்கனவே நீதிமன்றில் அபராதத் தொகை செலுத்தியமை நீதிவானின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதை அடுத்து அவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து, அபராதத் தொகை செலுத்தத் தவறின் 30 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-207)

# விபத்தில் வர்த்தகர் மரணம்

யாழ்ப்பாணம்.நவ.27

கல்வியங்காடு, 3ஆம் கட்டைப் பகுதியில் நேற்றிரவு 7 மணிக்கு இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் வர்த்தகர் ஒருவர் மரணமானார்.

கல்வியங்காட்டில் குளிர்பான நிலையம் நடத்திவரும் கலைமணி வீதி, கட்டைப்பிராயைச் சேர்ந்த ஆர்.மகேஸ்வரன் (வயது-56) என்பவரே மரணமானவராவார்.

கடையைப் பூட்டிவிட்டு வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அவர் தலையில் படுகாயம் அடைந்தார்.

யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்ட போது அவர் மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது. சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-1-78)

# கோப்பாய் - கைதடிப் பாலம் அமைக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பானம்- நவ,27

கோப்பாய் - கைதடி இரும்புப்பாலம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு இப் பாலம் அமைப்பதற்குரிய இரும்புத்தூண்கள், 'கேடர்'கள் போன்றவை கொண்டுவரப்பட்ட போதிலும் தற்பொழுது பாலம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப் பாலத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பாதையூடாகவே தற்போது போக்குவரத்து இடம்பெற்று வருகிறது.

இந்தப் பாலத்தைத் திருத்துமாறு உதயனில் செய்தி வெளியாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

## மாற்று ஆற்றலுள்ளோர் வாரம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.27.

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 3ஆம் திகதி வரை மாற்று ஆற்றலுள்ளோர் வாரம் கொண்டாடப்படவுள்ளது.

''உட்படுத்தல் கல்வி மூலம் சம கல்வி வாய்ப்பை ஏற்படுத்துவோம்'' என்ற தொனிப்பொருளில்இவ்வாரம்கொண்டாடப்படவுள்ளதுடன் போட்டிகள், கலை நிழச்சிகள், விழிப்புணர்வுச் செயற்பாடுகள் என்பன இடம் பெறவுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் 5ஆம் திகதி வலிகாமம் கல்வி வலயத்தின் மாற்று ஆற்றலுள்ளோர் தின விழா [illegible] கல்லூரியில் நடைபெறும். (ஒ-38)


## மக்கள் வங்கி வழங்கும்
## "சிசு உதான புலமைப் பரிசில்கள்"

### 2009 இன் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய பிள்ளைகளுக்கு

- உங்கள் மகன் அல்லது மகள் 2009 இன் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்களா?
- உங்கள் பிள்ளைக்காக ''சிசு உதான'' அல்லது ஏதேனும் ஓர் சிறுவர் கணக்கினை மக்கள் வங்கிக் கிளையில் அல்லது சேவை நிலையத்தில் 2009 ஓகஸ்ட் 23 இற்கு முன் ஆரம்பித்துள்ளீர்களா?
- ஆரம்பித்த கணக்கின் மிகுதி 2009 ஓகஸ்ட் 23 இற்கு முன் ரூ.500க்கு அதிகமாகியுள்ளதா?

இவ் வினாக்களுக்கான விடை ''ஆம்'' எனின், இன்றே உங்கள் பிள்ளையின் கணக்கினை பராமரித்துவரும் மக்கள் வங்கிக் கிளையினை அல்லது சேவை நிலையத்தினை நாடி, ''சிசு உதான'' புலமைப் பரிசில் விண்ணப்பப் படிவம் ஒன்றை வங்கி முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி 2009 டிசெம்பர் 04.

சகல மாவட்ட ரீதியில் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் மற்றும் 5ஆம் இடங்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை

துரிதசேவை:
011-2481531, 011-2481553




மக்கள் வங்கி
சிசு உதான
சிறந்த எதிர்கால சந்ததியினர்

நிபந்தனைகளுக்குட்பட்டது
மக்கள் வங்கியின் சிசு உதானவுடன் என்றும் வெல்லுங்கள்!

2008 2009 2009 www.peoplesbank.lk

(சி/562728)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05★07★1925

மறைவு:
19★11★2007

திருமதி
### இராமசாமி சிவக்கொழுந்து

திதி:- நவமி (27.11.2009)

எங்கள் அன்புத் தெய்வமே, அம்மா!
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்களது பாச நினைவுகள்
எங்களது மனங்களை விட்டு அகலா
உங்களது ஆத்மா சாந்தியடைய அருள் வேண்டி
எல்லாம்வல்ல கற்பகப் பிள்ளையார் பாதம் பணிகின்றோம்.

அம்பிகை அமுதம்,
செல்லப்பா வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 10 | 27 |
| 09 | 11 |
| 1939 | 2000 |

அமரர்
### ஆறுமுகம் சண்முகநாதன்
(இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி)

நவ ஆண்டு போனதையா உன்முழுமதி முகங்கண்டு
முந்தையர் மண்ணுன்னை முழுமூச்சாய் தேடுதையா
ஏன் எமை விட்டகன்று எட்டாத இடம்சென்றாய்?
ஏந்தலே உன்னினைவை எப்படி மறப்போம்?

மாண்புறும் உன்னுடலும் இராணுவ வாகனத்தால்
மண்மீது சாய்ந்ததுவோ மறுகி நாம் நிற்கின்றோம்
மாண்புடைய பாரதத்தில் மன்னுயிரும் பிரிந்ததுவோ?
மறுபிறப்புத் தனிலேனும் வருவாய் எம்முடனே

ஆண்டுகள் பல ஆனாலும் ஆறாத் துயருடனே
அழுதழுது நிற்கின்றோம் ஆறுதலைத் தாராயோ?
மீண்டொருகால் வாராயோ மிகை மகிழ்வு தாராயோ?
வேண்டுகின்றோம் ஈசனிடம் விடையருளிச் செய்யாயோ?

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்

## மரண அறிவித்தல்கள்

### கெங்காதரன் புவனேஸ்வரி

உடுப்பிட்டியைச் சேர்ந்த கெங்காதரன் புவனேஸ்வரி 25.11.2009 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

### இராஜேந்திரம் கனகம்மா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் கனகம்மா நேற்று (26.11.2009) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் இராஜேந்திரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராஜா, காலஞ்சென்ற சபாரட்ணம், மற்றும் வில்வராஜா (அவுஸ்திரேலியா), கனகரட்ணம்(லண்டன்), செல்வரட்ணம் (லண்டன்), ஜெயரட்ணம்(லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் ரூபாவதி, பற்றிசியா, புஸ்பா, சாந்தி, விக்கி, காலஞ்சென்ற விமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.11.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 5 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12/3,வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(92526)

தகவல்: பேரப்பிள்ளைகள்,
திரு.திருமதி.நிமல்- அனுஷா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டுக்கான கலாபூஷணம் விருதுக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 17 பேர் தெரிவு

## டிசெம்பர் 15ஆம் திகதி விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இவ்வாண்டுக்கான கலாபூஷணம் விருதுக்கு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 17 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கலைஞர்களுக்கான விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொழும்பு - 7, ஆனந்தக்குமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் டீ.சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கலாபூஷணம் விருது பெறவுள்ளோரின் பெயர் விவரம் வருமாறு:

கந்தையா குணராசா (நீராவியடி, யாழ்ப்பாணம்), வேலுப்பிள்ளை குமாரசாமி (பெரிய அரசடி, சாவகச்சேரி), செல்லப்பா நடராசா (அளவெட்டி வடக்கு, அளவெட்டி), முடியப்பு அருள்பிரகாசம் (நல்லூர், யாழ்ப்பாணம்), சங்கரப்பிள்ளை புவனேஸ்வரன் (கந்தர்மடம், யாழ்ப்பாணம்), வயிரமுத்து இராசையா (புலோலி வடக்கு, புலோலி), சந்தியா தேவசகாயம் (13 ஆம் வட்டாரம், நெடுந்தீவு கிழக்கு), சிங்கராயர் செபமாலை (சென்.மேரிஸ் வீதி, பண்டத்தரிப்பு), குருநாதன் பொன்னுத்துரை (முதலாம் வட்டாரம் மேற்கு, நெடுந்தீவு), கம்பன் சற்குருநாதன் (மயிலங்காடு, சுன்னாகம்), உருத்திராபதி இராதாகிருஷ்ணன் (இணுவில் கிழக்கு, இணுவில்), சின்னத்தம்பி பாலசிங்கம் (மூளாய், சுழிபுரம்), நல்லரசு முருகானந்தம் (கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்), பொன்னையா சிவகுருநாதன் (பொன்னாலை, சுழிபுரம்), நாகர் செல்லமுத்து (கொக்குவில் கிழக்கு, கொக்குவில்), ஆசை இராசையா (நல்லூர், யாழ்ப்பாணம்), கோவிந்தபிள்ளை வேலுப்பிள்ளை (புலோலி மேற்கு, பருத்தித்துறை). (50)

## லயன்ஸ் கழகத்தின் சேவைத்திட்ட முகாம்

யாழ்ப்பாணம், நவ.27

தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் சேவைத்திட்ட முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்சேவைத்திட்ட முகாமில் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், கண்பரிசோதனை, நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் சலம், இரத்தப் பரிசோதனையும் மருந்து வழங்கலும் ஆகிய பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன. அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய கலாநிதிகளால் நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளன. (50-201)

## கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், நவ.27

திருமறைக்கலாமன்றத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் 2009ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா நாள்ள சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் இ.ஓங்காரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்.புனித பத்திரியார் கல்லூரியின் அதிபர் அருள் பணி ஜெறோ செல்வநாயகம் அடிகள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வரவேற்புரையை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரும், அதிபர் அறிக்கையை கலைத்தூது அழகியல் கல்லூரியின் அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரையும் வழங்குவார்கள்.

நிகழ்வில் பரிசளிப்பு நிகழ்வுடன் கலை நிகழ்வுகளாகத் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் நடனங்கள், பாட்டு ஆகியவற்றுடன் செல்வி காயத்திரி இராசையாவின் மோகினி ஆட்டம், செல்வன் ஸ்ரீ கண்ணனின் நிருத்தியா அர்ப்பணம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (50-23)

## விசேட தேவையுடைய மாணவருக்கான முகாம்

யாழ்ப்பாணம், நவ.27

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாம் நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களையும் அவர்களுடைய பெற்றோரையும் தவறாது இம்முகாமில் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம் அறிவித்துள்ளார். (50-201)

## முப்பது வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத பொன்னையா வீதி

### மழை காலத்தில் வெள்ளத்தில் மூழ்குகின்றது

வலி. மேற்கு, நவ. 27

சித்தங்கேணி - காரைநகர் பிரதான வீதியில் இருந்து வழக்கம்பரை கேணிக்கரை வீதியை இணைக்கும் 600 மீற்றர் நீளமான வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பொன்னையா வீதி (சிவன் வீதி) 30 வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் மழைக் காலங்களில் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது.

அப்பகுதியில் உள்ள மக்கள் கட்டட இடிபாடுகள் மற்றும் கற்களைப் போட்டு தம்மால் இயன்றளவு குழிகளை மூடி தமது போக்குவரத்துப் பாதைய்யைத் தாமே தற்காலிகமாக சீர்செய்து வருகின்றனர்.

இப்பகுதி மக்களின் அவல நிலையினைக் கருத்திற் கொண்டு தற்போது [illegible] 'வடக்கின் வசந்தம்' இந்த வீதியிலும் வீச சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(50-112)



## போரினால் பெற்றோரை இழந்த மாணவருக்கு யாழ். இந்துக் கல்லூரிச் சமூகம் உதவி

யாழ்ப்பாணம்,நவ.27

போரினால் பெற்றோரை இழந்து யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியுள்ள மாணவர்களுக்கான கற்றல் வசதிகளை வழங்க யாழ். இந்துக் கல்லூரிச் சமூகம் முன்வந் துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் முதலில் 50 மாணவர்கள் பொறுப்பேற்கப்பட்டு அவர்களுக்கான விடுதிவசதி, உணவு வசதி கற்றலுக்குரிய ஏனைய அடிப்படை வசதிகள் என்பன செய்து கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியுதவியை வழங்க யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளையினர் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்தினால் பெற்றோரை இழந்து எதிர்காலம் பற்றிய வெறுமைகளோடு இருக்கும் மாணவர்களுக்கு யாழ். இந்துவின் முன்மாதிரியான செயற்பாடு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாகப் பொதுமக்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (50-04)

## உடுப்பிட்டிப் பகுதிக்கு ஒரு வாரமாக வலுக்குறைந்த மின்சார விநியோகம்

வடமராட்சி, நவ. 27

வலுத்தன்மை குறைந்த மின்விநியோகத்தால் கடந்த ஒருவாரமாக வடமராட்சி, உடுப்பிட்டி, இமையாணன் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

இமையாணன் வடக்கு, விழுந்தாலடி, புறாப்பொறுக்கி, ஆலடி உள்ளிட்ட பகுதிகளிலேயே இவ்வாறான வலுக்குறைந்த மின் விநியோகம் கடந்த ஒருவாரமாகக் காணப்படுகின்றது. இதனால் இரவுவேளைகளில் மங்கிய மின்விளக்கொளியில் மாணவர்கள் குறிப்பாக சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் படிக்கமுடியாது சிரமப்படுவதாகவும், பகல் மற்றும் இரவு வேளைகளில் கணனி, மின் மோட்டர் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்களை இயக்க முடியாதிருப்பதாகவும் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

அண்மைக்காலம் வரை சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையில் திடீரென வலுக்குறைந்த மின் விநியோகம் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்படுவதற்கான காரணம் தெரியவில்லை எனவும், சீரற்ற மின்சாரத்தால் தமது இலத்திரனியல் உபகரணங்கள் பலவும் பழுதடைவதாகவும் ஏறக்குறைய 350 குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் பொதுமக்கள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-236)

## புலமைப்பரிசில் மாணவரைக் கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.27

சுன்னாகம் பிரிவு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 மதிப்பு எண்களுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் பிரிவு லயன்ஸ் கழகத் தலைவர் லயன் என்.சண்முகவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் முதலாவது உதவி மாவட்ட ஆளுநர் 306 பி-2 லயன் எஸ்.ஜெயவத்சலன் எம்.ஜே.எவ், லயன்ஸ் சீமாட்டி ஷயந்தினி எம்.ஜே.எவ். ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக லயன்ஸ் கழகத்தின் இரண்டாவது உதவி மாவட்ட ஆளுநர் 306 பி-1 லயன் பிலியந்த பெர்னான்டோ எம்.ஜே.எவ், மாவட்ட இணைப்பாளர் (கல்வி) லயன் எஸ்.சிறிநிவாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும், பாராட்டுரையை உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் வழங்கவுள்ளனர். (50-201)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்




சண்டிலிப்பாய்ப் பிர்தேச செயலகத்தினால் ஆனைக்கோட்டையில் நடத்தப்பட்டு வந்த தொழிற் பயிற்சி நிலையத்தின் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இதில் சமூக சேவை, சமூகநலத்துறை அமைச்சின் பணிப்பாளர் கே.கோணேஸ்வரன் உரையாற்றுவதையும், அருகில் ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் நிஷாந்தன், செயலக உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும், பயிற்சியை முடித்துக் கொ[illegible]ட மாணவர்களையும் [illegible]ங்களில் காணலாம். (50-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.unionb.com

முழுவாழ்வும் பயன்பெறுவதற்கு

# நாம் யாழ்ப்பாணத்திற்கு



வளமான நிலத்தில், வளமான மண்ணில் பயன்தரும் அறுவடையைப் பெற்றுக்கொள்கின்ற, மன உறுதியோடு வாழ்க்கையை வெற்றிகொள்கின்ற மக்கள் வாழும், யாழ்ப்பாணம் நகருக்கு மேலும் மேலும் நன்மைகளை சேர்ப்பதற்காக யூனியன் வங்கி யாழ்ப்பாணம் நகருக்கு வருகின்றது. அனைத்து வித வங்கி வசதிகளோடும் இன்று திறக்கப்படவுள்ள எமது யாழ்ப்பாணம் கிளைக்கு வாருங்கள்!

இல 62/17, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 2224567/8

யூனியன் வங்கி

## பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம்,நவ.27

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் மின் இணைப்பு, பிளம்பிங், தையல் ஆகிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகளில் சேர விரும்புவோர் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளு மாறு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளத் தலைவர் அறிவித்துள்ளார். (50-201)

## யாழ்.பல்கலைக்கழக ஹொக்கி அணி கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், நவ.27

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே கொழும்பில் நடைபெறவுள்ள ஹொக்கிப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.பல்கலைக்கழக ஹொக்கி அணி நேற்று கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றது. (50-23)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.27

தீவகம், வேலணை கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை மேற்படி வலயக் கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளு மாறு அவர் கேட்டுள்ளார். (50-201)

## இடம்பெயர்ந்த மக்களுக்கான சட்ட ஆவணங்களைப் பதியும் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், நவ.27

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் கடந்த மற்றும் அண்மைக் காலங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச சட்ட ஆவணங்களைப் பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நடமாடும் சேவை எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே இச்சேவையில் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு மனிதநேய அமைப்புகளின் மாவட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார். (50-201)

## மத்திய வங்கி ஆளுநர் யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், நவ.27

யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 30ஆம் திகதி வருகைதரும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், யாழ். மாவட்ட வர்த்தகப் பிரமுகர்கள், வங்கியாளர்களுடன் நாவலர் கலாசார மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அத்துடன் நெல்லியடி, மானிப்பாய் செலான் வங்கிக் கிளைகளின் திறப்பு விழா நிகழ்விலும் பிரதம விருந்தினராக ஆளுநர் கலந்து கொள்ளவுள்ளார். (50-14)

## மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு தோல் நோய்

நவாலி, நவ.27

வன்னியில் இருந்து வந்து மானிப்பாய் பிரதேசத்தில் தங்கியுள்ள மக்கள் பலர் தோல் நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் அநேகமானவர்கள் மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-100)

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்தும்

ROTARACT CLUB

2009ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான

## மாபெரும் இலவசக் கருத்தரங்கு

இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம்

* அனுமதி இலவசம்
* கொழும்பு முன்னணி பாடசாலைகளின் மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம்.

சனி 28-11-2009

| பாடம் | ஆசிரியர் | நேரம் |
|---|---|---|
| விஞ்ஞானம் | டார்வின் | 8.30 மணி |
| கணிதம் | சிறிதரன் | 1.00 மணி |

ஞாயிறு 29-11-2009

| பாடம் | ஆசிரியர் | நேரம் |
|---|---|---|
| ஆங்கிலம் | செல்வா | 8.30 மணி |
| தமிழ் | ரமேஷ் | 1.00 மணி |

அனுசரணை: பூமா விளையாட்டுக் கழகம் துர்க்காபுரம், தெல்லிப்பழை. (92509)

## இலவச கண்சிகிச்சை முகாம்

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழத்தினரால் நாளை (28.11.2009) சனிக்கிழமை காலை 7 மணிக்கு கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள யாழ். மத்தி சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச கண் சிகிச்சையும் கண்ணாடி வழங்கலும் கண் மருத்துவ நிபுணர் எஸ். குகதாசன் அவர்களால் நடத்தப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம்.

(சி/582737)

## யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்,

பருத்தித்துறை

தரம் - 6 புதிய அனுமதி

2010ஆம் ஆண்டில் தரம் 6இற்கு புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தினை அலுவலகத்தில் பெற்று 10-12-2009இற்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர்,
யா/வேலாயுதம் ம.வி.

(சி/582733)

## காணி விற்பனைக்குண்டு

நெல்லியடி, திருமகள் சோதி ஒழுங்கை நவிண்டிற் குறிச்சியில் 3 ¼ பரப்புடைய வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0774084859, 0776055548

(பொன்னையா ஏகாம்பரராசா)

(90871)

## பாலன் மில்

தேங்காய் எண்ணெய்
நல்லெண்ணெய் } ஆலை

கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்ததும்) சூரியகாந்திவிதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோவரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெயாக உடன் ஊற்றித் தரப்படும். நாடவேண்டிய ஒரே இடம் பாலன் மில், மாவடிச்சந்தி, வட்டுக் கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விற்பனை விலை அரச அதிபரால் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விற்பனை விலைகள் யாழ்.அரச அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்கள் தீர்மானிக்கப்பட்ட விலைகளிலேயே விற்பனை செய்யப்பட வேண்டும் என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அந்தப் பொருள்களின் விற்பனை விலை விவரம் வருமாறு:-

சம்பா அரிசி-70 ரூபா, தீட்டல் பச்சை - 65 ரூபா, வெள்ளைப் பச்சை- 65 ரூபா, சீனி-80 ரூபா, பருப்பு (சிவப்பு, மஞ்சள்) -140 ரூபா, செத்தல் மிளகாய்-195 ரூபா, வெள்ளைப்பூடு - 200 ரூபா, வெங்காயம் (பெரியது) - 65 ரூபா, வெங்காயம் (சிறியது)-75 ரூபா, உருளைக்கிழங்கு-65 ரூபா, சகல முழு ஆடைப்பால்மா வகை - 400 கிராம் - 225 ரூபா, ஒரு கிலோ கிராம் - 550 ரூபா, 100 கிராம்-56 ரூபா 25 சதம்.

இலங்கை தரக் கட்டுப்பாடு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்படாததும், எஸ்.எல்.எஸ். முத்திரை பொறிக்கப்படாததுமான பி.விசி குழாய்கள் மற்றும் உருக்குக் கம்பி வகைகள் விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடு கிடைத்துள்ளது எனவும் அவ்வாறு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக பாவனையாளர் அதிகாரசபை அலுவலர்களால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-204)

## மாநகரசபை உறுப்பினர்களுடனான ஒன்றுகூடல் வவுனியாவில்

நல்லூர்,நவ.27

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் பங்கு கொள்ளும் கலந்துரையாடல் ஒன்றுகூடல் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் உள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் மாநாட்டு மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு இந்த ஒன்றுகூடல் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு முதல்வர்,பிரதி முதல்வர், உறுப்பினர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (50-111)

## மோ.சைக்கிள் திருத்தும் தொழிற் பயிற்சி நெறி.

நவாலி,நவ.27

சர்வோதய நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட சர்வோதய நிறுவனத்தினால் மோட்டார் சைக்கிள் திருத்தும் தொழிற் பயிற்சி நிலையம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி சங்கானையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆறு மாத காலத்துக்கு நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறியில் 18 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட வறுமைக் கோட்டுக்குட்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-201-100)

# மீளக் குடியமர்ந்தோர்களுக்கு உதவிகள் கிடைப்பதை உறுதி செய்யுமாறு அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணம் மற்றும் உதவிக் கொடுப்பனவு விடயங்களுக்கு அந்தந்தப் பிரிவுகளின் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கிராம அலுவலர்கள் முழுப் பொறுப்பும் உடையவர்கள் என யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளவர்களின் நலன்களைக் கவனிப்பது தொடர்பாக விடுத்துள்ள அறிவித்தலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நலன்புரி முகாம்களில் இருந்து வந்து மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு உலர் உணவு நிவாரணம், அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தால் வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு, உலர் உணவு அல்லாத பொருள்கள் விநியோகம் என்பவற்றில் அதிக கவனம் எடுத்து அவை மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்து கொள்ளுமாறு அரச அதிபர் அந்த அறிவித்தலில் தெரிவித்துள்ளார். (50-68)

## காவலரண்கள் நகரப்பகுதிகளில் அகற்றப்படுகின்றன; கிராமப்புறங்களில் புதிதாக முளைக்கின்றன

சண்டிலிப்பாய்,நவ.27

யாழ்.மாவட்டத்தில் நகர்ப்பகுதிகளில் இராணுவத்தின் காவலரண்கள் நாளுக்கு நாள் அகற்றப்பட்டு வரும் அதே நேரத்தில் புதுப்புது காவலரண்கள் கிராமப்புறத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

வீதிக்கு வீதி, சந்திக்குச்சந்தி அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடிகள் அகற்றப்படுவதுடன் படையினரால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சோதனை நடவடிக்கைகளும் தளர்த்தப்பட்டு, வீதித்தடைகளும் அகற்றப்படுகின்றன. சில இடங்களில் காவலரண்கள் அகற்றப்பட்டும் சில பின்னகர்த்தப்பட்டும் வந்தன. இது குறித்து மகிழ்ச்சியடைந்த மக்கள் அச்சமின்றி நடமாடி வருகின்றார்கள்.

இந்த நிலையில் அகற்றப்பட்ட காவலரண்களுக்குப் பதிலாக புதிய காவலரண்கள் நாளுக்கு நாள் அமைக்கப்பட்டு வருகின்றன. தாவடி, மானிப்பாய் வீதியில் தாவடித்தோட்ட வெளியிலுள்ள அரிசியாலை இயங்கிவந்த கட்டடத்தில் இராணுவக் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல் சுதுமலை-இணுவில் வீதியில் பாலாவோடை என்ற இடத்தில் சலூன் இயங்கிவந்த கட்டடத்திலும் இராணுவக் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டுவரும் புதிய காவலரண்களினால் அச்சமின்றி நடமாடிய மக்களுக்கு ஒருவித பீதி ஏற்பட்டுள்ளது. (50-115)

## கணக்காய்வாளர் நாயகம் யாழ்ப்பாணம் வருகிறார்

நல்லூர்,நவ.27

கணக்காய்வாளர் நாயகம் கே.சுவர்ண ஜோதி எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளார்.

அன்றைய தினம் பிற்பகல் 2.45 மணிக்கு யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்களைச் சந்தித்து அவர் கலந்துரையாடவுள்ளார்.

யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு மாநகர முதல்வர் அறிவித்துள்ளார். (50-111)

## வலி.வடக்கில் மீளக்குடியமர்வது தொடர்பான கூட்டம் திங்களன்று

### நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

வலி.வடக்கில் மீளக் குடியேற விரும்புவோருக்கான கூட்டத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலி.வடக்கு மீள் குடியேற்றம் புனர்வாழ்வுக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஆ.சி. நடராசா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ். முரளிதரன் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

(50-201)

## ஆத்மா எங்கே இருக்கிறது?

ஞானக்கதிர்

ஆத்மா என்பது எங்கே இருக்கிறது? ஆத்மா அழிவில்லாதது என்று கூறுகிறார்கள். அப்படியானால் அழியக்கூடிய உடம்பில் அது எங்கே இருக்கிறது? உடல் அழிந்தபின் அது எங்கே போகிறது?

ஆத்மா பிறப்பதோ உடம்பில் இறப்பதோ இல்லை. அதனால் அது அழிவு இல்லாதது. ஒரு பூ தோன்றுகிறது. பிறகு அது மலர்ச்சி பெறுகிறது. பிறகு வாடுகிறது. கடைசியில் உதிருகிறது. இதுவே நமது உடலுக்கும் பொருந்தும். அதிலும் தோற்றம், வளர்ச்சி, வாட்டம், முடிவு எல்லாமே உண்டு. ஆகவே பிறப்பு, இறப்பு என்ற இரண்டு எல்லைகளுக்கிடையே மாற்றம் உண்டாகக்கூடிய எதுவும் அழியக்கூடியதுதான். இந்த இரண்டு எல்லைகளுமே இல்லை என்றால் மாற்றமும் கிடையாது; அது அழிவில்லாதது; இந்த அடிப்படையில் உடல் அழியக்கூடியது ஆத்மா அழிவில்லாதது.

குயவன் பானையைச் செய்கிறான். அப்போது பானை உருவெடுக்கிறது. உள்ளே காற்றும் நிறைந்து இருக்கிறது. பானைக்கு வெளியேயும் காற்று இருக்கிறது. பானை உண்டான பிறகு காற்று உள்ளே நிறைந்தது. ஆனால் அதைக் குயவன் உண்டாக்கவில்லை. பானை உடையலாம். ஆனால் உள்ளே உள்ள காற்று அழிவதில்லை. பானைக்குள்ளே இருந்த காற்று பானைக்கு வெளியில் உள்ள காற்று வெளியுடன் கலந்து விடுகிறது. பானை உருவாகி மறைகிறது ஆனால் அதனுள்ளே இருக்கும் காற்று உருவாவதும் இல்லை, மறைவதும் இல்லை.

ஆத்மா நமது அழியக்கூடிய உடம்பினுள் இருக்கும் என்பது அழியாத உண்மை. அது நம்முடைய உடம்புக்கு உள்ளேயும் வெளியேயும் முன்னும் பின்னும் தொடர்ந்து இருக்கிறது. பானைக்கு உள்ளேயும் வெளியேயும் அது தோன்றுவதற்கு முன்பும் பின்பும் தொடர்ந்து இருக்கும் காற்றைப்போல.

சுவாமி சின்மயானந்தா
(கீத ஞக்ஞ உரையிலிருந்து)

## வடக்கின் வசந்தம் திட்டப் பணிகளுக்குச் செல்லும் அரச ஊழியர்களுக்கு இலவச பயண வசதி

யாழ்ப்பாணம், நவ.27

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வெளிமாவட்டம் செல்லும் அரச அதிகாரிகள், அலுவலர்களுக்கு இலவச பஸ் பயணம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இந்த விசேட உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

வவுனியாவில் இருந்து இருவழி பயணத்திற்கு இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வவுனியாவில் இருந்து ஓமந்தை, மாங்குளம், வவுனியா, மல்லாவி செல்வதற்கும் அங்கிருந்து மீள திரும்புவதற்குமே இலவச அனுமதி இன்று முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி ஊடாக மல்லாவி, வவுனியா ஆகிய பிரதேசங்களுக்கு அரச அதிகாரிகள், அலுவலர்கள் அடையாள அட்டையைக் காண்பித்து இலவசமாகப் பயணம் செய்வதற்கும் அனுமதிக்கப்படும் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி அறிவித்துள்ளார்.

(ஒ-302)



நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ஆயுள் காப்புறுதி நிறுவனத்துக்கு விஜயம் செய்தார். அங்கு அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்தியத் தூதுவரை ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எஸ்.ஜெகன்நாத் அழைத்து வருவதை முதல் படத்திலும் தூதுவர் மங்கள விளக்கேற்றுவதையும், ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் செயற்றிட்டங்களை பிரதம நிறைவேற்று அதிகாரி தூதுவருக்கு விளக்குவதையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் கணேஸ்பாபு, கிளை முகாமையாளர் எஸ்.ராகீஸ்வரன், பிராந்திய விற்பனை ஒருங்கிணைப்பாளர் பி.கோபிதாசன் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர்.

(படங்கள்: அனு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இறுதி மாதிரி வினாத்தாள்கள் - தொகுதி I

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

# விஞ்ஞானம் - I


**34-T-I**

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. இயற்கைமுறைப் பாகுபாட்டின் சிறப்பம்சங்கள் எனக் கருதப்படுவது,
 1) உயிரங்கிகளின் எல்லா இயல்புகளும் கவனத்தில் கொள்ளப்படும்.
 2) கூர்ப்பு நடைபெற்ற முறையை எடுத்துக் காட்டும்.
 3) உயிரங்கிகளுக்கு இடையிலான உண்மையான தொடர்புகளைக் கொண்டிருக்கும்.
 4) மேற்கூறிய யாவும் சரி.

02. பின்வருவனவற்றுள் பூக்காத தாவரம் எது?
 1) ஜிம்னேஸ்பேர்ம். 2) பிரயோபைற்றா.
 3) தெரிடோபைற்றா. 4) யாவும் சரி.


03. நெம்புகோல்களின் அடிப்படையில் பொறிகள் காட்டப்பட்டுள்ளன.




 மேற்படி நெம்புகோல்களின் வகை A, B, C முறையே,
 1) 2 ஆம் வகை, 3ஆம் வகை, 1 ஆம் வகை.
 2) 2 ஆம் வகை, 3ஆம் வகை, 2 ஆம் வகை.
 3) 1 ஆம் வகை, 2ஆம் வகை, 3 ஆம் வகை.
 4) 3 ஆம் வகை, 2ஆம் வகை, 1 ஆம் வகை.

04. W என்ற மூலகத்தின் வலுவளவு +2. அது உண்டாக்கக்கூடிய சேர்வைகளின் குறியீடுகளை சரியாகக் காட்டுவது?
 1) $WSO_4, W(NO_3)_2, WO$ 2) $W_2CO_3, W_2O, W(OH)_2$
 3) $W_2SO_4, W_2O, W_2CO_3$ 4) $W(NO_3)_2, WCl, WO$

05. தாவர இழையம் ஒன்றின் படம் தரப்பட்டுள்ளது. படத்தில் தரப்பட்ட பகுதியை இனங்காண்க.
 1) புடைக்கலவிழையம்.
 2) ஒட்டுக்கலவிழையம்.
 3) வல்லருக்கலவிழையம்.
 4) காழ் இழையம்.




06. $6CO_2 + \boxed{A} \xrightarrow[\text{சூரிய ஒளி}]{\text{பச்சையம்}} \boxed{B} + 6O_2$

 உயிரங்கி ஒன்றில் நடைபெறும் உயிர்ச்செயன்முறை மேலே காட்டப்பட்டு உள்ளது. A, B என்பவற்றில் இடப் பொருத்தமான பதம் பின்வருவனவற்றுள் எது?
 1) நீர், குளுக்கோசு. 2) குளுக்கோசு, நீர். 3) ஒட்சிசன், நீர். 4) நீர், ஒட்சிசன்.

07. தாவரங்களில் கொண்டுசெல்லல் செயன்முறை இரு முறைகளில் நடைபெறும். இவற்றில் உயிர்ப்பு கொண்டுசெல்லல் ஒரு முறையாகும். பின்வருவனவற்றுள் எது உயிர்ப்பற்ற கொண்டுசெல்லல் ஆகும்?
 1) திணிறப் பாய்ச்சல். 2) பிரசாரணம்.
 3) பரவல். 4) யாவும் சரி.

* குருதிச்சுற்றோட்டத்தொகுதியின் மாதிரி அமைப்பைப் படம் காட்டுகிறது. அதனைப் பயன்படுத்தி 8ஆம், 9ஆம், 10ஆம் வினாக்களுக்கு விடை தருக.




08. படத்தில் A, B எனக் குறிப்பிடப்படுபவை முறையே,
 1) வலது இதயவறை, இடது சோணையறை.
 2) இடது இதயவறை, வலது சோணையறை.
 3) வலது இதயவறை, இடது இதயவறை.
 4) இடது இதயவறை, வலது இதயவறை.


09. C எனக் குறிப்பிடப்படுவது,
 1) ஈரல் நாளம். 2) ஈரல்வாயி நாளம்.
 3) ஈரல் நாடி. 4) குழிக்குடல் நாடி.

10. D, E எனக் குறிப்பிடப்படுவது,
 1) சுவாச நாடி, சுவாச நாளம். 2) சுவாச நாளம், சுவாசநாடி.
 3) தொகுதிப் பெருநாடி, பெருநாளம். 4) முற்பெருநாளம், பிற்பெருநாளம்.

11. சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்புடைய நோய் அல்லாதது,
 1) திரிசினெல்லா. 2) அமீபா வயிற்றுளைவு.
 3) மூலவியாதி. 4) நெபிரைற்றிசு.

12. $0.2ms^{-2}$ஐ $Knh^{-2}$ஆக மாற்றினால் கிடைப்பது,
 1) $2592Kmh^{-2}$ 2) $0.2/1000Kmh^{-2}$
 3) $0.2\times1000Kmh^{-2}$ 4) யாவும் பிழை

13. படத்தில் காட்டியவாறு தாங்கியொன்றில் கோல் ஒன்று நிறைகள் தொங்க விடப்பட்டு சமநிலையில் உள்ளது எனின், W, X என்பவற்றின் பெறுமானங்கள் முறையே,
 1) 100N உம் 2m உம் ஆகும்.
 2) 50Nஉம் 4m உம், ஆகும்.
 3) 40N உம் 5m உம் ஆகும்.
 4) யாவும் சரி.




14. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
 a - ஓரலகுப் பரப்பளவு மீது அப்பரப்புக்கு செங்குத்தாக தொழிற்படும் விசை அமுக்கம் எனப்படும்.
 b - அமுக்கத்தை அளக்கும் நியம அலகு பஸ்கால் எனப்படும்.
 c - திரவத்தின் ஒரே மட்டத்தில் உள்ள புள்ளிகளில் அமுக்கம் சமனாகும்.
 d - ஆழம் கூடக்கூட அமுக்கம் குறையும்.
 மேற்கூறப்பட்ட கூற்றுகளில் சரியானது,
 1) a, b, w சரி. 2) a, b, c சரி.
 3) a, c சரி. 4) a, c, c, d யாவும் சரி.


15. அலுமினியத்தின் அடர்த்தி $2700kgm^{-3}$ ஆகும். $0.2m^3$ கன அளவான அலுமினியத்தின் நிறை யாது?
 1) 5400N 2) 3400N 3) 5800N 4) யாவும் பிழை.

16. உரப்பு, மீடிறன் என்பவற்றை அளக்கப் பயன்படும் அலகு முறையே குறிப்பது,
 1) Hz, dB 2) dB, $H_2$
 3) dB, சக்/செக் 4) அதிர்வு/ செக், $H_2$


17. எமது உடலில் செயற்படும் ஓமோன்கள் தொடர்பான சரியான கூற்றைத்தெரிக.
 1) இன்சுலின் குறைபாடு காரணமாக கண்டமாலை ஏற்படுகின்றது.
 2) அதிரீனலின் காரணமாக ஆபத்தில் இருந்து தப்பிக்கொள்வதற்கு வேண்டிய சக்தி கிடைக்கின்றது.
 3) ஈஸ்ரஜன் ஆண்களின் துணைப்பால் இயல்புகளை ஆளுகின்றது.
 4) செந்நிறத்தின் இரைப்பைச்சாறு சுரக்கப்படுவதைத் தூண்டுகின்றது.

18. அமோனியம் சல்பேற்றில் உள்ள $[(NH_4)_2SO_4]$ இன் சதவீதம் யாது?
 (N - 14, H - 1, S - 32, O - 16
 1) 46.6% 2) 21.21.% 3) 14.7% 4) 12.12%

19. பிழையான ஒளிக்கதிர் படத்தைக் குறிப்பது,




20. இலத்திரனியல் சுற்றொன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது. A, B, C என்பன முறையே குறிப்பது,




 1) சீராக்கிப்பாலம், 2 தோட்டுக்கதிர் அலைவுகாட்டி, ஆடலோட்டம்.
 2) CRO, ஆடலோட்டம், ஆளி.
 3) இருவாயி, கொள்ளளவி, திரான்சிஸ்றர்.
 4) தடை, தொகையிடும் சுற்று, இருவாயி.

21. A, B, C, D எனும் சேர்வைகள் பற்றிய பின்வரும் அட்டவணையில் காணப்படும் தரவுகளுக்கு ஏற்ப அறை வெப்பநிலையில் திண்ம, திரவ, வாயு நிலையில் காணப்படும் பதார்த்தங்கள் முறையே,

| சேர்வை | உருகு நிலை $^0C$ | கொதிநிலை $^0C$ |
|---|---|---|
| A | -119 | -110 |
| B | -60 | 100 |
| C | 253 | 3000 |
| D | -60 | -10 |
| E | $0^0C$ | $100^0C$ |

 1) C, B, A 2) C, E, B 3) E, D, A 4) B, A, E

22. சாள்ஸ் டாவினின் இயற்கைத் தேர்வுக்கொள்கை மூலம் விளக்காத காரணி எது?
 1) வாழ்க்கைப் போட்டி. 2) விகாரம் தோன்றுதல்.
 3) மிகையுற்பத்தி. 4) தக்கன பிழைத்து வாழல்.

23. ஒரு குறித்த பிரதேசத்தில் ஒன்றுடன் ஒன்று இடைத்தாக்கத்துடன் வாழும் குடித்தொகை எல்லாம் ஒன்று சேர்ந்தபோது அது,
 1) சூழற் தொகுதியாகும். 2) குடித்தொகையாகும்.
 3) உயிரினச் சாகியமாகும். 4) உயிர்க் கோளமாகும்.

24. a - உறிஞ்சன் மானி. b - மனோ மானி.
 c - மெட்ரோலக் நீரமானி. d - ஈரமானி.
 e - ஓம் மானி. f - பாரமானி
 மேற்படி உபகரணங்களில் உலர் இறப்பரின் அளவை அறிவதற்கும், ஆவியுயிர்ப்பு வீதத்தை அளவிடுவதற்கும் பயன்படும் உபகரணங்கள் முறையே,
 1) மெட்ரோலக் நீரமானி, உறிஞ்சல்மானி.
 2) ஈரமானி, மனோமானி.
 3) ஓம்மானி, பாரமானி.
 4) உறிஞ்சல்மானி, மெட்ரோலக் நீரமானி.

25. சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
 a - ஒரு மனிதனில் 23 கோடி நிறமூர்த்தங்கள் உண்டு.
 b - பாரம்பரியம் என்பது ஒரு சந்ததியில் இருந்து இன்னுமொரு சந்ததிக்கு இயல்புகள் கடத்தப்படுவதாகும்.
 c - ஒரு காலத்தின் கருவின் உள்ளே நிறமூர்த்தங்கள் காணப்படும்.
 1) a, b சரி. 2) b, c சரி. 3) a, c சரி. 4) a, b, c சரி.

26. இலங்கையில் டெங்கு காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது. இதற்குக் காரணமான நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பதற்கு பொருத்தமான உயிரியலாட்சி முறை,
 1) நீர் நிலைகளில் நுளம்புக்குடம்பிகளை நுகரும் கப்பீஸ் போன்ற மீன் வகைகளை வளர்த்தல்.
 2) நீர் நிலைகளில் பூச்சிநாசினி விசிறுதல்.
 3) கதிர்த் தொழிற்பாட்டின் மூலம் ஆண் நுளம்புகளை மலடாக்கல்.
 4) இதற்குத் காரணமான வைரஸை அழித்தல்.

27. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
 a - மாறா அமுக்கத்தில் ஒரு குறித்த திணிவுள்ள வாயுவின் கனவளவு தனி வெப்பநிலைக்கு நேர்விகிதி சமனாகும்.
 b - மாறா வெப்பநிலையில் குறித்த திணிவுள்ள வாயுவின் கனவளவு அதன் அமுக்கத்திற்கு நேர்மாறு விகித சமனாகும்.
 c - மாறா வெப்பநிலையில் குறித்த திணிவுள்ள வாயுவின் கனவளவு அதன் அமுக்கத்திற்கு நேர்விகித சமனாகும்.
 d - மாறா வெப்பநிலையில் குறித்த திணிவுள்ள வாயுவின் கனவளவைக் குறைக்கும்போது அமுக்கம் அதிகரிக்கும்.
 e - இக்கூற்றுகளுள் சரியானது.
 1) a, b மட்டும் சரி. 2) a, b, d மட்டும் சரி.
 3) b, c, d மட்டும் சரி. 4) a, b, c, d யாவும் சரி.

09 ஆம் பக்கம் பார்க்க....

ஆசிரியர்: S.சந்திரமோகன், (அதிபர்)
சது/வீரமுனை ஆர்.கே.எம். தமிழ் மகா வித்தியாலயம்,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானம் I - தொடர்ச்சி....

28. பின்வருவனவற்றுள் அசேதனக் கரைப்பான் அல்லாதது?
1) நீர். 2) காபன் இரு சல்பேட்டு.
3) திரவ அமோனியா. 4) எதனோல்.


29. 500ml கரைசலில் 15g யூரியா கரைந்து இருப்பின் இக்கரைசலின் செறிவு $moldm^{-3}$இல்,
1) $0.5moldm^{-3}$ 2) $1moldm^{-3}$ 3) $5moldm^{-3}$ 4) $2moldm^{-3}$

30. நீரின் நிலையில் வன்மைக்கு காரணமான உப்புக்கள் பின்வருவனவற்றுள் எது?
1) கல்சியம் இரு காபனேற்று. 2) கல்சியம் சல்பேற்று.
3) கல்சியம் குளோரைட்டு. 4) கல்சியம் காபனேற்று.

31. சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
a - சூழலில் நடைபெறும் மாற்றங்களுக்கு உணர்ச்சியைக் காட்டும் எமது உடலின் பாகங்கள் வாங்கிகள் எனப்படும்.
b - வாங்கி அங்கங்களை உயிர்ப்படையச் செய்யக்கூடியவாறு சூழலில் நடைபெறும் மாற்றம் தூண்டல் எனப்படும்.
c - தூண்டலுக்கு துலங்கலைக் காட்டும் உறுப்பு விளைவு காட்டி எனப்படும்.
1) a, b சரி. 2) b, ç சரி. 3) a, c சரி. 4) a, b, c சரி.

32. பின்வரும் இயல்புகளைக் கருதுக.
* பூக்காம்பு நீண்டிருத்தல்.
* பெருந்தொகையான பாரமற்ற மகரந்த மணிகளை உருவாக்கல்.
* குறியானது மயிர்களுடையதாக பிரிந்திருத்தல்.
மேலே தரப்பட்ட இயல்புகள் பின்வரும் எக்காரணி மூலம் மகரந்தச் சேர்க்கையடையும் பூக்கள் கொண்டிருக்கும்.
1) காற்று. 2) விலங்கு. 3) நீர். 4) யாவும் பிழை.

33. கீழே தரப்பட்ட மின்சுற்றுகளில் மிகக்குறைந்த சமவலுத்தடையுள்ள சுற்று,




34. இலங்கையின் தேசிய மரம் நாகமரமாகும். இதன் சரியான தாவரவியல் பெயர்,
1) Cocus nucifira 2) Mesua nagassarium
3) Felis domestics. 4) Oryza sativa

35. பின்வரும் பௌதிக கணியங்களுள் எதற்கு சக்தியின் அலகு அமையும்?
1) திணிவு. 2) வேலை. 3) வலு. 4) நிறை.

36. இழைய வளர்ப்பின்போது முக்கியமற்றது?
1) கிருமியழிக்கப்பட்ட போசணை ஊடகம்.
2) தேவையான ஒளி.
3) சிறப்பு வெப்பநிலை.
4) வெளியில் இருந்து போசணையை இடைக்கிடை பெற்றுக்கொடுத்தல்.

37. இரைப்பையில் அமிலத்தன்மையை நீக்குவதற்கு அமில நிரோதியை மருந்தாக கொடுப்பர். இம்மருந்து,
1) $CaCO_3$ 2) $Mg(OH)_2$ 3) $MgSO_4$ 4) $H_2SO_4$

38. இறப்பர் பாலில் பற்றீரியாத் தொழிற்பாட்டின் மூலம் துர்நாற்றம் ஏற்படுகிறது. பற்றீரியாக்களின் பெருக்கத்திற்கு இறப்பர்பாலில் உள்ள எவ்வூடகம் காரணமாகும்?
1) கொழுப்பு. 2) புரதம்.
3) இறப்பர் பாலில் உள்ள மாசுக்கள். 4) திரட்சி நிரோதிகள்.

39. பின்வருவனவற்றுள் அலகு இல்லாத கணியம் எது?
1) பொறிமுறை நயம். 2) வேகவிகிதம்.
3) சாரடர்த்தி. 4) யாவும் சரி.

40. சூழல் எண் கூம்பகத்தின் இரண்டாம் போசணை மட்டத்தினால் வகை குறிக்கப்படுவது,
1) தாவரவுண்ணிகளின் எண்ணிக்கை.
2) ஊனுண்ணிகளின் எண்ணிக்கை.
3) அனைத்து முண்ணிகளின் எண்ணிக்கை.
4) உற்பத்தி செய்யப்படும் அங்கிகள் எல்லாம்.

## விஞ்ஞானம் - II

34-T-II

### பகுதி A - அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. மனித இதயத்தின் நெடுக்கு வெட்டுமுகத் தோற்றம் படத்தில் தரப்பட்டுஉள்ளது.

01) A, B, C, D, E, எனும் எழுத்துக்களினால் குறிக்கப்படும் பகுதிகளின் பெயர்களைத் தருக.




A ....................................
B ....................................
C ....................................
D ....................................
E ....................................

02) வலது இதயச் சோணைக்கும் வலது இதய அறைக்கும் இடையே உள்ள வால்வின் பெயர் என்ன?
..........................................................................

03) A, B ஆகியவற்றினால் நிறைவேற்றப்படும் தொழில் யாது?
..........................................................................

04) இடது இதயவறைச் சுவர் ஏனைய அறைகளின் சுவர்களைவிட தடிப்பாக இருப்பதற்கான காரணம் யாது?
..........................................................................
..........................................................................

05) இரட்டைக் குருதியோட்டம் என்றால் என்ன?
..........................................................................

06) இதயத்துடிப்பின் நரம்புச் செயற்பாட்டை கட்டுப்படுத்தும் பகுதி எது? அது எங்கு காணப்படும்?
..........................................................................


07) நிணநீர்த்தொகுதி சரிவர செயற்படாவிடின் ஏற்படும் நோய் நிலைமை யாது? ..........................................................

08) குருதித் தொகுதி தொடர்பான நோய்கள் 3 தருக.
1. ..........................................................................
2. ..........................................................................

09) இதய நோய்களைத் தவிர்க்க கையாளவேண்டிய செயற்பாடுகள் யாவை?
1. ..........................................................................
2. ..........................................................................
3. ..........................................................................

10. குருதி திரவ நிலையில் உள்ள இழையமாகக் காணப்படுவதன் அனுகூலம் யாது? ..........................................................

02. A. மோட்டார் வாகனமொன்றின் இயக்கத்திற்கான வேக, நேர வரைபு படத்தில் காட்டப்பட்டுள்ளது.




1) பின்வரும் இயக்கங்களை விவரிக்குக.
AB ..........................................................................
BC ..........................................................................
CD ..........................................................................

2) ஆரம்ப ஆர்முடுகலின் பெறுமானம் யாது?
..........................................................................

3) இறுதி ஆர்முடுகலின் பெறுமானம் யாது?
..........................................................................

4) வாகனம் பயணம் செய்த மொத்த தூரம் யாது?
..........................................................................

5) BC என்ற இயக்கநிலையின்போது வாகனத்தின் மீது தொழிற்பட்ட விளையுள் விசை எவ்வளவு?
..........................................................................

6) ஒரு பொருளின் மீது மாறா விசை தாக்கும்போது அப்பொருள் எவ்வாறு இயங்கும்?
..........................................................................

7) ஒரு பொருளின் மீது 10N விசை தாக்கியபோது அப்பொருள் மாறா வேகத்துடன் இயங்கியது. இச் சந்தர்ப்பத்தில் பொருளின் மீது இயக்கத்துக்கு எதிராகத் தொழிற்பட்ட தடை விசை யாது?
..........................................................................

8) ஆர்முடுகலுடன் இயங்கும் இயற்கை நிகழ்வொன்றுக் குறிப்பிடுக.
..........................................................................

B. 1) நியூற்றனின் 2 ஆம் இயக்கவிதிக்குரிய சமன்பாடு F=ma ஆகும். பின்வருவனவற்றை வகைக் குறிக்குக.
F .............................. m ..............................
a ..............................


2) F நியூற்றனில் பெறப்பட வேண்டுமாயின் m, a எவ்வலகில் இருத்தல் வேண்டும்?
m .............................. a ..............................

3) ஒரு சிறுவனின் உடலின் திணிவு 25kg எனின், அவனது நிறை யாது? புவியீர்ப்பு ஆர்முடுகல் $10m5^{-2}$ எனக் கொள்க.
..........................................................................

4) விசை என்றால் என்ன?
..........................................................................

5) விசை ஏற்படுத்தும் விளைவுகள் மூன்று தருக.
..........................................................................

6) ஆர்முடுகலுக்கான தூர-நேர வரைபு எவ்வாறு இருக்கும்?




7)




படத்தில் காட்டப்பட்டகோல் சமநிலையில் இருப்பின் x இன் பெறுமானம் யாது?
..........................................................................

வளரும்....

இன்றைய விஞ்ஞான பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்குவது
NSP®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும்
உங்கள் தோழன்
★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் அழகாக எழுதக் கூடிய தடிப்பம்
★ எழுதத்தூண்டுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்
N0 5, Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka. Tell: 94-11-2 323 581, Fax: 94-11-2 342 911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வூதிய விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம், நவ.27

ஒய்வூதிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நல்லூர்ப் பிரதேச பிரிவு பகிரங்க சேவை ஓய்வூதியர் சங்க நிர்வாக சபையினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தினால் அனுகூலங்கள் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஓய்வூதியர்கள், நிர்வாகசபையினருடன் கலந்துரையாடுவதற்கு ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வாரத்தில் நல்லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிதியத்தில் இணைவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மேற்படி நிதியத்திற்கு அனுப்பப்பட்டு அங்கத்துவ அட்டைகள் கிடைக்கப் பெற்றதும் வழங்கப்படும். (50-16)


**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
**The Jaffna Education Centre**

"நாதன்ஸ்" சினிமா முன்பாக (மேல்மாடியில்)
**Spoken English with Grammar**
**சிங்களம்**
Shorthand Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன. புதிய பிரிவு ஆரம்பம் 28.11.2009
"வெளிநாடு" செல்பவர்களுக்கு குறுகிய காலத்தில் இலகுவாக எழுத, வாசிக்க, பேசக் கற்றுக் கொடுக்கப்படும். பாட முடிவில் "சான்றிதழ்" வழங்கப்படும்.
(92494) நிர்வாகி இ.லோகநாயகி


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வராசா வசந்தகுமார்**
(மாணவன், 2001 கலைப்பிரிவு, ஸ்ரான்லிக் கல்லூரி)

அன்புக்காக அன்னை மடிமேல் 09.06.1982
அருளுக்காக ஆதிசிவன் திருவடியின் கீழ் 27.11.2008

ஆண்டோன்று ஆனாலும் ஆறவில்லை எம் கவலை
ஆண்டவன் திருவடியில் நீயிருந்து அருள்புரிய வேண்டுகிறோம்.

மாசேரி, வரணி. குடும்பத்தினர். (92493)

## 103 ஆவது பிறந்த தினமும் நான்காம் ஆண்டு நினைவலைகளும்



திருமதி
**சின்னம்மா நமசிவாயம்**
(மலாயன் ஓய்வூதியர்)
27.11.2009

மண்ணில்: 27.11.1906
விண்ணில்: 03.07.2005

சந்திரன் இல்லா வானம்
தாமரை இல்லாப் பொய்கை
மந்திரி இல்லா வேந்தன்
மதகரியில்லாச் சேனை
சுந்தரப் புலவர் இல்லா
தொல்சபை சுதரில் வாழ்வு
தந்திகள் இல்லா வீணை
இவையாவும் போல
"இந்திரகிரி" யும் இந்நிலைக்காளாகி
நான்காண்டானதுவே
உங்களுடன் சேர்ந்து எமதுள்ளத்தில்
என்றென்றும் நிலைத்திருக்கும்
எம் இனிய உறவுகளுக்கும்
இந்நாளில் எம் இதய அஞ்சலிகள்
"சந்ததமும் உங்கள் நினைவு சாகாத நம் நினைவே"

நந்திகா (பேர்த்தி),
தையல்நாயகி (மகள்).
"இந்திரகிரி" வதிரி, கரவெட்டி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள். (#562724)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

**சிறிஸ்கந்தராசா ரவிசங்கர்**



மலர்வு 31.12.1980
உதிர்வு 27.11.2008

ஓராண்டு கடந்து விட்டது உன்னினிய
குரல் கேட்டு
பல்லாண்டு சென்றாலும் மாறாது
எம் துயர்
உன் புன்முறுவல் ஞாபகங்கள் ஓயாது
எமைவருத்த
ஓடோடிச் சென்றுவிட்டாய்
நிர்க்கதியாய் எமைவிட்டு.
உன் ஆன்ம இளைப்பாற்றிற்காய்
ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

உன் அன்பு மறவா
அம்மா, தம்பி,
அக்கா, அத்தான்,
மருமகள்.

36, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு. (92453)

## ஒய்வூதிய அங்கத்துவ அட்டைகள் வந்தன

யாழ்ப்பாணம், நவ.27

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்க நல்லூர் பிரதேச செயலக பிரிவின் அங்கத்துவ அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஓகஸ்ட் 2009 இல் அங்கத்துவ விண்ணப்பங்களைப் பெற்றுச் சமர்ப்பித்தவர்களின் அங்கத்துவ அட்டைகள் தலைமை அலுவலகத்தால் அனுப் பப்பட்டு கிடைக்கப்பெற்றுள்ளன.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவதும் நான் காவதும் வார இறுதி நாளான ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலோசனைக் கூட்டம் இடம்பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை நல்லூர் பிரதேச செயலகத்தில் குறித்த அங்கத்துவ அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் செ.சந்திரசேகரம் கேட்டுள்ளார். (50-16)

## மணி விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ. 27

கலைமணி சன சமூக நிலைய மணி விழாவும், மலர் வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முத்துமாரி அம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கலைமணி சன சமூக நிலையத்தலைவர் சி.இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ், யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.ஜமுனாநந்தா, வலி. கிழக்கு பிரதேசசபைச் செயலாளர் த. நடராஜா, யாழ். வர்த்தகசங்கத் தலைவர் லயன் இ. [illegible] [illegible] கலந்து கொள்வர். (50-204)

## பல்கலைக்கழக பட்டதாரி செல்வன் வைகுந்தநாதன் நீதிஇராசா அவர்களின் பிறந்தநாள் வாழ்த்து

இன்று (27.11.2009) வெள்ளிக்கிழமை



வடமராட்சி, துன்னாலை வடக்கைச் சேர்ந்த
திரு. அ.வைகுந்தநாதன் (J.P.)-
திருமதி வைகுந்தநாதன் சுசிலா தம்பதியரின்
சிரேஷ்ட புத்திரன்
திரு.வை.நீதிஇராசா (B.B.A.) முன்னாள்
முகாமைத்துவ உத்தியோகத்தர், கச்சேரி,
வவுனியா. தற்போது பிரான்ஸ் பரிஸில்
கடமையாற்றுகிறார். அவர் இன்று
(27.11.2009) வெள்ளிக்கிழமை தனது
பிறந்தநாளை பரிஸில் கொண்டாடுகின்றார்.
கோண்டாவில் ஞானவைரவர் ஆசி வேண்டி
ஆலயத்தில் பொங்கல் நடைபெறும்.
அவர் என்றும் பல பதவிகளைப் பெற்று
நோய் நொடியின்றி வாழ
தம்பியை வாழ்த்துகின்றோம். (92452)

வாழ்த்துவோர்:
வடமராட்சி துன்னாலை செ.ஸ்ரீநிவாஸன்
பிரதேச செயலாளர், தென்மராட்சி, சாவகச்சேரி.
4ஆம் வட்டாரம், மண்கும்பான் A.திருச்செல்வம்
அருள் விநாயகர் மோட்டோர் பாட்ஸ்
106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
வலிகாமம், கோண்டாவில்.


**Loyolas**
St.Patrick's Road, Jaffna.



- Marriage, Reception & Conference Halls A/C
- A/C Rooms
- Chinese & Sri Lankan Cuisine
- Catering Section For all Occasions

For Futher details please Contact:
**Loyolas**
195, Main Street, Jaffna.
T.Phone : 021222 2110
Mobile : 0777 734083


## ௯௰ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

அமரர்
**செல்லையா விசாலாட்சி**



தோற்றம் 04.08.1922
மறைவு 30.08.2009

அன்னையென அழைத்து வந்தேனே!
தந்தையும் தாயுமாகி நின்றாயே!
புன்னகை சிந்தும் உன் முகம் எங்கே?
மகனே என்று பரிவுடன் அழைப்பாய் அம்மா!

எவரையும் புறங்கூறாத உள்ளம் நிறைந்தீர்களே
நறுக்கான பேச்சு அன்பான வார்த்தையால் அழைப்பீர்களே!
ஏற்றம் அளித்திடும் வாழ்வு வாழ வழி சமைத்தீர்களே!
என் அன்பு மாமியே எங்களை விட்டு எங்கு மறைந்தீர்களோ?

எம் ஆருயிரில் கலந்த அன்பான ஆச்சியே!
எம்மை சீராட்டி தாலாட்டி அமுதூட்டி வளர்த்தீர்களே
எம் பூட்டியே பால் பழம் தந்து பரிவுடன் எமக்கு
பல கதைகள் கூறி மகிழ்விப்பீர்களே எங்கள் ஆச்சியே!

எம்மை விட்டு எங்கு சென்றீர்களோ ஆச்சியே!
இறைவனிடம் தான் சென்றீர்களோ
தொண்ணூறு நாள் ஆகியும் காணேன் நாம் பார்க்க
மீண்டும் ஒருக்கால் வாரீர்களோ அருமைப் பூட்டியே!

அன்பான மகன், மருமகள், பேரன்,
பேர்த்திமார், பூட்டப் பிள்ளைகள்.

பிரான்ஸ். (92492)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனுக்கு இன்று அகவை 24 நிறைவு

## வாசகர்கள் பேசுகிறார்கள்....

### வாழ்த்திப் போற்றி நிற்கின்றோம்

கண்ணியம் மிக்க நல்ல கருத்துக் கலசமாய்த் திகழ்ந்து
காசினியோர் வாசிக்க நல்ல களம் பல அமைத்து நீயும்
புண்ணியமே செய்திட்ட ஒரு புருஷோத்தமனாய் உதித்து
பூவுலகம் செழித்திட புதுச்செய்திகளை உதிர்த்து
மண்ணிலே நீ நல்ல மாண்புடனே நாளும் வாழ்ந்து இன்று
நாலாறு ஆண்டுடன் நாம் தரும் முத்தமும் ஒன்று சேர்த்து
எண்ணியிருப்பதைந்து 'வெள்ளி விழா' ஏற்றமுடன் கொண்டாட
வாழ்த்தியே போற்றி நிற்கிறோம் நீ வாழியவே பல்லாண்டு!

ஆதித்தன் பெயர் கொண்ட இந்த அகிலம் போற்றும் 'உதயனே'!
ஆளுமையும் அறிவாற்றலும் மிக்க அற்புதமான கட்டுரைகள்
வாசித்து மகிழ்ந்திட நல்ல வாண்மை மிகு கவிதைகள் செய்திகள்
வளமுடன் வழங்கியே எம்மை வாசித்து மகிழ வைப்பாய்!
சோதித்துப் பார்த்தார்கள் உன்னை நீ சோதனையில் 'பாஸ்' பண்ணிவிட்டாய்!
துணிச்சலுடன் விருது பெற்றுக் களிப்புடனே மலர்ந்திட்டாய்!
சாதித்த சாதனைகள் எல்லாம் பட்டியலில் அடங்கிடாது உன்னை
சந்ததமும் போற்றி நிற்கிறோம் நீ வாழியவே பல்லாண்டு!

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

25

உதயனே!
உன் பிறந்த நாளில்,
வண்ணப் பூக்கள் சூடி...,
எம்மிடையே வருகின்றாயா?
வாயாரப் 'பா'க்களைச் சூட்டியே,
வாழ்த்துக்கள் பாடி நிற்கின்றோம்.
மக்கள் மனதில் நிறைந்த,
மைந்தனே! பல்லாண்டு வாழ்க.
புதுப் புது விடயங்களைத் தந்தே,
மக்கள் மனதில் என்றும் வாழ்க.

-கு.கமலாம்பிகை,
மீசாலை.

உதயன்!
வெள்ளி விழா
மைந்தனாய்!

### காலத்தின் ஆதவனாய் எழுக!

எழுச்சியின் திறவுகோலாய் எழுக!
எண்ணத்தின் நாற்றாங் காலாய் எழுக!
விழிப்புறும் தமிழர்தம் தாயகத்தின்
விடிவெள்ளித் தூதுவனாய் எழுக!
களித்திடும் மகிழ்வு கொண்டு எழுக!
காலத்தின் ஆதவனாய் எழுக!
தேசியத்தின் நாளேடாய் எழுக!
தேமதுரத் தமிழ் முழங்க எழுக!
ஆசியாவின் சிறப்பேடாய் எழுக!
ஆயிரமாயிரம் சாதனை படைத்து எழுக!
மாதவமாய் தமிழாக எழுக!
மானுடத்தின் காவலனாய் எழுக!
யாழவளின் மணிமுடியாய் எழுக!
ஞாயிறென இருளகற்ற எழுக!

மதுரகவி காரை.எம்.பி அருளானந்தன்.

### செவ்விதழ் உதிர்த்து வாழ்த்திடுவோம்

கந்தன் மலர் விரிந்தே காற்றினில் மணக்க
கதிரோன் விழித்து கீழ் வானம் சிவக்க
மந்த மாருதம் வீச விரிந்து மனங்குளிர
மலர்ந்தான் உதயன் மகிழ்ந்தன உள்ளங்கள்!

பைந்தமிழோடு இறுகப் பற்றி நின்றவன்
எங்கெங்கும் நிறை குறை முழங்கி ஏற்றங்கள் தந்தவன்!
மங்காத நிலவினைப் போல் மதிமுகம் கொண்டவன்
மக்கள் மனங்களில் என்றும் நிறைந்தவன்!

இளங்காலைப் பொழுதினில் வாசகர் இதயங்களில்
இனிதூட்டும் சுடச்சுட செய்தியோடு சதாவினிக்கும்
செந்தமிழுரைத்து எங்கள் செங்கதிரோனுக்கு
செவ்விதழ் உதிர்த்து வாழ்த்திடுவோம்....!

என்.பிரேமசீலன்,
கோண்டாவில்.

### வாழ்க நீ வளமுடன் பல்லாண்டு!

ஊரவர்களறிய நீ விடியுமுன் எழுந்து
உலகுபுகழ் 'உதயன்' என உவகையில் மிதந்து
காரணமாய்க் கும்பமது வைத்துக் கைகூப்பி
காரியங்கள் யாவினும் கைகொடுக்க ஏத்தி
பூரவொளி பரவவே சாம்பிராணி வாடை
புகையெங்கும் வீசிவரப் புதுமணங் கமழ
தருணமிது சுவைதருநற் தகவல்கள் மொண்டு
தாவிவரு வாசகர்தம் இதயமதில் நிறைந்து
பூரணமாய் அன்பு சமாதானம் புவி யோங்கப்
புனித பணி புரிந்துமே வாழ்க பல்லாண்டு

கலாபூசணம். மு. தணிகாசலம்
கற்கோவளம்.

### வாழ்க உன் சேவை!

உதயனே.........!
உன்னதமானவனே,
தமிழ் நெஞ்சங்களில் கலந்தவனே,
உலக உறவுகளை அணைத்தவனே,
தினந்தினம் செய்திகளை,
திறம்பட உரைப்பவனே,
எந்த வினை வந்திடினும்,
உறவுகளுக்காய் உறுதியுடன்
மிளிர்ந்திடும் சுடரே,
உன்வரவை நாளும்,
எதிர்பார்த்த வண்ணம் உறவுகள்,
எம் உள்ளங்களில் உறைந்து
உயிர்த்துடிப்போடு வாழ்கிறாய்.
வாழ்க உன்பணி! வளர்க உன்சேவை!

இ.ரிஷிதா,
நயினை-8

## 25 உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.27

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது. (50-201)

## மூன்று வருடங்களின் பின்னர் மிருசுவில் நீக்கிலஸ் ஆலயத் திருவிழா

யாழ்ப்பாணம், நவ.27

மூன்று வருடங்களின் பின்னர் மிருசுவில் புனித நீக்கிலஸ் தேவாலய நவநாள் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதி திருநற்கருணை ஆராதனையும், திருப்பலியும் இடம்பெற்று மறுநாள் 06 ஆம் திகதி காலை திருநாள்திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

நவ நாள் ஆராதனைகளை அருட்பணி ஜோதிநாதன் அடிகள் நடத்துவார்.

மூன்று வருடங்களின் பின்னர் ஆலயத்தில் உற்சவம் நடைபெறுவதால் அடியார்களின் வருகைக்கான விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)

## சாவகச்சேரி இந்துவில் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.27

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற கழக எல்லைக் குட்பட்ட மாணவர்களை நாளை சனிக்கிழமை கௌரவிக்கவுள்ளனர்.

நாளை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும்.

கழகத் தலைவர் லயன் ப. செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகச் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி-1 மாவட்ட முதலாவது உதவி ஆளுநர் லயன் எஸ். ஜெயவத்சலனும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட இரண்டாவது உதவி ஆளுநர் லயன் பிரியந்த பெர்ணாடோ, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும் கலந்து கொள்வர். (50-207)

## வினா விடைப் போட்டியில் வெற்றி பெற்ற பல்கலைக்கழக மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

'இலங்கையின் மூலதனச் சந்தை நிலைமைகள்' என்னும் தலைப்பில் இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக் குழுவினரால் நடத்தப்பட்ட வினா விடைப் போட்டியில் பங்கு பற்றி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவபீட மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைநெறிகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், முகாமைத்துவ கற்கைகள் துறைத் தலைவர் திருமதி தே.சிவாஸ்கரன், முகாமைத்துவ வணிகபீட பீடாதிபதி க.தேவராஜா, சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் எம்.நடராஜ சுந்தரம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த.ரவீந்திரன், துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், பேராசிரியர் எம்.நடராஜ சுந்தரம் ஆகியோர் வெற்றியீட்டிய மாண வர்களுக்கான வாழ்த்துரைகளை வழங்கினார்கள்.

பத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் யாழ்.பல்கலைக் கழகம் இரண்டாம் இடத்தைப் பெறுவதற்குக் காரணமாக விளங்கிய முகாமைத்துவ கற்கைநெறித்துறை மாணவர்களான நடராஜா குணபாலன், யசோ கந்தசாமி, தர்சியா அமிர்தலிங்கம், அனுஷா சிவானந்தலிங்கம், டினோஜா அலன்டே, தர்மபாலன் சுரேசன் ஆகிய ஆறு மாணவர்களுக்கும் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் விருது வழங்கி கௌரவித்தார். இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடத்துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (50-14,23)

## 'காற்றலையின் கவிதைகள்' நூல் வெளியீடு ஞாயிறன்று

சூரியன் எவ்.எம் வானொலி கவிஞர்களின் ''காற்றலையின் கவிதைகள்'' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.31 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சூரியன் எவ்.எம் வானொலி அறிவிப்பாளர் ரி.எஸ் முகுந்தன் கலந்து சிறப்பிக்கும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன், காரைநகர் பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் விசேட உரைகள், கருத்துக்களம், கவியரங்கம், நூல் வெளியீடு, கவிதை ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (50-201)



இணுவையூர் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய ''அன்னை அருட் கட்டளைக்கிணங்க பாடப்பெற்ற தலபுராணம்'' நூல் பங்குனி உத்தர தினமன்று கனடா ரொறென்ரோ துர்க்கேஸ்வரம் ஆலய மண்டபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

நூல் வெளியீட்டு [illegible] கனடா துர்க்கேஸ்வரம் ஆதின கர்த்தா [illegible] தொண்டர்' எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். [50-9]

## கே.ஏ.சுப்பிரமணியம் நினைவுதினம்

யாழ்ப்பாணம், நவ.27

கே.ஏ.சுப்பிரமணியம் (தோழர் மணியம்) அவர்களின் 20ஆவது நினைவுதினம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு-06, வெள்ளவத்தையில் அமைந்துள்ள கைலாசபதி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சி.கா.செந்திவேல் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் 'தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையும், அமெரிக்க - இந்திய மேலா[illegible]க்க நலன்களும்' எனும் தலைப்பில் இ.த[illegible]பயா நினைவுச் சொற்பொழிவாற்றுவார். (50-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

# உதயன்

வடமராட்சி மாணவர்களுக்காக உதயன் நிறுவனம் நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஒரு வார காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

நாளை சனிக்கிழமையுடன் முடிவடைய இருந்த இந்தப் போட்டி எதிர்வரும் *டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி* வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் விடைத் தாள்களை பாடசாலைகள் மற்றும் உதயன் முகவர் நிலையங்களில் அமைக்கப் பட்டுள்ள விசேட பெட்டிகளில் சேர்ப்பித்து உங்கள் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யுங்கள்.

## கண்ணீர் அஞ்சலி

### தம்பிப்பிள்ளை செல்லத்துரை

(முன்னாள் உப அதிபர், நடேஸ்வராக் கல்லூரி)

அவர்கள் 25.11.2009 புதன்கிழமை காலமானார். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

No.14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (92495) லம்போக் கிளினிக் ஊழியர்கள்.

## 2 ஆம் ஆண்டு நினைவு நாள்



பிறப்பு 03 . 08 . 1926 இறப்பு 27 . 11 . 2007

### அமரர் அ. அல்விறேற் பாலசிங்கம்

(முன்னாள் ஊழியர் கத்தோலிக்க அச்சகம் யாழ்ப்பாணம்)

[illegible]

இ.மங்களதாஸ் மருமக்கள்,

இல.05, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (92503) பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை சக ஆசிரியை திருமதி குலமணி மகாதேவாவின் அன்புத் தாயார்

திருமதி தெய்வநாயகம் சுப்பிரமணியம்

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கை யாக்குவதுடன், அவரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

(சி/562727)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கராசா தேவிகா (பவி)



ஆனந்தகானம், ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா தேவிகா (பவி) நேற்று முன்தினம் (25.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-நன்னிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் தங்கராசாவின் அன்பு மனைவியும் லோகமாலா (லண்டன்), கிருஷா, சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு தாயும் பிரேமதாசாவின் (லண்டன்) மாமியும் யோகராசா, ஆனந்தன், அற்புதன், விஜயா, [illegible]திகா ஆகியோரின் அருமைச் சகோதரியும் சபீராவின் (லண்டன்) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.11.2009) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஆனந்தகானம்,
ஊரெழு கிழக்கு. (92496)

மானிப்பாயில்.....



BAJAJ Distinctly Ahead

டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின்
உத்தரவுபெற்ற உதிரிப்பாக விற்பனையாளரும் சேவை முகவரும்

றஞ்சிற் மெக்கானிக் & சேவிஸ் சென்ரர் RRSC Motor Engineers

இன்று முதல் (27.11.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பஜாஜ் வாடிக்கையாளர்களுக்கு தமது சேவையை ஆரம்பிக்கின்றனர்.

27.11.2009 தொடக்கம் 27.12.2009 வரை விசேட விலைக்கழிவில் உதிரிப்பாகங்களையும் சேவையினையும் பெற்றுக்கொள்ளலாம்.

றஞ்சிற் மெக்கானிக் & சேவிஸ் சென்ரர்,
யாழ்.வீதி, மானிப்பாய்.
தொ.பே.: 0778107549, 0213787808

## விற்பனைக்கு

அலுவலகப் பாவனைக்கேற்ற அலுமாரி, கதிரைகள், வரவேற்பு மேசை மற்றும் ஒரு மாதம் மட்டும் பாவித்த கூலர் (bajaj) ஆகியன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
தொ.பே.இல: 0775242129 (92497)

## தவறிவிட்டது

சடச்சப்பை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த அஜிரானி குகநேசன் (797602221V) இலங்கை தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை என்பன 25.11.2009ஆம் திகதியன்று இணுவிலுக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் [illegible] முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

திருமதி இ.குகநேசன் 'சுகந்த இல்லம்', இணுவில் தெற்கு, இணுவில். (92502) தொலைபேசி இல: 0213734552

## சுயதொழில் முயற்சிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான கொடுப்பனவுகள்

நவாலி, நவ.27

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுய தொழில் முயற்சிக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்த 15 பேருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவுக்கான காசோலைகள் சண்டிலிப்பாய் பிரதேச சமூக சேவைகள் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சுயதொழில் கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

இ.சிவக்கொழுந்து- கல்வளை வீதி, சண்டிலிப்பாய், வா.கிருஸ் ணன்- கல்வளை வீதி, சண்டிலிப்பாய், ஆ.கதிரவேலு- சண்டிலிப்பாய் மத்தி, செ.புவனேஸ்வரி-கல்வளை வீதி, சண்டிலிப்பாய், த.இராசமணி- கல்வளை வீதி, சண்டிலிப்பாய், அ.அரியமலர்- மடத்தடி, சண்டிலிப்பாய்.

கு.குலமணி-கல்வளை வீதி, சண்டிலிப்பாய், சி.கனகலட்சுமி- லட்சுமி விலா, கல்வளை வீதி, சண்டிலிப்பாய், சி.சின்னப்பிள்ளை- கல்வளை வீதி, சண்டிலிப்பாய், கு.கனகம்மா- சண்டிலிப்பாய் கிழக்கு, க.மாரிமுத்து- தியாகராசா வீதி, சண்டிலிப்பாய், க.இராசம்மா- கம்மாலையடி, சண்டிலிப்பாய், இ.மாரிமுத்து-கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.

இந்தக் கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்டோரை மேற்படி பிரதேச செயலகத்துக்குச் சென்று காசோலைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்[illegible]

(50-201-100)

## கட்டடம் அல்லது விசாலமான வீடு வாடகைக்குத் தேவை

கலைமகள் சர்வதேசக் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளுக்காக யாழ்.நகரை அண்டியுள்ள பகுதிகளிலிருந்து குறிப்பாக நல்லூர், கச்சேரி, யாழ்.நகரின் புறநகர்ப் பகுதிகள், சாவகச்சேரி, கொக்குவில், மானிப்பாய் போன்ற பகுதிகளில் இருந்து வாடகைக்கு கோரப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். 0778834592 (சி/562726)

## நான்காவது குருபூசைத் தினம்
### கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்



பொன்மதி வதன ஒளிபரப்பி
மண்மாந்தர் மலஇருள் மாசகற்றி
பண்ணோடு பத்திமையால் பாடல்பாடி
அன்போடு அருளுரைகள் நல்கும் அருட்கவி

தித்திக்கும் தெவிட்டாத கதாப்பிரசங்கம்
சித்திக்கும் ஞானசோதிட வைத்தியம்
சித்தம் தெளியஆசி நல்கும் சக்திரூபம்
நித்தம் நாம்காணும் நடமாடும் தெய்வம்

அற்புதங்கள் பலஆற்றி ஆன்மாக்கள் ஈடேற
அருள் ஒளியாய் வாழ்ந்த விநாசித்தம்பிப் புலவர் ஐயா
நான்காம் குருபூசை நன்னாளிதனில் உம் ஆசிதனை
வேண்டுகிறோம் இவ்வவனி சாந்தி பெற்றுய்ந்திட

ஓம் காசி லிங்கேஸ்வராய நமஹ.

நாளை (28.11.2009) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம்,
அளவெட்டி. (92500) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் தங்கியிருந்த 18 பாடசாலைகளும் வவுனியாவில் மீள இயங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.27.

வவுனியாவில் நலன்புரி நிலையங்களாக மாற்றப்பட்டிருந்த 18 பாடசாலைகளும் மீளவும் கல்விச் செயற்பாடுகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல். ஜீ.ஏ. சந்திரசிறி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆளுநர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த வவுனியாவின் அனைத்துப் பாடசாலை முகாம்களும் மூடப்பட்டு அவை மீளவும் கல்விச் செயற்பாடுகளுக்காக திறந்துவிடப்பட்டுள்ளன.

கடந்த மே மாதத்தில் வன்னியிலிருந்து மீண்டு வந்த மக்களுக்குத் தற்காலிக வதிவிடங்களை வழங்கியிருந்த வவுனியாவின் 18 பாடசாலைகளில் அமைந்திருந்த நிவாரண முகாம்களை நேற்றுமுதல் மூடிவிடுவதற்கு அரசால் முடிந்துள்ளது. அந்த முகாம்களில் தங்கியிருந்த மக்கள் நலனோம்புக் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நலன்புரிக் கிராமங்களிலுள்ள பிள்ளைகளுக்கும் கல்விச் செயற்பாடுகளை விரிவாகச் நடத்திச் செல்வதற்கு அரசு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. நலன்புரிக் கிராமங்களில் இருந்த பாடசாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கை இன்றைய அளவில் 35 ஆயிரமாகக் குறைந்துள்ளது.

பாடசாலைகளில் மூன்றாம் தவணை முடிவுக்கு வருவதோடு நலன்புரிக் கிராமங்களிலுள்ள பாடசாலைப் பிள்ளைகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்படிப் பரீட்சைக்காக அப்பிள்ளைகளுக்கான மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு 25 ஆசிரியர்கள் வார இறுதியில் சேவையாற்றுவதற்கு அரசு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

மஹிந்த சிந்தனையின் கீழ் ஜனாதிபதி கல்விச் செயற்பாடுகளில் விசேட கவனம் செலுத்தியுள்ளதன் காரணமாக வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் தலைவரும் எம்.பி.யுமான பஸில் ராஜபக்ஷவின் பணிப்புக்கு அமைய வடபுலத்தின் அனைத்துப் பாடசாலைகளையும் விரைந்து ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆளுநர் சுட்டிக்காட்டுகிறார்.

மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள பிரதேசங்களின் பாடசாலைகள் தொடர்பாக அரசு மூன்று மில்லியன் பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது. மன்னார் மற்றும் மடு வலயத்தினுள் 11 பாடசாலைகளும், முல்லைத்தீவு துணுக்காய் வலயத்தினுள் 6 பாடசாலைகளும், கிளிநொச்சியில் 3 பாடசாலைகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடை, கல்வித்திட்ட நூல்கள், கற்றல் உபகரணங்கள் மற்றும் நடமாடும் ஆய்வு கூடங்கள் போன்றவையும் வழங்கப்பட்டுள்ளன.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சினால் வடமாகாண பாடசாலைக் கட்டடங்களை நிறுவுவதற்காக 100 மில்லியன் நிதியும் வழங்கப்பட்டுள்ளது என உள்ளது. (ஓ-1)

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணை இன்று: பிரபா பற்றிய தகவல்கள் மன்றில் தாக்கல்

சென்னை, நவ. 27

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு விசாரணை இன்று நீதிமன்றில் விசாரணைக்கு வருகிறது. இதன்போது பிரபாகரன், பொட்டு அம்மான் தொடர்பான முக்கிய தகவல்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

ராஜீவ்காந்தி, கடந்த 1991 இல் ஸ்ரீபெரும்புதூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் மனித வெடிகுண்டுக்குப் பலியானார். இந்தப் படுகொலை தொடர்பாக, விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், பொட்டு அம்மான், நளினி உள்ளிட்ட 41 பேர் மீது சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்தது.

இந்த வழக்கு, பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தலைமறைவு குற்றவாளிகள் என்று பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோர் மீதான வழக்குத் தனியாகப் பிரிக்கப்பட்டது.

மீதமுள்ளோரில் 26 பேர் மீதான வழக்கு மட்டும் விசாரிக்கப்பட்டு 1998இல் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்கில் தேடப்பட்டு வரும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோர் தொடர்பாக மேல் விசாரணை நடத்த வேண்டும் என்ற ஜெயின் கமிஷனின் பரிந்துரையின் அடிப்படையில், பல்நோக்கு புலனாய்வுக் குழுவிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் (முதலாவது கூடுதல் செஷன்ஸ்) விசாரணையில் உள்ளது. வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

பிரபாகரன், பொட்டு அம்மான் தொடர்பான முக்கிய தகவல்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

# மீன்பிடி ஒழுங்குச் சட்டத்தை வாபஸ் பெறக்கோரி 30 இல் புதுடில்லியில் மீனவர்கள் போராட்டம்!

## இல்லையேல் நடுக்கடலில் கப்பல்களை மறிப்போம்

சென்னை,நவ.27

மீனவர்களுக்கு எதிராக மத்திய அரசு புதிதாகக் கொண்டு வரமுயலும் 'மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தை வாபஸ் பெற வலியுறுத்தி வரும் 30 ஆம் திகதி டில்லியில் ஆர்ப்பாட்டம் மற்றும் வீதிமறியல் போராட்டம் நடத்தப்படும் - என்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

மேலும் இச்சட்டத்தை வாபஸ் பெறாவிட்டால் விசைப்படகு, நாட்டுப் படகு உள்ளிட்ட அனைத்துப் படகுகளையும் நடுக்கடலில் நிறுத்தி வெளிநாட்டுக் கப்பலை மறிப்போம் என்றும் இக் கூட்டமைப்பு நிர்வாகிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பின் கூட்டம் நேற்று சாந்தோமில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மத்திய அரசு மீனவர்களுக்கு எதிராக புதிதாக கொண்டு வர முயலும் மீன்பிடி ஒழுங்கு முறைச் சட்டம் 2009 மீனவர்களின் மீன்பிடி தொழிலுக்கு முற்றுப் புள்ளிவைக்க இருப்பதாலும், மீனவ சமுதாயத்தின் வாழ்வாதாரத்தைப் பாதித்து அவர்களின் அழிவுக்குக் காரணமாக இருப்பதாலும், மீனவ கிராமங்களில் கொந்தளிப்பு ஏற்படக் காரணமாக இருக்கும் இந்தச் சட்டம் முன் வடிவு நிலையிலேயே வன்மையாகக் கண்டிப்பதுடன், இச்சட்ட முன்வடிவை மத்திய அரசு உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும்.

இப்புதிய சட்டம் மூலமாக வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள் இந்தியக் கப்பலில் மீன் பிடிப்பதை எதிர்க்கிறோம். தமிழக மீனவர்களுக்கு எதிராக சிங்கள அரசு மற்றும் சிங்கள இராணுவம் ஆயிரக்கணக்கான மீனவர்களை கொன்றும், தொடர்ந்து நடத்தி வரும் துப்பாக்கிச் சூடு, படகுகளை அழித்தல், மீன் பொருள்களை பறித்துச்செல்லுதல் போன்ற கொலை வெறிச்செயல்களை இக்கூட்டமைப்பு வன்மையாக எதிர்ப்பதோடு, கச்சதீவினை மீட்டுத்தர வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து தமிழ்நாடு பர்வத ராஜகுல மீனவர் சங்கத்தின் தலைவர் அப்பாராஜ், தமிழ்நாடு பரதர் நலப்பேரவைத் தலைவர் மைக்கேல் பெர்னாண்டோ ஆகியோர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் -

மத்திய அரசு கொண்டு வரவிருக்கும் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம் 2009 சட்டத்தை எதிர்த்து மீனவர்கள் அதிருப்தி தெரிவித்து உள்ளனர். இச்சட்டத்தைக் கண்டிக்கும் வகையில் பல மாவட்டங்களில் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளது.

# லிபரான் அறிக்கை இரகசியமாக வெளியானமை குறித்து விசாரணை

## மன்மோகன்சிங் அறிவிப்பு

வாஷிங்டன், நவ.27

பாபர் மசூதி இடிப்பு பற்றி விசாரணை நடத்திய லிபரான் குழுவின் அறிக்கை முன்கூட்டியே ரகசியமாக வெளியானது பற்றி விசாரணை நடத்தப்படும் - என்று பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்தார்.

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து வரும் பிரதமர் மன்மோகன்சிங், வாஷிங்டன் நகரில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே இதைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

லிபரான் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு வெளியானமை வருந்தத்தக்கது. நான் டில்லி திரும்பியதும், இந்த விவகாரம் தொடர்பாக உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் அமைச்சர்களுடன் கலந்துபேசி, தகுந்த விசாரணை நடத்தப்படும் - என்றார்.

மும்பை தாக்குதல் ஓராண்டு நினைவு தினத்துக்கு முந்தைய தினமான நேற்றுமுன்தினம் அது தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளித்த மன்மோகன்சிங், மும்பைத் தாக்குதல் தீவிரவாதிகளுக்குத் தண்டனை பெற்றுத்தரும் வரை ஓயமாட்டோம் என்று உறுதியாக அறிவித்தார்.

மற்றொரு கேள்விக்குப் பதில் அளித்த மன்மோகன்சிங், அணுசக்தி ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்த உறுதிபூண்டுள்ளதாக அமெரிக்கா வாக்குறுதி அளித்திருப்பதால், இந்த ஒப்பந்த விவகாரத்தில் உள்ள சிறு பிரச்சினைகளுக்கு இரண்டு வாரத்தில் தீர்வு காணப்பட்டுவிடும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

# தமிழ்க் கட்சிகளுக்கிடையே பொது நிலைப்பாட்டை எட்டுவதற்கான ஒரு ஆரம்பமே சுவிஸ் மாநாடு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிக்கை



கொழும்பு, நவ.27

சுவிஸில் நடந்து முடிந்த மாநாடு தமிழ் பேசும் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒரு பொது நிலைப்பாட்டை எட்டுவதற்கான ஆரம்ப நிகழ்வாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அந்த மாநாட்டில் தீர்க்கமான முடிவுகள் எதையும் கூட்டாக எட்டமுடியவில்லை என்றும் , எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள இவ்வாறான மாநாடுகளின் மூலம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினை குறித்த நடைமுறை சாத்தியமான, தீர்க்கமான முடிவுகளுக்கான முயற்சிகளை நோக்கிச் செல்லலாம் எனத் தான் நம்புவதாகவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்கான விசேட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்தில் நடந்து முடிந்த தமிழ் பேசும் அரசியல் கட்சிகளுக்கிடையிலான மாநாட்டில் கலந்துகொண்ட செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்:-

இவ்வாறான மாநாடுகளின் நிகழ்ச்சி நிரல்களை ஏற்பாட்டாளர்கள் தயாரிப்பதை நிராகரித்து அதில் கலந்துகொள்ளும் அரசியல் கட்சிகளின் தலைமைகளே தயாரிக்க வேண்டும் என்றும், பிறநாடுகளில் தயாரிக்கப்பட்ட இவ்வாறான நிகழ்ச்சி நிரல்கள் தோல்வி கண்டுள்ளதையும் சுட்டிக்காட்டியதுடன் கடந்த காலங்களில் இது போன்ற முயற்சிகளுக்கு புலிகளின் தலைமை பிரதான தடையாக இருந்து வந்திருக்கின்றது என்ற உண்மையினையும் தனது அறிக்கையில் எடுத்து விளக்கியதுடன் ஆனால் தற்போது அவ்வாறான தடைகள் இல்லாத சுதந்திரமான நிலை உருவாகியுள்ளது எனவும் தெரிவித்திருந்தார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னர் கடந்த காலங்களில் எமது மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்துத் தமிழ் பேசும் அரசியல் தலைமைகள் பலவும் நடைமுறைக்குச் சாத்தியமான வழிமுறைகளினை ஏற்று செயற்பட்டிருக்கவில்லை என்றும், எட்டமுடிந்த அரசியல் இலக்கு நோக்கிச் செல்வதற்கு கற்பனைக்கு எட்ட முடியாததும் வெறுமனே சலசலப்புக் காட்டுவதற்கும் மட்டுமான சுயலாபங்களுக்கான எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்து வந்திருப்பதாகவும், இதன் காரணமாகவே எமது மக்களுக்கான அரசியல் தீர்வுமுயற்சிகள் யாவும் பயனற்றுப் போயிருப்பதோடு எமது மக்களை அவலங்களுக்குள் சிறைப்பட்டிருக்க நிர்ப்பந்தித்து இருந்ததாகவும் தெரிவித்தார்.

கடந்த கால அனுபவங்களைப் படிப்பினைகளாக ஏற்று சம்பந்தப்பட்ட தமிழ்த் தலைமைகள் யாவும் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் நின்று எமது மக்களுக்கான அரசியல் தீர்வினை எட்டுவதற்கு உடன்பட்டு வரவேண்டும் என்ற எதிர்பார்ப்புகளோடும், நம்பிக்கையோடும் மட்டுமே தாம் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்திருந்ததாக தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, இந்த மாநாட்டை ஓர் ஆரம்பத் தளமாகக் கொண்டு சக தமிழ்பேசும் தலைமைகள் யாவும் எமது மக்கள் நலன் சார்ந்து சிந்தித்து நடைமுறைக்குச் சாத்தியமான விடயங்கள் குறித்து எதிர்வரும் மாநாடுகளில் தீர்க்கமான முடிவுகளுக்கு வருவார்கள் என்றும், இல்லாவிட்டால் எமது மக்கள் தொடர்ந்தும் அரசியல் உரிமைகள் அற்றவர்களாகவும் , அவலங்களைச் சுமப்பவர்களாகவும் இருப்பார்கள் என்றும் தனது மனத்துயரங்களை அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இருந்தும் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து வெளியேறிச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட எமது மக்களை மீளக்குடியமர்த்துவது அவர்களுக்கான வாழ்வாதார வசதிகளை முன்னெடுத்தல், அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டோ அன்றி சரணடைந்த நிலையிலோ தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புலிகள் அமைப்பு உறுப்பினர்களுக்கு பொது மன்னிப்பு மற்றும் புனர்வாழ்வு அளிப்பது காணாமல்போனவர்கள் தொடர்பில் உண்மையினை அறிய ஒரு சுதந்திரமான குழுவினை அமைத்தல், நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக ஆரம்பிப்பதில் இருந்து தொடங்கி சுயஆட்சியை நோக்கிய இறுதி இலக்கை எட்டுவது போன்ற அரசியல் தீர்வு குறித்த விடயங்களையும் தாம் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருவதாகவும் அதில் தெரிவித்துள்ளார்.

எமது மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக அளப்பரிய அர்ப்பணங்களைக் கடந்த காலங்களிலும் ஆற்றியிருந்த தாம், இன்றைய சமகால சூழலுக்கு ஏற்றவாறு சுயநிர்ணய உரிமைகுறித்து தடைகள் இன்றி அரசியல் தீர்வு முன்னோக்கி முன்னேற முடிந்த நடைமுறைச் சாத்தியமான கருத்தினை வலியுறுத்தியிருந்ததாகவும், மக்களின் மகிழ்ச்சியே தமது மகிழ்ச்சி என்றும் அதற்காக தாம் நடைமுறை சார்ந்து நின்று எடுத்த பயணத்தை தொடர்ந்தும் நடத்தியே முடிப்போம் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் பேசும் தலைமைகள் யாவும் நடைமுறைச் சாத்தியமான வழிமுறைக்கு வருவதற்கான சந்தர்ப்பம் இன்னமும் இருப்பதாக தெரிவித்த அமைச்சர், அதற்காக கடந்த காலங்களில் தாம் சந்தித்திருந்த கசப்பான அனுபவங்களை எமது மக்களின் மகிழ்ச்சி கருதி மறந்து ஐக்கியத்திற்கான தமது கதவுகளை தொடர்ந்தும் திறந்து வைத்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IIS CITY CAMPUS

# ADMISSIONS ARE OPEND FOR JANUARY 2010 INTAKE

| Courses | Duration | Awarding Body |
|---|---|---|
| **Department of Computing** | | |
| Higher National Diploma in Computing (General) | 2 Years | edexcel |
| Higher National Diploma in Computing (ICT System Support) | 2 Years | |
| Higher National Diploma in Computing (Soft ware Development) | 2 Years | |
| Higher National Certificate in Computing (Soft ware Development) | 1 Years | |
| **Department of Civil Engineering** | | |
| Higher National Diploma in Civil Engineering | 2 Years | edexcel |
| Higher National Diploma In Quantity Surveying | 2 Years | |
| Diploma in CAD & BS | 6 Months | IIS City Campus |
| **Department of Business & Management** | | |
| Higher National Diploma in Business Management | 2 Years | edexcel |
| Higher National Diploma in Business (Marketing) | 2 Years | |
| Higher National Diploma in Business (Finance) | 2 Years | |
| Higher National Diploma in Business (Human Resource Management) | 2 Years | |
| Higher National Diploma in Business (Information Technology) | 2 Years | |
| Master of Business Administration (MBA) | 2 Years | MANIPAL |
| **PG Diploma in Marketing** | | |
| Introductory Certificate in Marketing | 3 Months | CIM The Chartered Institute of Marketing |
| Professional Certificate in Marketing | 6 Months | |
| **PG Diploma in Marketing** | | |
| Preliminary Certificate in Marketing | 3 Months | SLIM Sri Lanka Institute of Marketing |
| Certificate in Marketing | 6 Months | |
| **Certified Management Accountant** | | |
| Technician Stage | 6 Months | CMA |
| Intermediate Stage | 6 Months | |

SUCCESS THROUGH KNOWLEDGE

கற்கை நெறிகள் தொடர்பான மேலதிக விபரங்களை 021-4900900 என்னும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும். மேலும் ஆர்வமுள்ளவர்கள் இவ்விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புவதன் மூலம் இக்கற்கை நெறி தொடர்பான மேலதிக விபரங்கள் உங்களிற்கு அனுப்பி வைக்கப்படும்.

1.Name of the Applicant : ..................

2. Address ..................

3.Telephone ..................

4.Qualification A) G.C.E (O/L) .................. B) G.C.E (A/L) .................. C) Others ..................

5. The Streams of Study: a) Maths ☐ b) Bio ☐ c) Arts ☐ d) Commerce ☐


6.Course interested Study: ..................

For Office Use only

Edexcel International
'A' rated center for quality for the 5th consecutive year

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road,
Jaffna.
Tel: 021 222 8060
Fax: 021 222 6933
Email: iiscc @sltnet.lk
Web:www.iiscitycampus.com


## கண்ணீர் அஞ்சலி



யாழ்/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்தாபகரும்,முன்னாள் ஆசிரியரும், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளருமான

**அமரர் செல்லப்பா சின்னத்தம்பி**
(புலவர் வாத்தியார்)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யாழ்/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை.

(க/562740)

## மரண அறிவித்தல்



**நடேசு பரஞ்சோதி**
(முன்னாள் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்)

கரவெட்டி செங்குந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு பரஞ்சோதி 22.11.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியின்ரின் இளையமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் பகவதி மற்றும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா, கனகசபாபதி (செவ்வந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செந்தூரன் (நோர்வே), மயூரன் (நோர்வே), மயூரி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜியேந்திரா (நோர்வே), யசிந்தா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆதவன், ஆரணி, அனுராம் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2009) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ராஜர் பேக்கரி,*
*வதிரி, கரவெட்டி.* (சி/562746)

தகவல்: குடும்பத்தினர்
T.P.021 226 4295

## ஆசிரியர் செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 27

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர்தரத்தில் பொருளியல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும் நாளையும் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள விசேட கல்வி அலகில் நடைபெறவுள்ளது.

இதேவேளை - தரம் 10 இல் முயற்சியாண்மை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 5 ஆம் திகதி இதே இடத்தில் நடைபெறும். (ஒ-38)

* * *

தரம் மூன்றில் கல்வி கற்பிக்கும் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கலைத்திட்ட அமுலாக்கல் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை சங்கானை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு முறையே சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாசாலையிலும், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் செயலமர்வுகள் நடைபெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை உடுவில், தெல்லிப்பழைக் கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (ஒ-38)

* * *

வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்படும் தரம் 9 வரலாறு பாடச் செயலமர்வு மானிப்பாய் ஆசிரிய வளநிலையத்தில் நடைபெறும்.

சண்டிலிப்பாய், சங்கானை கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு நாளை சனிக்கிழமையும் உடுவில் தெல்லிப்பழை கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையும் செயலமர்வு நடைபெறவுள்ளது. (ஒ-38)

## ஆனைக்கோட்டையில் வீடு, காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் 4 பரப்புக் காணியுடன் 2300 சதுர அடி விஸ்தீரணம் உள்ள வீடு விற்பனை செய்யப்படவிருக்கிறது.

நாளை சனிக்கிழமை (28.11.2009) மு.ப. 11.30 மணிக்கு இந்த விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு
0776029164, 0775925386

## 72ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

தோற்றம்
27 ★ 11 ★ 1937



மறைவு
25 ★ 04 ★ 2008

**அமரர் கந்தையா பரஞ்சோதி**
(முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், கல்வியங்காடு)

உள்ளத்தை எங்களிடம் தந்துவிட்டு ஊமையாய் ....
நீங்கள் உறங்குவதை உள்ளங்கள் ஏற்கவில்லை
அப்பா! நீங்கள் இல்லாததனால் எங்கள்
இதயம் நீர் இல்லாத நிலம்போல் ஆகிவிட்டது
நீங்கள் காட்டிய வழியில் என்றும் வாழும்...

257, ஆடியபாதம் வீதி, நல்லூர். குடும்பத்தினர்.

(92506)

## மரண அறிவித்தல்

**திருமதி தர்மரத்தினம் சிவமணிதேவி**
(சின்னக்கா)



கரணவாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், கனடா, ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மரத்தினம் சிவமணிதேவி 24.11.2009 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் தர்மரத்தினத்தின்(கனடா) அன்பு மனைவியும், புனிதாம்பிகை (கனடா), சுசீந்திரன்,முகுந்தன் (கனடா), நிஷாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆறுமுகராசா (கனடா), பானுரேகாவின் (கனடா) பாசமிகு மாமியாரும், நிலேஸ் (கனடா), நிலக்ஷன்(கனடா) கர்ஷன்(கனடா) ஆகியோரின் பேர்த்தியும், பாலசிங்கத்தின் (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்) சகோதரியும், மகாராணியின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2009) சனிக்கிழமையன்று கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*
*தொ.பே.இல- 0014164124349* (90972)

தகவல்:
குடும்பத்தினர் சார்பில்
சி.பானுராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின

யாழ்ப்பாணம், நவ.27

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று இணையத்தளத்தில் வெளியாகின. தமிழ் மொழி மூலத்தில் தேசிய மட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் ஜோன் நிராஜ் கணிதத் துறையில் முதலிடம் பெற்றுள்ளார்.

இணையத்தளத்தில் வெளியான பரீட்சைப் பெறுபேறுகளை சில பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் ' உதயன்' அலுவலகத்துக்கு அனுப்பி இருந்தனர்.

எமது அலுவலகத்துக்கு முற்கொண்டு கிடைத்த பெறுபேறுகளின் விவரம் வருமாறு:-

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

**கணிதம்**

ஏ.சி. ஜோன் நிராஜ் - 3ஏ (மாவட்ட மட்டம் முதலாம் ஆம் இடம், அகில இலங்கையில் கணிதத்தில் முதலாம் இடம்),எஸ். பிரசாத் -3 ஏ, ரி.ஜெயந்தன் - 3 ஏ,எஸ். தனஞ்சியன்-3ஏ, எஸ். ராகுலதீபன்- 3 ஏ, அன்ரன் சகாய ராஜா-3 ஏ-

**வர்த்தகம்**

ஆர். வர்ணம் -3 ஏ, எஸ். தனசிவன்-3ஏ

**கலை**

எஸ். ஜனகன் - 2 ஏபி, எஸ். சுகந்தன்- 2 ஏபி

**உயிரியல்**

எஸ். மோகனப்பிரியன்- 2 ஏ, பி, வீ. நிதீஸ்வரன்-2 ஏ, பி

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

**வர்த்தகம்**

வி. பிரியங்கா- 3ஏ.

**கலை**

நா. நிரோஜா - 3ஏ, ச. நிசாந்தி - 3ஏ, சி.அருண்ஜா - 3ஏ.

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

**உயிரியல்**

சி. ரகுவரன் - 2 ஏபி.

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி**

**கலை**

பொ. விஜிதா - 3 ஏ,

**வர்த்தகம்**

எஸ். டிலானி - 2 ஏபி.

**பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி**

**கலை**

ஆ. நிஜிதா - 3ஏ

**கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி**

**கலை**

த. கசிதா - 3ஏ,

**வர்த்தகம்**

ச. சயந்தன் - 2 ஏபி

**கணிதம்**

எஸ். மதுசுதா - 2 ஏபி

**உயிரியல்**

பி. சூரியதட்சாயினி - ஏபிசி.

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

**கணிதம்**

ஸ்ரீ. சுபாங்கன் - ஏபிசி, செ.நிஷாந்தன்-பி2சி,

**உயிரியல்**

தி.முகுந்தன் - ஏ2பி, எ.டினேஸ் - பி2சி, தெ.தீபன் - பி2சி, ஜெ.துஜீபன் - பி2சி, சா.மஜிந்தன் - பி2சி -

**வணிகம்**

ச.செல்வரஞ்சன் - ஏ2பி

**கலை**

வி.புலேந்திரன்- 2ஏபி, இ.சுதாகரன் - 2ஏபி, இ.ததீஸ்குமார் - 2ஏசி, இ.கங்கைகோபாலன் - ஏ2பி, செ.சுதர்சன் - ஏ2பி, இ.இந்துதாஸ் - ஏ2பி, வெ.வினோத் - ஏ2பி,மு.வினோத் - ஏபிசி, அ.கியூட்ரிக் - ஏபிசி, வி.அன்ரனி - ஏபிசி, றீ.ஜெயரட்ணம் - ஏ2சி, ஞா.தனுசன் - ஏ2சி, சு.இராஜேஸ்கரன் - ஏ2சி, இ.ரசீகரன் - ஏ2சி -

**யாழ். இந்துக் கல்லூரி**

**கணிதம்**

க.எழில்வேள்-3ஏ, அ.புருசோத்மன்-3ஏ, உ.தனசிறி-3ஏ, பே.பிருந்தன்-3ஏ, ச.ஆதவன்- 3ஏ, ம.ராகவன்-3ஏ, வி.தர்சன்-3ஏ, க.சுரேஷ்குமார்-3ஏ, நா.கபிலன்- 3ஏ, பா.அருண்-2ஏபி, க.கமலபாலன்-2ஏபி, வி.துசானன்-2ஏபி, அ.கோபிநாத்-2ஏபி, எஸ். சேரன்-2ஏபி, ச.கௌசிகன் - 2ஏபி, கு.நிவேஜிதன்-2ஏசி, எஸ்.வகுலன் -2ஏபி, எஸ்.உமாதரன் - எ2பி, இ.கஜந்தன் - 2ஏசி, இ.கோபிராஸ் - 2ஏபி, பி.கேதாரன் - 2ஏபி, ம.விஜிகரன் - ஏ2பி, க.சரவணன் -ஏ2பி, தே.ரகுபரன் - ஏ2பி, எ.சித்தாத்தன் - 2ஏசி, எஸ்.விக்கினேஸ்வரன்-ஏ2பி, எஸ்.வினோஜ் - ஏ2பி, எஸ். சியாம்குமார் - 2ஏசி,

**மருத்துவம்**

பி.துஷ்சியந்தன் - 2ஏபி, பி.கபிலேசன் - 2ஏபி, ரி.சஞ்சயன்-3ஏ, ஜி.சுதர்சன் - 2ஏபி, ரி.ரசில்கரன்-2ஏபி, எஸ்.நிமலன் - 2ஏபி, பி.பிரசாத்-2ஏபி, பி.ஞானசேகர் - 3பி, எஸ்.நிசந்தன்-3பி.

**வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி**

**கணிதம்**

உ.தனுசா-3ஏ, லோ.தக்சாயினி - 2ஏபி, ரா.ரோகினி-2ஏபி, ச.தேனுஷா-ஏ2பி, ப.மதுவந்தி-ஏ2பி , க.பவித்திரா - ஏ2பி.

**உயிரியல்**

க.பவித்தரா -2ஏபி, ச.சுவர்ணா - 2ஏபி, ஜெ.ஜனனி-2ஏபி, சி.லக்ஷாயினி-2ஏபி, வி.கவினா-ஏ2பி, சே. சரண்யா-ஏ2பி, சோ. நிரோசிகா-ஏ2பி, ச.லக்சிகா-ஏ2பி, ப.சுவர்ணா - ஏ2பி, ச.பிரதாஜினி - ஏ2பி, யோ.வினோதா - ஏ2பி, ப.ருக்சாயினி - ஏபிசி, ஞா.மேனிசா -ஏபிசி.

**வர்த்தகம்**

ப.சியாமா-3ஏ, ச.ஐஸ்வரியா-3ஏ, ரா.நிரூஜா - 3ஏ, சி.நிசாலினி-2ஏபி, ரா.ஜலதாரணி - 2ஏபி, ச.கஜந்தி - 2ஏபி, ஜோ. ஜரின் யூலிற்றா-ஏ2பி, மு.வித்துஜா-ஏ2பி, சி. சுரேக்கா-ஏ2பி, பா.ஜசிந்தா-ஏ2பி, பொ. அனிற்ரினா - ஏ2பி, ச.வனோஜினி ஏ2பி.

**கலை**

அ.செரின் ஷரோமி-3ஏ, ம.சிவாஞ்சலி - 3ஏ, ஸ்ரீ.லஷ்சியா-3ஏ, ச.சத்தியாயினி - 2ஏபி, க.திபியா-2ஏபி, பா.சிந்துஜா-2ஏபி, க.சாகித்தியா-2ஏபி, ர.தாமிரா-2ஏபி, ப.தீபா-2ஏபி, கு.தேனுஷா-2ஏபி, த.துளசிகா-2ஏபி, ர.டயாளினி-2ஏபி, ஆ.சாளினி-ஏ2பி, இ.சஞ்சிகா-ஏ2பி, ஸ்ரீ.தனுசியா-ஏ2பி, சி.பிரியஸ்கா - ஏ2பி, சி.சிவரஞ்சினி - ஏ2பி, ரா.தர்சினி-ஏ2பி, ந.கீர்த்தனா -ஏ2பி, ஸ்ரீ.காயத்திரி-2ஏஎஸ், த.யசிக்கா பிரசாந்தி - 2ஏசி, ஜீ.அஜந்தாஜினி -ஏபிசி, ச.டிலக்ஷா - ஏபிசி, ஜெ.நிறைஜா-ஏபிசி, வே.பிருந்தா-ஏபிசி, ர.சஸ்மிதா-ஏபிசி, அ.பிரமிலா - ஏபிசி, கே.கௌசிகா-ஏபிசி, நா.துவாரகி - ஏபிசி, பா.மதுஷனா-ஏபிசி

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

சு.தேவகி - 3ஏ, கே.டினேஸ்குமார் -ஏ2பி, மு.சிந்துஜா - எ2பி, த.கிருசாலினி - ஏ2பி, எஸ்.மகிஜா - ஏபிசி, எஸ்.அனுஷா - ஏபிசி, அ.ஜோன்ஜிப்ரிக்கோ-ஏ2சி, ச.தனுசா-3பி, ஜி.றொஜீவா-2பிசி, எஸ்.சிந்துஜா-2பிசி, கே.தர்மிகா-2பிசி, ஜி.நிதூசன்-2பிசி, க.சரண்ஜா-2பிசி, தி.ஜென்சியா - 2பிசி, சி.புவிராஜ் - 2பிஎஸ், கு.தர்மதாஸ் - 2பிஎஸ், வ.ஜிந்துஜா -2பிஎஸ்-

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

**கணிதம்**

ஸ்ரீ.தமயந்தி-3ஏ, லி.நரேஸ்குமார் - 3ஏ, ந.சுபேசன் 3ஏ, ந.யாதவன் - ஏ2பி, ச.சேந் தன் - ஏபிசி, இ.கஜதர்சன் - ஏ2பி, த.சிந்துஜன் - ஏபிசி, ச.ஜனனி - ஏபிசி, த.பிரவிந்தன் - 2பிசி, ந.யசோதரன் -2பிசி, வி.வி னோதினி - 2பிசி,கு.அபிராம் -பி2சி.

**உயிரியல்**

செ.மதரன் - 2பிசி, கி.டல்சினி - 2பிசி, த.பார்த்தீபன்-பி2சி, ச.அனோஜன் - பிசிஎஸ், ர.குயின்ரன் - பிசிஎஸ்,

**வர்த்தகம்**

இ.புவிராஜ்-3ஏ, ஜெ.சுதர்சன்-2ஏபி, ப.தர்சிகன் - 2ஏசி, செ.தனுஜா-2ஏஎஸ், ச.விஜயானந்தா - ஏ2பி, இ.ஜனனி - ஏ2பி, இ.கவ்யா - ஏ2பி, இ.சஜீந்திரன்-ஏபிசி - யோ.யுதர்சினி-ஏபிசி, இ.கலைவாணி - ஏபிசி, மா.சுந்தர்ஜா-ஏபிசி- பு.சிவரூபா - ஏ2சி, ஜெ.திவாகரன் - 3பி, உ.வினோஜா -3பி

**கலை**

செ.தீபிகா -2ஏபி, க.ஜனார்சன் - ஏ2பி, த.தனுஜா - ஏ2பி, சு.கஜானி - ஏ2பி, ந.பிரதீபா - ஏ2பி, ச.கார்த்திகா - ஏ2பி, க.கோகுலன் - ஏபிசி, சு.ரேணுகா - ஏபிசி, த.தர்சனா - ஏபிசி, சோ.லக்சனா-ஏபிசி, கி.பிரசாந்தி - ஏபிசி, தி.நிலோசா-ஏ2சி, தே.சாருஜா - ஏ2சி, க.சுவர்ணா-ஏ2சி, உ.ரவிசங்கர் - ஏ2சி, ப.போஜினி-3பி, வி.பிறேமியா -3பி.

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

**வர்த்தகம்**

பா.தேவரஞ்சினி - 3ஏ

**கலை**

பி.பார்த்தீபன் 3ஏ, வி.திவ்வியா - 2ஏபி, பா.நித்தியா-2ஏபி, எஸ்.சிஷாந்-2ஏபி, எஸ்.கஜந்தினி-ஏ2பி, துளசிகாந்த் - ஏ2பி, எஸ்.பார்த்தீபன்-ஏ2பி.

**யாழ்.கனகரத்தினம் ம.ம.வி.**

**கணிதம்**

வ. சுஜேந்திரா - 2 ஏபி, ம. மதுரகீதன் - 2பிசி, ச. கிருஸ்ணதாஸ் - 2 சிஎஸ், செ. குணாளினி - சி 2 எஸ்,

**உயிரியல்**

யோ. ஜீவன் - பி 2சி, ச. கஜனி - 3 சி,

**வர்த்தகம்**

சு. சபீனா - 3 ஏ, அ. கோபிநாத் - 2 பிசி, இ. ரவிச்சந்திரன் - பி 2 சி, வி. விதுஷா பி 2சி, பா. ராஜ்குமார்-3 சி,

**கலை**

வி. சுபேஜினி - 2 ஏ பி, சி. சுகந்தினி - 2 ஏபி, ம. கிருசாந்தி - 2 ஏபி, வெ. பிரதீபா - 2 ஏசி, ப. ஆரணி - ஏ 2பி, சி. சிவவிஜி - ஏ 2பி, தி. கிரிசாந் - ஏ 2பி, செ. விமல் - ஏ2பி, க. குகப்பிரியா - ஏ 2பி, மு. மனோஜ் பிரியா - ஏபிசி, ம. பிரபுராம் - ஏ 2சி, வி.அஜந்தினி - ஏ 2சி, ந. நிஷாந்தி - ஏ 2சி, ந. கார்த்திகா - ஏ சி எஸ், ச.காயத்திரி-ஏ சி எஸ், பே.பிரதீபா-2 பிசி, ஜெ. மைதிலி-2 பிசி, ம. தர்மினி-2 பிசி, அ. தீபாஜினி-2 பிசி, ஜெ. சபேசன்-2பிசி, இ.கீர்த்திகா-2 பிஎஸ், பு.கஜனிசலா-2 பிசி, ற.ஜெஸ்மின்-2 பிசி, சு. கேஷலா-பி 2சி,வெ.டிறக்சனா-பி 2சி, இ. அனோஜா-பி 2சி, பா.மனோஜ்-பி2சி, ச. நிரோசிகா-பி2சி,

# சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை தங்கம் கொள்வனவு

கொழும்பு, நவ.27.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கை 10 தொன் தங்கம் கொள்வனவு செய்துள்ளது. இந்தத் தகவலை சர்வதேச நாணய நிதியம் வாஷிங்ரனில் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கிக்கு இந்தத் தங்கங்கள் 375 மில்லியன் டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

உலக பொருளாதாரப் பிரச்சினையை எதிர் கொள்ளவும், வருமானத்துறையில் தங்கியிருப்பதைத் தவிர்க்கவுமே இந்த தங்கக் கொள்வனவு இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் தங்கத்தின் விலை அவுன்ஸ் ஒன்று 1170 டொலர்களாக அதிகரித்துள்ளது.

அதேவேளை, இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த இலங்கை மத்திய வங்கி, தங்கக் கொள்வனவு என்ற விடயத்தை மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(50)

# மஹிந்தவின் பிரசாரத்துக்கு பிரதமர் தலைமையில் குழு

கொழும்பு, நவ.27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு ஆதரவாக ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்குப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான உயர்மட்ட செயற்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இக்குழுவில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷவும் இடம் பிடிக்கிறார்.

10 அமைச்சர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் - முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரும் இக்குழுவுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்று அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவை எனக்கு ரொம்பப் பிடிக்கும் ஆதரவு கேட்கிறார் சரத் பொன்சேகா!

கொழும்பு, நவ. 27

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இந்தியாவின் தார்மீக ஆதரவைக் கோரியுள்ளார். இலங்கையை செழுமைப் படுத்தும் தமது எதிர்காலத் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவு வழங்கவேண்டும் என்றும் இலங்கையின் எதிர்காலத்தைத் தாம் வளப்படுத்துவதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் பொன்சேகா அகில இந்திய வானொலிக்கு வழங்கிய பேட்டியில் வேண்டுகோள் விடுத்துள்ளார்

தமக்கு இந்தியாவை ரொம்பப் பிடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்குத் தன்னால் இயலுமானவற்றை எப்போதும் செய்து கொடுப்பார் என்றும் அப்பேட்டியில் குறிப்பிட்ட அவர் தேர்தலில் போட்டியிடு வாரா? - என்ற கேள்விக்குப் பதலிளிக்கை யில் தமது திட்டங்களை [illegible] மக்களுக்கு [illegible]

# கோடா வைத்திருந்த இருவருக்கு ரூ.ஒரு லட்சத்து 20 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம் , நவ.27.

சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த பெண் உட்பட இருவருக்கு சாவகச்சேரி நீதி மன்றில் ஒரு லட்சத்து 20ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குகள் கடந்த வார இறுதியில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான் பெண்ணுக்கு 75ஆயிரம் ரூபாவும் மற்ற நபருக்கு 45ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்தார்.இவ்விருவரும் தந்தையும் மகளும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக அரச சாராயம் வைத்திருந்த எட்டுப் பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 62ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரித்திணைக்களத்தினர் நாவற்குழி தெற்கு, இடைக்குறிச்சி, மந்துவில் மேற்கு, மீசாலை வடக்கு, கைதடி தெற்கு, சரசாலை தெற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த எட்டுப்பேருக்கு எதிராகவே வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஒருவருக்கு 20ஆயிரம் ரூபாவும், மற்றொருவருக்கு 10ஆயிரம் ரூபாவும், மூவருக்கு தலா 5ஆயிரம் ரூபாவும், ஒருவருக்கு 6ஆயிரம் ரூபாவும், ஒருவருக்கு 3ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-207)

# முதலாவது ஊடக மாநாடு களனி ரஜமஹா விகாரையில்

கொழும்பு, நவ. 27

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகக் களமிறங்கும் ஜெனரல் சரத் பொன்சேகா, தமது அரசியல் பிரவேசத்துக்கான முதலாவது செய்தியாளர் சந்திப்பை விஹாரை ஒன்றிலேயே நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வரும் இந்தச் செய்தியாளர் மாநாடு பெரும்பாலும் களனி ரஜமகா விகாரையில் நாளை பெறக்கூடும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

செய்தியாளர் மாநாட்டுக்காக நான்கு, ஐந்து விஹாரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. எனினும், பாதுகாப்பு முன்னேற்பாடு கருதி எந்த விஹாரையில் அது நடைபெறும் என்பதை இறுதி நேரத்திலேயே தீர்மானித்து அறிவிப்பது என சரத் பொன்சேகாவுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. ஜே.ஆர். ஜெயவர்த்தனா போன்ற அர சியல் தலைவர்கள் தங்கள் அரசியல் பிர வேசத்தையும், பிற முக்கிய அரசியல் நடவடிக் கைகளின் ஆரம்பத்தையும் களனி விஹா ரையிலிருந்து மேற்கொண்டனர் என்பதால் அதே பாணியை பொன்சேகாவும் பின்பற்ற விரும்புகின்றார் என்று கூறப்படுகின்றது.

# கூட்டுறவு நகர் கிளை பெரியவிளானில் திறப்பு

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கத்தின் நான்காவது சிறிய கூட்டுறவு நகர் பெரியவிளான் கிளை 06இல் இன்று காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.

சங்கத்தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற உள்ள விழாவில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யாழ். மாவட்ட பொறுப்பாளர் சில்வஸ்ரின் அலன்ரின்(உதயன்) பிரதம விருந்தினராக் கலந்துகொள்வார். (ஒ-130)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறி சந்தேகநபர்களை நீண்டகாலம் காவலில் வைத்திருக்க அனுமதிக்க முடியாது!

## நீதியரசர் ஷிராணி திலகவர்த்தனா விசனம்

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்க கூடிய சந்தேகநபர் என்ற கூற்றை ஒரு போர்வை மறைப்பாக (Blanket Cover) பயன்படுத்திக் கொண்டு ஒருவரை நீண்ட நாள்களுக்குத் தடுத்து வைத்திருப்பதை அனுமதிக்க முடியாது.

இவ்வாறு உயர்நீதிமன்றத்தில் நேற்று விசனம் தெரிவித்தார் நீதியரசர் ஷிராணி திலகவர்த்தனா.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும்-இலங்கை வம்சா வழியைச்சேர்ந்த - ஐரிஷ் பிரஜையான குணசுந்தரம் ஜயசுந்தரம் என்பவர் தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா,சலீம் மர்சூக், கே.ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதியரசர் ஷிராணி திலகவர்த்தனா இவ்வாறு விசனம் தெரிவித்தார்.

2007 செப்ரெம்பரில் கொழும்புக்கு வந்த ஜயசுந்தரம் அதன் பின்னர் கைது செய்யப்பட்டு அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இவர் தடுத்து வைக்கபட்டிருக்கின்றமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரசுத் தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் தம்புள்ள டி லிவேரா ஆஜரானார்.

குணசுந்தரம் ஜயசுந்தரத்துக்கும் உலகம் முழுவதும் வியாபார மையங்கள் இருக்கின்றன எனவும், புலிகளுக்கும் இவருக்கும் தொடர்புகள் உள்ளன என்று சந்தேகிக்கப்படுவதால், இவர் தொடர்பில் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருக்கலாம் எனத் சந்தேகிக்கப்படுகின்றது என்று பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அந்தக் கருத்துக்குறித்தே விமர்சனத்தோடு விசனம் தெரிவித்தார் நீதியரசர் ஷிராணி திலகவர்த்தனா.

"கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் அனைவர் தொடர்பிலும், அவர்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது." என்று அரசுத்தரப்பினர் நீதிமன்றுக்கு வந்து சர்வசாதாரணமாகக் கூறிவிட்டு, அந்த நபர்களை நீண்ட காலம் காவலில் சிக்க 'வைத்துவிட்டுக் சும்மா இருக்கிறார்கள்.

இப்படியே தொடர்வதை நீதிமன்றம் அனுமதிக்க முடியாது. பார்த்துக்கொண்டு சும்மா இருக்க இயலாது.

இத்தகைய விடயங்களில் சந்தேகத்தை ஏற்படுத்துவதற்கான காரணங்களையும் நீதிமன்றத்துக்கு அரசத்தரப்பினர் வழங்க வேண்டும், தெளிவுபடுத்த வேண்டும். - என்றார் நீதியரசர் ஷிராணி திலகவர்த்தனா.

இவ்விடயம் குறித்து அரசுத்தரப்பு தனது முடிவைத் திட்டவட்டமாக வெளிப்படுத்துவதற்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கி, வழக்கை ஒத்திவைத்தது உயர் நீதிமன்றம். (அ-சி)

## கொழும்பு நகரில் மூடப்பட்ட வீதிகள் மக்கள் பாவனைக்கு

பாதுகாப்பு காரணங்களுக்காக கொழும்பு நகரில் மூடப்பட்ட வீதிகள் நேற்றிலிருந்து மீண்டும் மக்கள் நலன்கருதி திறக்கப்பட்டுள்ளன. எனினும் அலரிமாளிகையுடன் இணையும் பாதை பாதுகாப்பு காரணமாக இன்னமும் மூடப்பட்டுள்ளது என பொலிஸ் பேச்சாளர் டி.ஐ.ஜி. நிமல் மெடிவக்க தெரிவித்துள்ளார்.

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனோகணேசன் தலைமையில் நேற்றுக் கூடி ஆராய்ந்துள்ளது. இந்த முன்னணியின் உயர்மட்டக் குழுவைச் சேர்ந்த 27 பேர் பங்கேற்றனர்.

இவர்களுள் பெரும்பான்மையினரின் விருப்புக்கு ஏற்ப ஆளும் கட்சியை அரச கட்டிலிலிருந்து இறக்குவதுடன் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் எனக் கூறப்படும் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதா அல்லது தமிழ் மக்களின் மானசீக உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்க் கட்சிகளின் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா என்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் குறித்து பூரணமாக ஆராயப்பட வேண்டியிருப்பதால் நேற்றைய கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது எனவும் அது இன்று தொடர்ந்து நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

4 லட்சத்து 5 ஆயிரத்து 257 பாடசாலை பரீட்சார்த்திகளும் எஞ்சியவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் ஆவர்.

புதிய பாடத் திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 10 ஆயிரத்து 274 மாணவர்களும் பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 34 ஆயிரத்து 858 மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

சுமார் 70 ஆயிரம் பேர் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் - என்று அவர் கூறினார்.

## யாழ்ப்பாணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வை எதிர்வரும் 7 ஆம் திகதி நடத்துவதற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அதனை அடுத்த நாள் 8 ஆம் திகதி நடத்துவதற் கான நிகழ்ச்சி நிரல் நேற்று வெளியா கியுள்ளது.

அதன் பிரகாரம் ஜனாதிபதி இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின் சில நிகழ்வுகளிலும் பங்குபற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சர் பிரேமஜயந்தவும் ஜனாதிபதியுடன் யாழ்ப்பாணம் வர விருக்கிறார். (அ-1)

## மாவட்ட மட்டத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மொழி மூலம் கணிதத் துறையில் முதலிடம் பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் ஜோன் நிராஜ் உதயனுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்திலும் தமிழ் மொழி மூலம் தேசிய மட்டத்திலும் கணிதத்துறையில் முதல் இடங்களைப் பெற்ற அன்ரன் கிறிஸ்டர்ஸ் ஜோன் நிராஜ் உதயனுக்கு அளித்த செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:-

சின்னவயதில் இருந்ததே பொறியியலாளராக வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் துளிர்த்தது. அந்த இலக்குடன்-இலட்சியத்துடன் தொடர்ந்து பயின்று வந்தேன். எனக்குச் சிறுவயதில் இருந்து கல்வி புகட்டிய ஆசிரியர்கள் எனது பெற்றோரும் வழங்கிய ஊக்கம்தான் சிறந்த பெறுபேற்றைப் பெற உதவியது.

பாடசாலையிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் பெற்ற கல்விக்குப் புறம்பாக எனது நண்பர்களுடன் சேர்ந்து சுயமாக பயிற்சிகளை மேற்கொண்டதும் எனது பெறுபேறு சிறப்பாக அமையக் காரணமாக அமைந்தது.

எனது முன்னேற்றத்தில் எனது அப்பா, அம்மா, அக்கா, அத்தான் ஆகியோர் அதிக அக்கறை காட்டினார்கள். அவர்கள் எனக்கு வழங்கிய ஊக்குவிப்பு, ஒத்துழைப்பு என்பன காரணமாக இப்படியொரு சாதனையை நிலைநாட்ட முடிந்தது. தொடர்ந்து கல்வியில் உயர்ந்து முன்னேற்றப் பாதையில் சாதனைகள் படைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ளேன்- என்றார். (அ-1)

## மினி பஸ்களும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையிலான பயணிகள் பஸ் சேவையில் ஈடுபடுத்துவதற்காக தரம் வாய்ந்த 50 பஸ்களின் விவரங்களைத் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் அரச அதிபரிடம் அனுப்பி வைத்துள்ளது.

அந்த பஸ்களில் முதற்கட்டமாக 10 பஸ்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவை இந்தச் சேவையில் ஈடுபடக் கூடிய நிலையில் உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்வதற்காக இன்று காலை 9 மணியளவில் யாழ். செயலகத்தில் பரிசோதனைகள் இடம்பெறும். இந்த பஸ்கள் பயணிகள் சேவையில் ஈடுபடும் திகதி அரச அதிபரால் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## எதிர்க்கட்சிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக நியமிப்பது என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவை ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துள்ளது என கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டவுடன் அரசமைப்பு கவுன்ஸிலொன்று ஏற்படுத்தப்படும். பொது உரிமைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி வரும் சட்டங்கள் அனைத்தும் உடனடியாக அகற்றப்படும் என அவருடன் ஒப்பந்தமொன்றுக்கு வந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

"ஊடகங்களினதும், தொழிற்சங்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாகவும், மனித உரிமைகள் குறித்தும் அவருடன் ஒப்பந்தத்திற்கு வந்துள்ளோம்'' என்றும் அவர் தெரிவித்தார்.

"காபந்து அரசொன்று உருவாக்கப்படும். இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதற்காக அர்த்தபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' என்றும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் நீதியாகவும், நேர்மையாகவும் நடைபெறும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீரவும் தனது கட்சி ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜெனரல் சரத் பொன்சேகா தனது நிலைப்பாட்டை அறிவிப்பார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

NEW SCIENCE-HALL JAFFNA
DAY CLASS
2009 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது.
★ கணித உயிரியல் பிரிவு ★
பிரிவு II
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்: 30.11.2009
திங்கள் காலை 8.30 (சி/562748)

அதிரடி விலைக்கழிவு
★ டிஜிட்டல் பனர்
★ ஸ்ரிக்கர்
என்பவற்றை பிரதியாக்கம் செய்திட சதுர அடி 70/= மட்டுமே. (சி/562747)
ஆர்த்தி டிஜிட்டல் கலர் லாப், யாழ்ப்பாணம்.

"கணித பாட கருத்தரங்கு"
TARA INSO TECH
Hensman Road,Chavakachcheri
தென்மராட்சி பிரதேச க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை தயார்ப்படுத்தும் முகமாக இலவச கணித பாட கருத்தரங்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இம்மாதம் 28,29 சனி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணிமுதல் 12.30 மணிவரை நடைபெற இருப்பதனால் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
TARA INSO TECH
Hensman Road,
Chavakachcheri,
Tel.021-5102600,0773784186. (S2514)

VACANCY @ MANIPAY
எமது கணனி நிறுவனத்திற்கு Ms Office, DTP, Accounting Package தெரிந்தவர்கள் உடன் தேவை (Female). தகுதி உடையோர் எதிர்வரும் 05/12/2009 ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் Bio Data வை கீழ் வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (சி/562750)
The Director,
UNI TECHNOLOGY,
ICT Education Trainers,
Jaffna Road, Manipay. T.P No:- 0777-110 862/ 021 7429325

அன்புடன் அரவணைக்கும் செலான் வங்கியானது
நவம்பர் 30 ஆம் திகதி முதல் வடக்கில்...
நெல்லியடி, மானிப்பாய், சங்கானை நகரங்களில் சேவையை விஸ்தரிக்கின்றது
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

Day 3-27.11.2009
உலக எயிட்ஸ் தினம் - World AIDS Day 2009
HIV/ AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும், மனித உரிமைகளை மதித்தலும் "Universal Access and Human Rights"
HIV தொற்றக்கூடிய சந்தர்ப்பங்கள்
* பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புகள் மூலம்
* தொற்றுள்ள தாயிலிருந்து குழந்தைக்கு (25% - 45%) கர்ப்பத்தின் போது, பிரசவத்தின் போது அல்லது தாய்பால் ஊட்டும் போது
* வேறுஒருவருக்குப் பாவித்த அல்லது தொற்று நீக்கம் செய்யாத உபகரணங்களைப் பாவிப்பதால் (ஊசி, சவர அலகு)
* தொற்றுள்ளதா என பரிசோதிக்காத இரத்தத்தை ஏற்றுவதனால் அல்லது உடலிழையங்களை மாற்றுவதனால்
* சாதாரண வாழ்க்கை முறைகளில் HIV தொற்றுவதில்லை. எனவே HIV தொடர்பில் வீணாகப் பயம் கொள்ளத் தேவையில்லை.
HIV அதிக செறிவில் காணப்படும் உடற்பாயங்கள்
குருதி, ஆண்களின் சுக்கிலப்பாயம், பெண்களின் யோனிமடற்சுரப்பு, பெண்களின் கருப்பை கழுத்து சுரப்பு.
தாய்ப்பால், மூளை முண்ணான் பாயம், அமினியன் பாயம்.
HIV குறைந்த செறிவில் காணப்படும் உடற்பாயங்கள் வியர்வை, கண்ணீர், உமிழ்நீர், மலம், சிறுநீர்.
நிதியுதவி
ஆக்கம்: சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்.
அனுசரணை
TRRO LIMITED

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனுக்கு இன்று அகவை 24 நிறைவு



## சீரோடும் சிறப்போடும் மேலும் ஓங்கி வளரட்டும்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் எமது அபிமானப் பத்திரிகையான "உதயன்" நாளிதழ் இன்று இருபத்தி நான்கு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இருபத்தைந்து வயதில் வெள்ளி விழாவுக்கு காலடி வைப்பதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

எத்தனையோ இடையூறுகளுக்கு மத்தியில் 'உதயன்' வளர்ந்து இன்று இருபத்தைந்து வயது இளைஞனாகத் தலை நிமிர்ந்து கம்பீரமாக ராஜ நடைபோட்டு வெற்றிக் களிப்புடன் காட்சியளிக்கின்றான்.

மக்கள் மனம் நிறைந்த நாளிதழாக யாழ். மக்களின் இதயத்தனில் இடம்பிடித்துக் கொண்ட 'உதயன்' உத்தமமான நேர்வழியில் தடம் பதித்து தொடர்ந்து வெளிவந்து சீரோடும் சிறப்போடும் திகழ வேண்டுமென்று இந்த நல்ல நாளில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

உன்னத நிலையில் உண்மையாக நின்று உலகம் போற்றும் உயர்ச்சி பெற்று உதயவேளையில் நம்மிதயம் மகிழ, நாளும் வெளிவந்து எல்லோரது கரங்களிலும் திகழ வேண்டுமென நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து, தொல்லை வினை தீர்க்கும் நல்லைக்கந்தனின் திருவடி வணங்கி, உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குவதில் பெருமகிழ்ச்சி பெற்று இறும்பூதெய்துகின்றோம்.

இனி,

இன்று முதல் புதுப்பொலிவுடன் மலர்ந்து மணம் வீசி, மக்கள் மனம் நிறைந்து உளம் மகிழ்ந்து எல்லோரும் வாசித்து, நேசித்து உதயனைப் பூசித்து நிற்க வேண்டுமென வாழ்த்தி அமைகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.



## பத்திரிகைத் தர்மத்தைச் செங்கோலாகக் கொண்டு பணிசெய்க

கடந்த 24 ஆண்டுகளாக தமிழ் பேசும் நல்லுலகிற்கு தமிழ் மக்களின் வாழ்வியல்பை உறுதியுடனும் வெளிப்படையாகவும் எடுத்துக் கூறும் உதயனுக்கு தமிழ் பேசும் மக்கள் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கடந்த 24 வருடங்கள் தமிழ் பேசும் மக்களின் வாழ்வியலில் அனேக துன்ப துயர வடுக்கள் நிறைந்த காலம் என்பதை மறந்துவிட இயலாது. யுத்தம் முடிந்த போதிலும் மீள் கட்டுமானப் பணிகளும் மீள் குடியேற்றமும் மக்களின் சுதந்திரமான நடமாட்டமும் அனைத்து இன மக்களின் சமத்துவமும் உருவாக்கப்படும் பொழுதே முழுமையான அமைதியையும் சமாதானத்தையும் எமது மண்ணில் காண முடியும். இதற்காக உதயன் கடந்த காலங்களில் தனது முழுமையான அர்ப்பணிப்புடனும் தியாகங்களுக்கூடாகவும் தனது கடமையை செய்து வந்தமை நாம் அறிவோம். அதே சிந்தையுடனும் உறுதியுடனும் எதிர் காலத்திலும் பக்கச் சார்பற்ற பத்திரிகைத் தர்மத்தை செங்கோலாகக் கொண்டு மக்களின் நல்வாழ்வுக்கான மனித அறிவின் பயன்பாட்டிற்காக தனது முழுமையான பங்களிப்பை ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் வழங்குவாராக. உதயன் பிரதம ஆசிரியர், பத்திரிகைச் செய்தியாளர்கள், பணியாளர்கள், வாசகர்கள் அனைவரையும் வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

வண.செ.பி.நேசகுமார்
யாழ் குருமுதல்வர்,
இலங்கைத் திருச்சபை.



## மேன்மேலும் பணி தொடரட்டும்

வரலாற்றுக்கால ஓட்டத்தில் கழிந்து போன கால் நூற்றாண்டு காலமாக ஊடகத்துறையில் ஊன்றிக் கால் பதித்து நிற்கும் உதயன் பத்திரிகை, அனைத்து மக்களுக்கும் நீதி தேடி, சப்தமிடுகின்ற சங்கநாதமாக, மென்மேலும் வளர வாழ்த்துகின்றேன். அல்லாஹ் அதன் ஆயுளை நீடிப்பானாக.

ஆமின்
மௌலவி
எம்.ஐ. மஹ்மூது ஆலிம்
(பலாஹி)



## நன்றே வளரும் உதயன் நலமாக வாழ்க! வாழ்கவே

அறியாமை இருளில் சிக்கித் தவிக்கும் மக்களை, சிந்தனைத் தகுதிகளை அறிந்தும், பின் தவறிய சாயலில் நலிவுறும் அறிவாளிகளை, நாடு நன்னெறிகளால் உயர வேண்டும், மக்கள் அதன் மூலம் மாட்சிமை கொள்ள வேண்டும் என்ற கோட்பாடுகளை கொண்டுள்ள சமூக சேவையாளர்களை, பக்திநெறியூட்டி அந்தப் பக்தியின் விசுவாசப் போக்கில் பக்தர்களை நகர்த்த வேண்டுமென விரும்பும் குருமார்களின் பலதரமான ஆதங்க அறிவுப் பசிக்கு காலங்காலமாக உதயன் நல்விருந்தளித்து உதவுவது வேறு எந்தப் பத்திரிகையும் போன்று முயற்சித்ததில்லை.

கட்டுரைகள், கவிமலர்கள், சிதறல் செய்திகள், மனதைத் தட்டியெழுப்பிவிடும் ஆசிரிய தலையங்கங்கள் செய்திகள் என்பனவற்றைத் தந்து எத்திசையும் புகழ் மணக்க மணம் வீசும் மனோரஞ்சித மலராக ஆரம்பித்ததிலிருந்தே உதயன் வலம் வருவதும் ஒரு தவச் செயலே.

வகைதொகையின்றிக் காணப்படும் கொடுமைகளையும், எரிமலையாகக் கொதிக்கும் அடாவடித்தனங்களையும், மனக்கொதிப்பின் பிரதிபலிப்பை உணர்த்தும் சஞ்சலங்களையும் வாசகர்களுக்கு அறியத் தந்து நிற்பவன் உதயன் ஒருவனே. மக்கள் துன்பநெறி எனும் சுற்றுக்குள்ளே நின்று சுழன்று சுழன்று அல்லற்படும் அவல நிலைமைகளைக் கூட வாசகர்களுக்கு அறியத்தந்து இத்தகைய அவலங்களுக்கு வாசகர்களது அனுதாபம், பரிகாரம் எழுச்சிபெற்று ஆவன செய்யவேண்டும் எனும் தூண்டல்களையும் உதயன் உச்சரிப்பதும் வழமையாயிற்று.

இப்படியே ஆப்த நண்பனாக ஈழநாட்டு மக்களிடம் உதயன் உரிமையோடு இரண்டறக் கலந்துவிட்டதும் ஓர் நற்பணியே. இக்காலங்களில் ஆடம்பரம், ஆரவாரம், அலட்சியப்போக்கு என்பன போன்றவற்றுக்கு ஆட்பட்டு அலைந்து, உலக வழக்கிற்கு இணங்காத செயற்பாடுகளை தடுத்துநிற்கும் உபாயங்களைக் கூட, ஓர் நண்பன் என்ற ரீதியில் உதயன் தனது செய்திகள் மூலமாகவும், அறிவுரைகள் மூலமாகவும் அவற்றை விலக்கி நல்வழிபோக ஆற்றும் தொண்டோ அபாரம்.

உதயன் எமது மக்களின் நண்பனே தான்.

"அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய வல்லார் நட்பு ஆய்ந்து கொளல்" என்றார் வள்ளுவர்.

சீரும் சிறப்போடும் " உச்சிமீது வானிடிந்து வீழ்ந்தாலும் அச்சமில்லை அச்சமில்லை" என்ற கொள்கையோடு இயங்கும் "உதயன்" பத்திரிகையும் இப்பத்திரிகையின் ஆன்ம விசாரங்களாக அணைத்து நிற்கும் பத்திரிகையாசிரியரும், அவரது சகாக்களும், தொண்டர்களும் உதயனது 24 ஆவது அகவை நிறைவு தினத்தில் எவ்வாறு இன்புற்று அகமகிழ்கிறார்களோ, அதே போன்று வருங்காலங்களிலும் சிறப்புடன் இயங்க வேண்டுமென ஆசீர்வதித்து, மாவைக் கந்தனது திருவருட் துணைகளும் உதயனுக்குக் கிட்ட வேண்டும்மெனவும் பிரார்த்திக்கின்றேன்.

மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக்குருக்கள்
மாவை ஆதீனகர்த்தா பிரதம குரு,
மாவையாதீனம், மாவிட்டபுரம்.



## சூரியன் போல் தினமும் ஒளிரட்டும்

அகவை இருபத்திநான்கினைப் பூர்த்தி செய்யும் உதயன் பத்திரிகையை வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். பிரதம ஆசிரியரின் அர்ப்பணிப்பான தொண்டும், ஏனைய ஆசிரியர்கள், பணியாளர்களின் தூயபணியும் உதயன் பத்திரிகையின் வாழ்வுக்கு பெருந்துணையாக நிற்பதை யாவரும் அறிவர். உயிருக்கு உத்தரவாதம் அற்ற வேளையிலும் உதயனின் வருகைக்காக உழைத்தவர்கள், உயிரைக் கொடுத்தவர்களை என்றும் மறக்கமுடியாது. உள்ளதை எழுதுங்கள், உண்மையை வெளியிடுங்கள், உரிமையை பெற்றுக் கொடுப்பதில் உறுதுணை செய்யுங்கள். பகைமையை விரட்டி எங்கும் அன்பையும் ஒற்றுமையையும் வளர்க்க அரியபணி தொடருங்கள். வெள்ளிவிழாக் காணத் தயாராகும் உதயன் பத்திரிகை தன் அனுபவமுதிர்ச்சியையும் அழகுப் பொலிவையும் நிலைநாட்டி புதுமை நிறைந்த பத்திரிகையாக, தலைமுறையை நெறிப்படுத்தும் பத்திரிகையாகத் தன் பணி தொடர வாழ்த்துகிறேன். நிர்வாக இயக்குநர் மற்றும் உதயன் வருகைக்காக உழைக்கும் அனைவருக்கும் இதய பூர்வமான வாழ்த்தைத் தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல துர்க்கா தேவியின் திருவருளால் சூரியன் நித்தமும் உதிப்பதுபோல் உதயன் தினமும் உதிக்க பிரார்த்தித்து அமைகிறேன்.

ஆறு.திருமுருகன்
தலைவர்
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை இலங்கை



## வாசகர்களது செல்வ மகன் உதயன்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளிவரும் நாளிதழான "உதயன்" தன் இருபத்துநான்காவது அகவையை நிறைவு செய்து கொண்டு இருபத்தைந்தாவது அகவைக்குள் கால்பதிக்கும் இவ்வேளையில் எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

உதயன் தன் வளர்ச்சிக் காலத்தில் சந்தித்த சோதனைகளும் இடையூறுகளும் பலவாகும். அவற்றையெல்லாம் வெற்றி கண்டு பற்றுறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் தன் சேவையை ஆற்றிவருவதற்கு உதயன் காத்து வருகின்ற பத்திரிகைத் தர்மமும் நடுவு நிலையுமே காரணமாகும். தன் பத்திரிகைப் பரப்பிலே பல்வேறு விடயங்களையும் தாங்கி வரும் உதயன் வாசகர்களின் செல்வ மகனாவான். அரசியல், சமூகம் என்ற மட்டில் தன் சேவையைக் குறுக்கிக் கொள்ளாமல் தமிழ் மக்களின் கலை, கலாசார வளர்ச்சிக்கான விடயங்களையும் தாங்கி வரும் உதயனின் சேவை பாராட்டப்பட வேண்டியதாகும்.

எல்லோரும் விரும்பிப் படிக்கும் உதயன் நாளிதழ் இன்னும் பல்லாண்டு காலம் தொடர்ந்து வீறு நடைபோட்டு வெளிவர வேண்டும் என்று நயினை நாக பூஷணியையும், அன்னை புவனேஸ்வரியையும் வேண்டிக் கொள்வதோடு, என் உளமார்ந்த ஆசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"ஸர்வே ஜனகா சுகிர்ணோ பவந்து"

பிரம்மஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக்குருக்கள்
பிரதம குரு, புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்,
கருமனை.



## மக்களின் அவல வாழ்வு நீங்கக் குரல் கொடுப்பவன் உதயன்

யாழ். பிரதேச மக்கள் சில வருடங்களுக்கு முன் குறிப்பாக 2006 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து பேரவலத்திற்குள் சிக்கி திறந்த சிறைச்சாலைக்குள் வாழ்ந்த காலத்திலும் பிரதேச மக்களின் அவலவாழ்வு நீங்கக்குரல் கொடுத்து அஞ்சா நெஞ்சத்தோடு சேவை செய்த நாளிதழ் உதயன். மேலும் யாழ். குடாநாட்டுப் பொது மக்களுக்கு மட்டுமென்றல்லாது ஈழத்துத் தமிழ் பேசும் மக்களுக்கும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழ் மக்களுக்கும் தனது சேவையைப் புதிய உத்வேகத்துடனும், புதுப்பொலிவுடனும் தளராத உறுதியுடனும் பணியாற்றியது உதயன்.

இதற்காக அடியேன் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். உதயன் நாளிதழை, குறிப்பாக வார வெளியீட்டைக் குழந்தைகள், பெரியோர்கள் ஆண்கள், பெண்கள் அனைவரும் ஆவலுடன் படிப்பதை நான் அவதானித்துக் கொண்டிருக்கிறேன். இன்று பத்திரிகைப் பணி மிகக் கடினமானது. எனினும் பல இடர்களின் மத்தியிலும் பத்திரிகைத் தொழிலை மேற்கொள்வதில் மிகுந்த மனநிறைவுண்டு. இன்று நமது யாழ். மண்ணில் உதயன் ஓர் அறிவுக்களஞ்சியமாகவும், ஆன்மீக, உளவியல் சமூகவியல், கல்விசார் விடயங்கள் அடங்கிய ஒரு சிறப்பான நாளிதழாக ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. இருபத்தைந்து ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் உதயனின் சேவை தினமும் தொடர எல்லாம் வல்ல காவல் தெய்வமாக விளங்குகின்ற நித்திய ஜோதியான நரர் சரீரம் கொண்ட இயேசு கிறிஸ்து பெருமானை வேண்டிப் பிரார்த்தித்து உதயனை வாழ்த்துவதோடு, அவனைப் பெற்றெடுத்த நிறுவனத்தின் நிர்வாகத்தின் பிரதம ஆசிரியர், பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அல்லேலூயா, நீடுழி வாழ்க!

அருள் திரு.சத்தியசீலன் கே.கதி[illegible]
முகாமைக்குரு, இலங்கை மெதடிஸ்த திருச்சபை, யாழ்.



## உறுதி குலையாது கடமை செய்பவன்

உதயன் துணிச்சலுக்கான விருது பெற்ற தரமான பத்திரிகை. சந்தர்ப்பவாதமும் கழுத்தறுப்புப் போட்டியும் நிறைந்த உலகிலே "உதயன்" உறுதிகுலையாது, கொள்கை பிறழாது, கடமையை அர்ப்பணிப்புடன் செய்து வருகின்றான். இன்று தமிழ் மக்களின் உள்ளங்களில் எத்தனையோ ஆழமான வெட்டுக்காயங்கள், மறைந்து போகாத வடுக்கள், சொல்லி அழ முடியாத ஊமைக்காயங்கள்.

இவற்றையெல்லாம் உலகுக்குச் சொல்லிக் கொண்டிருப்பதும், பதிவு செய்வதும், அத்துடன் காயப்பட்ட நெஞ்சங்களுக்கு ஆறுதல் கூறுவதும் உதயனின் நற்பணியாகும்.

25 ஆவது வயதிற் பிரவேசிக்கும் உதயனுக்கு எனது உளப் பூர்வமான வாழ்த்துக்கள்.

சு.ஜெபநேசன் முன்னாள் பேராயர்,
தென்னிந்தியத் திருச்சபை, யாழ். அதீனம்.



25 உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சமய சமூகப் பணிகளிலும் உதயன்

## தன்னை இணைத்துக் கொள்ளப் பின்நின்றதில்லை



உதயன் அலுவலகத்தில் இடம்பெற்ற சமய நிகழ்வின் போது



உதயன் நிறுவனத்தில் கொண்டாடப்பட்ட கிறிஸ்மஸ் விழா




பத்திரிகையாளர் நிமலராஜன் குடும்ப நலன்காக்கும் நிதி கையளிப்பு. - 22.10.2000



உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியையொட்டி உதயன் நிறுவனம் நடத்திய போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு.-14.04.2003



உதயன் 19 ஆவது நிறைவுக் கொண்டாட்டம். - 28.11.2004




ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர் மீதான தாக்குதல்களைக் கண்டித்து யாழ்.மாவட்ட பத்திரிகையாளர்களும் ஊடகவியலாளர்களும் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் உதயன் பிரதிநிதிகள். 01.09.2005




கடமை வேளையில் கொல்லப்பட்ட உதயன் நிறுவன ஊழியர் ஆர்.ரஞ்சித்குமாரின் இழப்புக்கான உதவு நிதி கையளிப்பு.



உதயன் பத்திரிகை நிறுவனம் நடத்திய ஒலிம்பிக் முடிவுகள் தொடர்பான போட்டியில் பரிசுக்குரியோரைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்வு - 31.08.2004



உதயன் நிறுவனத்தால் சேகரிக்கப்பட்ட [illegible] நிவாரணப் பொருள்கள் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்டன. -31.01.2005



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி மற்றும் விளையாட்டு விஞ்ஞான அலகு, உதயன் நிறுவன அனுசரணையுடன் நடத்திய பளுதூக்கும் போட்டியில் வெற்றிபெற்ற வீரர் ஒருவருக்குப் பரிசளிப்பு. - 12.10.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயனுக்கு இன்று அகவை 24 நிறைவு

# உதயன் தன் பணிகளை ஆழமாக்கியும் அகலமாக்கியும் வெற்றிப் படிகளில் வேகமாகச் செல்லட்டும்



சி.சிவசரவணபவன்
(சிற்பி)

## ஒரு மூத்த பத்திரிகையாளரின் பார்வையில் உதயன்

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதாரம், சமயம் சமூகம் கலாசாரம் போன்ற வாழ்வியலின் பல்வேறு துறைகளுடன் கடந்த 24 ஆண்டுகளாகத் தன்னைப் பின்னிப் பிணைத்துக் கொண்டிருக்கும் "உதயன்" நாளிதழ், தன் வெள்ளிவிழா ஆண்டிலே அடி எடுத்து வைக்கும் இந்நன்னாளிலே, அதன் பன்முகப்பட்ட பணிகளைப் பற்றிச் சிந்திப்பது, நமது நன்றி உணர்வின் வெளிப்பாடாக மட்டுமல்லாமல் நடக்க இருக்கும் பாதையின் வழிகாட்டியாகவும் அமையும் என நம்புகின்றேன்.

சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் போன்ற பழம் பெரும் அரசியல் அறிஞர்களின் காலத்திலே சிந்தனை வடிவமாக இருந்து, அவர்களுக்குப் பின்வந்த தலைவர்களின் காலத்திலே சொல்வடிவம் அடைந்து, பின்னர் வந்த, பொறுமையின் எல்லையை கடந்த இளைஞர்களின் இடைவிடா முயற்சியால் செயல் வடிவை நோக்கி, நகர்த்தப்பட்டுக் கொண்டிருந்த 'தமிழ்த் தேசிய'த்தை ஆதரிப்பதையும் அதற்கு வலிமையும், வளமும் சேர்ப்பதையும் தவிர்க்க முடியாத தன் கடமையாக வரித்துக் கொண்டு தன் எண்ணத்தையும் எழுத்தையும் அதற்காக அர்ப்பணித்து உதயன் செயற்பட்டமை அனைவரின் உற்சாகமான வரவேற்புக்கு இலக்கான ஒன்று. தமிழ் மக்களின் நீண்ட காலக் கனவு நனவாக வேண்டும்; அவர்களுடைய நெஞ்சில் நிறைந்துள்ள இலட்சியம் நிறைவேற வேண்டும் என்பதற்காக, நியாயத்தின் பாற்பட்டதன் குரலைத் தொடர்ந்தும் ஒலித்துக் கொண்டிருக்கின்றான் "உதயன்" அரசியல் கபடத்தனங்கள், காட்டிக் கொடுத்தல்கள், தேர்தல் மோசடிகள், காணாமற் போதல்கள், அடிப்படை உரிமை மீறல்கள் போன்றவை "செய்தி" என்ற நிலையிலிருந்து "சாதாரண நடைமுறை" யாக வழுக்கி விழுந்து கொண்டிருக்கும் ஒரு நாட்டில், மக்களின் உரிமைக்காகப் பாடுபடும் பத்திரிகை ஒன்றின் ஆசிரியராகக் கடமை ஆற்றுவது மகா கடினமானது. எனினும் அவற்றை அம்பலப்படுத்தியும் அவை அடியோடு ஒழிந்து, அர்த்த பூர்வமான மக்களாட்சி இந்த நாட்டிலே மலர வேண்டும் என்பதை அழுத்திக் கூறும் அரசியல்-சமுதாயக் கட்டுரைகள் ஆணித்தரமான ஆசிரியத் தலையங்கள், வாசகர்களின் கருத்துக்கள் ஆகியவற்றை அடிக்கடி வெளியிட்டுவரும் ஆசிரியரின் நேர்மையும் துணிச்சலும் பாராட்டுக்குரியவை. கே.பி.ஹரன், எஸ்.டி.சிவநாயகம், இராஜ அரியரத்தினம் மற்றம் டி.பி.தனபாலா போன்ற பழம் பெரும் பத்திரிகையாளர்களின் நேரடிப் போதனை, பயிற்சி, வழிகாட்டல்களால், பண்பட்ட பத்திரிகையாளனாகத் தன்னை வளர்த்துக் கொண்ட உதயன் பிரதம ஆசிரியர் ..வ. சான'மயில்நாதன் இப்படித்தான் நடந்து கொள்வார் என்பது எதிர்பார்க்கக் கூடியது தானே! வெறும் அச்சுறுத்தல்களால் மட்டுமல்லாமல், உண்மையான ஆபத்துக்களாலும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டபோதிலும் பத்திரிகா தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தபடியாற்றான் சர்வதேசப் பத்திரிகையாளர்களின் கணிப்பையும் கௌரவத்தையும் விருதையும் உதயனால் பெற முடிந்தது.

அரசியலுடன் மட்டும் நின்றுவிடாமல் சமுதாய முன்னேற்றம்,பொருளாதார வளர்ச்சி கலை, இலக்கியச் செழுமை, ஆன்மீக நோக்கு போன்றவற்றிலும் 'உதயன்' அக்கறை கொண்டுள்ளமை குறிக்கத்தக்கது. சமுதாயச் சீர்கேடுகளை அம்பலப்படுத்தி அவை களையப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் கட்டுரைகள், உள்ளூர்ப் பொருள்களின் உற்பத்தி, இறக்குமதி செய்யப்படும் கிருமி நாசினிகளால் மக்களின் உடலாரோக்கியம் பாதிப்புக்குள்ளாதல், இயற்கைப் பசளையின் இன்றியமையாமை சம்பந்தமான கட்டுரைகள் காலத்துக்குக் காலம் வெளிவந்துள்ளன.

பழைய எழுத்தாளர்களின் கதைகளுட் சிறந்தவற்றை மிகவும் அக்கறையுடன் தெரிவு செய்து வாரந்தோறும் வெளியிட்டு வருகின்றமை இந்நாட்டு எழுத்தாளர்களின் திறமையை நினைவூட்டுவதாக உள்ளது; அந்தக் கதைகள் எழுதப்பட்ட காலத்துப் பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளை இன்றைய வாசகர்கள் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது; இந்த நாட்டின் இலக்கியப் பாரம்பரியம் பற்றிய பிரக்ஞையையும் ஏற்படுத்துகின்றது.



வரலாற்றுப் பெருமை மிக்க வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், நயினை நாகபூசணி அம்மன் கோயில், நல்லைக் கந்தன் கோயில் மற்றும் புனிதத் தலங்களின் பெருந்திருவிழாக் காலத்தில் உதயனில் இடம் பெறும் கவிதைகள், ஆன்மீகச் சிந்தனைகளைத் தூண்டுபவையாகவும் பக்திப் பரவசத்தை ஏற்படுத்துபவையாகவும் [illegible]; இறைவனின் அருளைப் பாடும் கவிஞர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்து வருவதும் மகிழ்ச்சிக்குரியது.

பல ஆண்டுகளின் முன்னர் வரை இன்றியமையாதனவாக இருந்து, வியாபார நோக்குடன் தயாரிக்கப்பட்ட விஞ்ஞானப் பொறிகள், கருவிகளால் வீட்டு மூலைகளுக்குள் முடக்கப்பட்ட பொருள்களின் விபரங்கள், உரிய படங்களுடன் வெளியிடப்படுகின்றன; கலையம்சம் நிறைந்த அபூர்வமான பொருள்களின் படங்களும் இடம் பெறுகின்றன. நமது பண்பாட்டுப் பாரம்பரியங்களை அறிந்து மகிழ்வதற்கு இவை வாய்ப்பளிக்கின்றன.

பல்வேறு பரீட்சைகளுக்குரிய மாதிரி வினாவிடைகள், ஏழ்மை காரணமாகப் பிரபல கல்லூரிகளுக்கோ தனியார் கல்வி நிறுவனங்களுக்கோ செல்ல முடியாமல் ஏங்கித் தவிப்போருக்குப் பெரும் வரப்பிரசாதம். இவற்றுடன், விளையாட்டுத்துறை,வெள்ளித்திரை, சின்னத்திரை, சம்பந்தமான செய்திகள் படங்கள்,மேனாட்டு மருத்துவம், சித்த வைத்தியம், ஆயுள்வேதவைத்தியம், தொடர்பான கட்டுரைகள், அனுபவ சாலிகளின் மற்றும் மூத்தோரின் செவ்வி முதலியவற்றையும் இணைத்து,வெறும் செய்திகளின் பதிவேடாக அல்லாமல், பல்சுவை மஞ்சரியாக சிந்தனைக் களஞ்சியமாக வெளிவந்து கொண்டிருக்கும் "உதயன்" தன் பணிகளை மேலும் ஆழமாக்கவும் அகலமாக்கவும் வெற்றிப் படிகளில் வேகமாகச் செல்லவும் எல்லாம் வல்ல எம் பெருமானை இறைஞ்சி வாழ்த்துகின்றேன். உதயன் பிரதம ஆசிரியருக்கும், ஆசிரியர் குழுவினருக்கும்,நிர்வாகிகளுக்கும் என் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன். முன்னர் வெளிவந்து இன்றும் பலருடைய நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும் "சஞ்சீவி" என்னும் உதயனின் வார இறுதி இணை இதழ் புது மெருகுடன் மீண்டும் மலரவேண்டும் என்பது கலை இலக்கிய ரசிகர்களின் நம்பிக்கை கலந்த எதிர்பார்ப்பு என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். ✱

---

## உதயன் போல நீயும் பல்லாண்டு வாழி!



காலையில் உதிக்கும் அந்த
கதிரவன் போல நீயும்
மாலையில் மறைந்து நின்று
மறுநாளும் உதிக்கிறாய் நீ
சோதனை பலவும் தாண்டி
சாதனை படைத்த தீரா
வேதனை பலவும் தாங்கி
வென்றவன் நீயே! அன்றோ?
கால் நூற்றாண்டில் நீ கண்ட
கனவெலாம் நிறைவேறும் நாளை
வரலாறு படைத்த உன்னை
வாழ்த்திட வார்த்தை அற்றேன்

கைக்குண்டு வீசினாலென்
கயவர்கள் சூழ்ந்திட்டாலென்
கூட்டிலே சிறை வைத்தாலென்
குண்டர்கள் மிரட்டினாலென்
ஏட்டிலே எழுதாதேயென்று
இடர் பல வந்திட்டாலென்
வெந்தணலில் போட்டபோதும்
வெண்சங்கு போல நீயும்
தூய்மையின் சிகரமாகி நின்று
துலங்கிடக் கண்டோம் நாமே!

கட்டோடு அள்ளிப் போட்டு
கயவர்கள் தீ வைத்த போதும்
மட்டிலா மகிழ்ச்சி பொங்க
மறுநாளே மலர்ந்தாயன்றோ?
கார் இருள் சூழ்ந்து கடுமழை பெய்திட்டாலும்
ஆதவா உனது ஒளியை போக்க
ஆரவர் துணிந்த நிற்பார்?

கல்வியை வளர்த்து நின்றாய்
கடிகமழ் தமிழைக் காத்தாய்
சொல்லொணாக் கொடுமை தன்னை
சுடச்சுட எடுத்துச் சொன்னாய்
கவிதைகள் எழுத வைத்து நாளும்
கவிஞரை ஈன்று தந்தாய்
ஓதரும் அறிஞர் தங்கள்
ஒப்பரும் ஆக்கம் தந்தாய்
தீதற இளைஞர்க் கெல்லாம்
திரண்ட தோள் விளையாட வைத்தாய்
மாசிலா மாதரசி யர்க்கு
மதிநலம் சிறக்க வைத்தாய்

இனவெறி மத வெறியைப் போக்கி
இணைத்தனை மக்களையே ஒன்றாய்
விகட நற் றுணுக்கை எல்லாம்
விதம் விதமாகச் சொன்னாய்
மெலிந்து நீ பவனி வந்தபோதும்
மிடுக்கினை இழந்தாயில்லை
கொழுத்தது கண்டு இன்று
குதூகலித்து வரவேற்கின்றோம்

கால் நூற்றாண்டில் நங்கை
கண்டபேர் எழிலைக் கண்டேன்
நூறாண்டை நீ தாண்டும்போது
"விகடகவி"யுனை வாழ்த்த வாழ மாட்டான்
மீண்டுமோர் தமிழ்க் குழந்தையாகி
விடுதலை பெற்ற இம் மண்ணில்
துள்ளியே ஓடிவந்து உன்னை
துரிதமாய் வாங்கி ஓடி
பன்னெடும் விகடகவிகளை
[illegible]

---

## மக்கள் மத்தியில் நிலையான இடம்பிடித்தவன் 'உதயன்'



ஊடகத்துறையின் வியத்தகு வளர்ச்சி, இன்று உலகையே ஒரு வீட்டினுள் கொண்டுவந்து விட்டபோதிலும் சமூகத்தின் சகல தரப்பினரையும் இலகுவில் சென்றடையும் எளிய ஊடகமாக விளங்குவது பத்திரிகையாகும். அவ்வழியில் ஜனரஞ்சக ஊடகமான பத்திரிகைத்துறையானது தன்னகத்தே பாரிய பொறுப்புக்களைத் தாங்கி நிற்கின்றது.

"விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்ற காலத்தை வென்ற குறளின் கூற்று பத்திரிகைத் துறைக்கு மிகப் பொருத்தமாய் அமைகின்றது. கடந்த இருபத்துநான்கு ஆண்டுகளாக சமுதாயத்தின் சகல தரப்பினதும் தேவை அறிந்து, சேவை செய்து மக்கள் மத்தியில் நிலையான இடம் கொண்டு, இருபத்தைந்தாவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் உதயன் பத்திரிகை தர்மத்தின் வழி நின்று தனது சேவையைத் தொடர்ந்திட, இந்நாளில் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
யாழ்.மாவட்டம்.

---

## சோதனைகளை எதிர்கொண்டு வெற்றிகண்டவன் 'உதயன்'



உதயனின் 24 ஆவது அகவை நிறைவுச் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வரைவதில் அகமகிழ்ச்சி அடைகிறேன்.

"மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்" என்ற மகுட வாசகத்தை நிலைநாட்டி "மக்கள் சேவையே மகேசன் சேவை" என பணியாற்றி வரும் "உதயன்" பத்திரிகை, மக்களைக் கவர்ந்திருக்கின்றது என்று கூறினால் அது மிகையன்று.

ஆசிரியரின் நாளாந்த விமர்சனம் நாட்டில் என்ன நடக்கின்றது எனவும், மக்களின் துயரங்களை நீக்க நடைமுறைச் சாத்தியமான கருத்துக்கள் எவை என்பதையும் வெளிக்கொணர்வதில் முதன்மை பெற்றிருக்கின்றது.

"உண்மையே உயர் அறம்" என்ற நன்மொழிக்கமைய செய்திகளை வெளியிடும் பொழுது "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும்,குற்றம் குற்றமே" என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதால், பல சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்நோக்கி வென்று வீறு நடையுடன் மிளிரும் "உதயன்"
வளர்க! வாழ்க!! வாழ்க!!!

சு. பரமநாதன்,
செயலாளர்,
சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு.

25 உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எதிர் கொண்ட சோதனைகளில் சில...



உதயன் நிறுவனத்துள் பலாத்காரமாக உட்புகுந்த ஆயுததாரி கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உதயன் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பி.ஜி.சகாயதாஸ் மரணம் -02.05.2006.



திருகோணமலை உதயன் செய்தியாளர் எஸ்.சுகிர்தராஜன் சுட்டுக்கொலை. -24.01.2006

★ 27.09.1990 - உதயன் பணிமனை மீது விமானக்குண்டுவீச்சு. உதயன் ஊழியர் பொ.பத்மநாதன் உயிரிழப்பு. ஊழியர்கள் யோ.ஜெயந்தன் மற்றும் ஏ.சுகிர்தராஜா அவயவங்கள் இழப்பு.

★ 21.08.1999 - உதயன் பணிமனைமீது கைக்குண்டுத்தாக்குதல். வாகனங்கள் சேதம். பாதுகாப்பு உத்தியோகத்தர் காயம்.

★ 23.06.2001 - உதயன் பிரதம ஆசிரியரை வாகனத்தால் மோதிக் கொலை செய்ய முயற்சி.

★ 23.08.2005 - கொழும்பு, வெள்ளவத்தை உதயன் விளம்பரப் பணிமனைமீது கைக்குண்டுத் தாக்குதல்.

★ 29.09.2005 - உதயனின் சகோதரப் பத்திரிகையான சுடர் ஒளியின் கொழும்பு அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல். பாதுகாப்பு ஊழியர் டேவிட் செல்வரத்தினம் உயிரிழப்பு.

★ 26.02.2009 - உதயன், சுடர் ஒளி நாளிதழ்களின் ஆசிரியர் என்.வித்தியாதரன் வெள்ளைவான் ஆயுததாரிகளால் கடத்தல்.

★ 24.03.2009 - உதயன் பிரதம ஆசிரியரை இலக்கு வைத்து அவரது உத்தி யோகபூர்வ வதிவிடம் மீது கைக்குண்டுத் தாக்குதல். பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயம்.

★ 27.06.2009 - உதயன் பணியாளர் கள், விற்பனை முகவர்கள், விநி யோகஸ்தர்கள் ஆகிய மூன்று தரப்பினரையும் பணிகளில் இருந்து விலகி விடு மாறு மரண அச்சுறுத்தல் விடுத்து எச்சரிக்கை விடுக்கப்பட்டது.



உதயன் நிறுவனத்துள் பலாத்காரமாக உட்புகுந்த ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உதயன் ஊழியர் ஆர்.ரஞ்ஜித்குமார் மரணம் - 02.05.2006



படைமுகாம் ஒன்றின் அருகில் உதயன் நிறுவன வாகனச் சாரதி எஸ்.பாஸ்கரன் சுட்டுக்கொலை - 15.08.2006



உதயன் பொது முகாமையாளர் கே.நந்தகுமார் இராணுவ வாகனத்தால் மோதுண்டு மரணம் - 06.05.2001





விநியோகத்துக்கென எடுத்துச் செல்லப்பட்ட உதயன் பத்திரிகைப் பிரதிகள் இனந் தெரியாதோரால் பறித்தெடுக்கப்பட்டுத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. -25.06.2009



உதயன் அலுவலகச் செய்தியாளர் எஸ் ரஜிவர்மன் கடமைக்கு வந்து கொண்டிருந்தவேளையில் ஆயுத தாரிகளால் சுட்டுக் கொலை -29.04.2007




இராச வீதியில் அமைந்திருந்த உதயனின் இலத்திரனி யல் உபகரணங்கள், களஞ்சியம் இனந்தெரியாதோரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு முற்றாக நாசமாக்கப்பட்டது. 18.08.2006.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் நிகழ்த்திய சாதனைகள்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



உதயன் முதலாவது
இதழ் வெளியீட்டு வைபவம்:
27.11.1985 அன்று உதயன் பிரதம
ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன்
அபிமானி ஒருவருக்கு முதல் பிரதியைக்
கையளிக் கிறார். பொது முகாமையாளர்
(அமரர்) சி.க.திருச்சிற்றம்பலம், நிர்வாக
இயக்குநர் ஈ.சரவணபவன் ஆகியோ
ரும் படத்தில் காணப்படுகின்றனர்.






இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள்
அவையினால் வழங்கப்பட்ட 1998 ஆம்
ஆண்டுக்கான துணிச்சலான பத்திரிகைக்கான
சேபால குணசேன விருது. -04.05.1999 ஆம்
திகதியன்று கொழும்பு றான்ஸ் ஏசியா ஹோட்
டலில் இடம் பெற்ற வைபவத்தில் உதயன் நிர்வாக
இயக்குநர் ஈ.சரவணபவன் சேபால குணசேனவின்
மகன் மனோ குணசேனாவிடம் இருந்து
பெற்றுக்கொள்கிறார்.



துணிச்சலான பத்திரிகைக்கான
விருதுபெற்றமை தொடர்பான பாராட்டு
வைபவம் 24.03.2000 ஆம் திகதியன்று உதயன்
அலுவலகத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து
சிறப்பித்த பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா ஜோய்
டபீல்ட் அம்மையார் விருதினை உதயன் பிரதம ஆசி
ரியரிடம் கையளிக்கிறார். படத்தில் நிர்வாக
இயக்குநர் மற்றும் உதயன் ஆசிரியர், ஆசிரியர் பீட
உறுப்பினர்களும் காணப்படுகின்றனர்.



இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள்
சங்கமும் இலங்கைப் பத்திரிகை நிறுவனமும்
இணைந்து வழங்கிய 2008 ஆம் ஆண்டுக்கான
சிறந்த இதழியல் பெறுபேற்றுக்கான விருது.
14.07.2009 ஆம் திகதியன்று கொழும்பு மவுண்ட்
லவேனியா ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வில்
உதயன், சுடர் ஒளி நாளிதழ்களின் ஆசிரியர்
ந.வித்தியாதரன் 'லக்பிம' பத்திரிகையின்
ஆசிரியர் ஜதில வீரபொடவிடமிருந்து
பெற்றுக்கொள்கிறார்.



மக்கள் சேவை ஊடகம்
மற்றும் சகிப்புத் தன்மைக்கான ஊடக விருது.
24.10.2008 ஆம் திகதியன்று கொழும்பு
ஹோல்பேஸ் ஹோட்டலில் இடம்பெற்ற வைபவத்தில்
பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் துணிச்சலுடன்
மக்களுக்குச் சேவையாற்றி வருவதற்கான விருது
உதயனுக்கு வழங்கப் பட்டது. உதயன், சுடர் ஒளி
பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர்
ஈ.சரவணபவன் பிரபல எழுத்தாளர் ஜயதிலக
கம்மலவீரவிடம் இருந்து விருதைப் பெற்றுக்
கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனுக்கு இன்று அகவை 24 நிறைவு



## சோதனைகளூடாகச் சாதனைகள் புரிந்தவன்

யாழ்ப்பாணத்துத் தமிழ் நாளிதழான ''உதயன்'' அதனது 24 ஆவது அகவையை 27.11.2009ம் திகதி பூர்த்தி செய்வதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணத் தளத்திலிருந்து உள்ளூர் செய்திகளையும், உணர்வுகளையும் தாங்கி வரக்கூடிய தினசரிப் பத்திரிகைத் தேவை வலுப்பட்ட போது, முதலில் 1961இல் 'ஈழநாடு'' பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து வேறு பல தினசரிகளும் வெளிவரத் தொடங்கின. அவற்றில் ஒன்றான ''உதயன்'' இன்னும் வெளிவந்து கொண்டிருக்கையில் ஏனையவை பல கால ஓட்ட சூழ்நிலைகள், நெருக்கடிகள் காரணமாக பிரசுரிக்கப்படாமல் போய்விட்டன.

தனது ஆரம்ப நாளில் இருந்து இன்று வரை ''உதயன்'' சந்தித்த சோதனைகள்; எய்திய சாதனைகள் யாவற்றையும் தெரிந்து கொண்டது ஒரு புறமிருக்க சோதனைகளுக்கூடாக சாதனை புரிந்த ஊடகமாகவே உதயனை நான் பார்க்கிறேன். ''உதயன்'' சந்தித்த சோதனைகள் அதன் வயது எண்ணிக்கையிலும் அதிகமானவையே. ''உதயன்'' காலத்துக்குக், காலம் பல்வேறு தரப்பிலிருந்து பல்வேறு வகையான எதிர்ப்புக்களைச் சந்தித்து வந்துள்ளது. அவற்றையெல்லாம் தைரியத்தோடு தாங்கி நின்று, தமிழினத்தினது தன்மான உணர்வுகளையும், தனித்துவத்தையும், அரசியல்,கலை, கலாசார விழுமியங்களையும் முன்னெடுப்பதில் தன்னிகரில்லாத பங்களிப்பை அது வழங்கியுள்ளது, வழங்கி வருகின்றது, இனியும் வழங்கவேண்டும்.

தமிழ் மக்கள் சென்ற 60 ஆண்டுகளாகக் கடந்து வந்த அடக்குமுறைகள், உரிமை மறுத்தல்கள், பாகுபாடுகள் என்பனவற்றுக்கு ஊடாகவும், யாழ்ப்பாணம், உலகத் தமிழினத்தின் மொழி,கலை, கலாசாரம், பண்பாடு என்பனவற்றின் மையக் காப்பகமாகவே விளங்குகின்றது. இனியும் அவ்வாறே விளங்கும். இந்தப் பெருமைக்கு உதயன் ஆற்றிய பங்களிப்பு மிகப் பெரியது.

எமது வாழ்வியல் பற்றி புலம் பெயர் தமிழர்களுக்கான தகவல் பாலமாகவும் உதயன் விளங்குகின்றது. எமது இன உரிமைக்குரலுக்கும்,முன்னெடுப்புகளுக்கும் அவர்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்றுத்தர இவை மிக உறுதுணையாக உள்ளன.

யாழ்ப்பாண மண்ணின் பத்திரிகைச் சொத்திலொன்றான ''உதயன்'' நீடித்த நெடுங்காலம் தமிழினத்துக்கு தொடர்ந்து சேவையாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். உதயனின் நிர்வாகத்தினர்,ஆசிரிய பீடம் செய்தியாளர்கள் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் எமது நல்வாழ்த்துக்களும்,பாராட்டுக்களும்.

சீ.வீ.கே. சிவஞானம்,
தலைவர்,
யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

## நாற்றிசையும் ஞாயிறாய் மிளிர்க!



எமது தேசத்தில் கடந்த பல ஆண்டு காலம் மிக மிகத் துயர் நிறைந்த காலம். ஏறக்குறைய அக்காலம் முழுமைக்கும் தமிழ் சமூகத்திற்கு துணைநின்ற உற்ற தோழனாக 'உதயன்' நாளிதழ் திகழ்கிறது. மிக நெருக்கடியான சூழ்நிலையில் இப்பத்திரிகை தன் பணியைத் தொடர்ந்தமை வியப்பிற்கும் போற்றுதலுக்கும் உரியது. ஓர் ஆரோக்கியமான சமூகத்தின் ஆக்கத்திற்கு அடித்தளமாக அமையத்தக்கவற்றில் முதன்மை பெறுவது தொடர்பு சாதனங்களே. வளர்ந்து வரும் எமது பிரதேசத்திற்கு செய்தி ஏடாக மட்டுமன்றி வழிகாட்டியாக மக்களின் உணர்வுகளின் சுட்டியாக 'உதயன்' செயற்பட்டது. உதயனின் பணிக்காக அரும்பணி செய்த நிர்வாகிகள், பணியாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். அறிவியல், தொழில்நுட்ப, லௌகீக வளர்ச்சியுடன் எமது சமூக விழுமியங்கள் பண்பாடுகள் என்பவற்றின் பேணதலுக்குமான முழுமையான ஆரோக்கியமான சமுதாயத்திற்காய் உதயன் நாளிதழின் சிறப்பான பணி தொடர வேண்டும்.




வடக்கில் உதித்த நாளிதழாம் உதயன் நாற்றிசையிலும் ஞாயிறாய் நலமே மிளிர்க!!

திருமதி ப.சிவலிங்கம்
பிராந்திய ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

## தன் பணியில் ஒல்காது தளைத்து ஓங்கிடுக!



மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை விரிநீர் வியன் உலகத்தில் பறைசாற்றி நிற்கின்ற விறல் மிக்கன செய்தி ஏடுகள். எப்பக்கமும் சாராது நடுநிலை நின்று நீதி வழுவா நெறிமுறையில், அதிகாரத்திற்கு அடிபணியாது அகிலம் எல்லாம் போற்றும் வகையில் மிகுந்த துணிச்சலோடு பல்வேறு செய்திகளையும், சீரிய கருத்துக்களையும் மாணவர்கள், அறிஞர்கள், பெரியவர்கள் ஆகிய பல்திறத்தோரின் அறிவுச்சுவைக்கு அமுதமென அள்ளி வழங்கும் அமுதசுரபியான உதயன் தன்னலம் அற்ற பணியில் நிறைவுகண்ட ஆண்டுகள் இருபத்து நான்கு (24). அவன். காலடி எடுத்து வைக்கின்ற 25 ஆவது ஆண்டில் அவன் புதுப்பொலிவோடு, புரட்சிகர சிந்தனையோடு திக்கெட்டும் பெறப்படுகின்ற உண்மைச் செய்திகளோடு வழக்கம் போல வாசகர்களை மகிழ்விக்க அவர்களினுடைய அறிவுச் சுவைக்கு விருந்தளிக்க தன் பணியில் ஒல்காது தளைத்து ஓங்கிட தரணியெல்லாம் புகழ்பூத்து வீறு நடை போட நாரணன் தாழ் பணிந்து வாழ்த்துகின்றோம்.

இவ்வமயத்தில் கழித்துபோன ஆண்டுகளில் அவன் அனுபவித்த சோதனைகள், வேதனைகளை நாம் நினைத்துப் பார்க்கின்றபோது, அந்தச் சோதனைகள் வேதனைகளினால் அஞ்சித் துவண்டு விடாது, சோகத்தில் மூழ்கிவிடாது அவற்றையே வெற்றிப் படிகளாக்கி Brave Journalism என்ற வெற்றிப் பரிசினை, வெற்றி வாகையினை ஒரு முறைக்குப் பலமுறை அவன் சூடிக் கொண்டது போல, மென்மேலும் வெற்றி விருதுகளை அவன் தனதாக்கிக் கொள்ள, வாழ்க பல்லாண்டு வளர்க அவன் பணி என்று மாயவன் திருவருள் இறைஞ்சி சிவன் அருள் போற்றி வாழ்த்தினை நவில்கின்றோம்.

இந்த இனிய ஏட்டோடு அதனுடைய ஆரம்ப காலம் முதல் என்னுடைய பிணைப்பினை எண்ணி இந்நன்னாளில் நான் பெருமிதம் கொள்கின்றேன்.

க.சி. சிவசுப்பிரமணியம்
ஆங்கிலப் பயிற்றுநர்.

## மென்மேலும் வளர வாழ்த்துக்கள்



உதயன் பத்திரிகை 1985 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. இவ்வளவு வருடங்கள் மக்களுக்கு வேண்டிய பணியைச் செவ்வனேஆற்றியுள்ளது. நவீன உலகமாக இருந்தாலும் பத்திரிகையைப் புரட்டிப் படிக்காதவர்கள் இருக்கமுடியாது. தனது 24 வருட கால மக்கள் சேவையை உதயன் பத்திரிகை உன்னதமாக ஆற்றியுள்ளது. அது மென்மேலும் வளரவேண்டி எங்கள் நல் வாழ்த்துக்கள்.

அன்னையின் அடியான்
சித்ருபானந்தா



## மாணவனின் சுயமதிப்பீட்டுக்கு உதவும் ஊடகம்

வெள்ளி விழாவில் உட்புகும் உதயனின் கல்விச் சேவை பாராட்டுக்குரியது. பிரபல்யமுற்ற ஆசிரியர்களைக் கொண்டு தரம் 5, க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைகளுக்குரிய பயிற்சி வினாத்தாள்களை முதல் நாளிலும் அதற்கான விடைகளை அடுத்த நாளிலும் வெளியிடுவதன் மூலம் மாணவனொருவனுக்கு சுயமதிப்பிடல் பயிற்சியளிப்பதுடன் தனது பலவீனமான பகுதியையும் மாணவர்களை உணர வைக்கிறது. அத்துடன் கொழும்பு, கண்டி, போன்ற பெரிய நகரங்களில் உள்ள பாடசாலை வினாத்தாள்களையும் அப்பகுதிகளில் உள்ள ஆசிரியர்களின் வினாத்தாள்களையும் வெளியிடுவதன் மூலம் மாணவனை வெளியுலகத்திற்கு அழைத்துச் செல்கிறது. இதனால் எமது பரீட்சைப் பெறுபேறுகள் மேம்பட்டுள்ளன என்றால் மிகையாகாது. கல்விக்குத் தொண்டாற்றும் உதயன் பல்லாண்டு காலம் தொண்டு செய்ய எனது பிராத்தனைகள்.

வே.தி.செல்வரத்தினம்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாண மாவட்டம்.



## இலட்சியப் பயணத்தில் என்றும் நீ ஒரு 'பீனிக்ஸ்' பறவை

ஊடகத் துறையில் உதயனே உனது பணி என்றும் ஓர் இமயம். கடந்த 23 வருட வாழ்க்கை பயணத்தில் நீ சந்தித்தவை ஏராளம். அதற்காக நீ கொடுத்த விலை என்றும் மதிப்பிடற்கரியது. ஒவ்வொரு ஆண்டும் உனக்கது தலைப்பிரசவமே. அதன் வேதனை, வலி அதற்காக உனக்குள்ளே அமைத்துக் கொண்ட சாம்ராஜ்யத்திற்கு அவ்வப்போது கிடைக்கின்ற கௌரவம், மதிப்பு, பாராட்டுக்கள் அனைத்தையும் ஆரவாரமின்றி அடக்கத்துடன் ஏற்றுக் கொள்ளும் உனது பண்பு,ஈழத்தமிழர் வரலாற்றின் நீரோட்டத்தில் என்றும் கலந்திருக்கும் உனது மாண்பு, இவையனைத்துமே ஒருமுறைக்கு மேல் பலமுறை எடுத்துக் கூற வேண்டிய ஒப்புவமையற்ற ஒன்றாகும். நீ உனது இலட்சிய பயணத்தில் என்றும் 'பீனிக்ஸ்' பறவை.

ஈழத்து நெஞ்சங்கள் மட்டுமல்லாது கடல் கடந்து புலம் பெயர்ந்து வாழும் எம் உறவுகளுக்காக நித்தம் நீ ஆற்றுகின்ற உனது சேவைக்கு தமிழுலகம் உள்ளவரை தலை வணங்கும். உனது துணிவு, அஞ்சாமை, நடுநிலைமை என்பன உன்னோடு ஒட்டிப் பிறந்த கவசங்கள். அதனைக் கிழித்தெறிய எத்தனை தடவைகள் முயற்சி எடுத்தபோதிலும் உனது துணிவு வென்றது, உனது அஞ்சாமை தோற்றுப் போகவில்லை, உனது நடுநிலைமை உலக அரங்கில் ஓங்கி ஒலித்தது. ஆகையால் இன்றைய உனது 24 ஆவது பிறந்தநாள் நாள் ஈழத்தமிழர் வராலாற்றில் மகத்தானது, போற்றுதற்குரியது.

காலத்தின் கோலத்தால் எம்மினிய உறவுகளின் நெஞ்சங்கள் அவலக் குரல் எழுப்பிய போதெல்லாம் ஆறுதல் பகன்றாய். இயற்கை அனர்த்தம் வந்துற்ற போது எம்மோடு தோள் கொடுத்தாய். கலை, கலாசார விழுமியங்களை கட்டிக் காத்தாய். எமது இலங்கை வங்கியின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் பங்காளியானாய். உன் அர்ப்பணிப்புள்ள அப்பழுக்கற்ற சேவைக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி வைப்பதில் எமது உள்ளம் புளகாங்கிதம் அடைகின்றது.

மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்கும், விளையாட்டுத்துறை ஊக்கத்திற்கும் உன் பணி அபரிமிதமானது. இலைமறை காயாக இருக்கும் திறமைக்கும் அவர்தம் ஆக்கத்திற்கும் கலங்கரை விளக்கானாய். குப்பி விளக்கின் வெளிச்சத்தில் எமது மாணவச் செல்வங்கள் கல்வி பயின்ற நாள்கள் நெஞ்சத் திரையில் நிழலாடுகின்றது. அந்நாள்களில் காகிதாதிகள் தட்டுப்பாடு நிலவிய போதிலும் உன் பத்திரிகைத் தர்மம் தலைதூக்கியது எமக்கு நினைவிருக்கிறது.

அது மட்டுமல்ல அவ்வப்போது குடா நாட்டில் தலை தூக்கும் அடாவடித்தனம், கலாசாரச் சீரழிவு மேலெழும் போதெல்லாம் உரிமையோடு கண்டித்து வெளிச்சத்துக்கு கொண்டு வரும் உனது பாங்கும் துணிவும் என்றும் பாராட்டுதற்குரியது.

இன்றைய உலக அரங்கில் வளர்ச்சிப் பாதையில் அதன் ஏற்றத்திற்கு ஏதுவாக தினம் எமது கடல் கடந்த உறவுகள் உதயன் செய்தியைப் பார்த்து படிக்க Internet மூலம் வழங்கும் சேவையால், அவர்கள் எமது மண்ணில் இருக்கும் உணர்வையே அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து ஆற்றும் பணியையும் பாராட்டி வாழ்த்தாமல் இருக்க முடியவில்லை.

என். சிவரத்தினம்,
உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி வட பிராந்தியம், யாழ்ப்பாணம்.

## உறவுப்பாலமாக - உதயன்



எமது நாட்டின் ஊடகத்துறையில், சிறப்பு வாய்ந்த தனது சேவையினால் தனித்துவம் பெற்று, 25 வது அகவையில் காலடி பதிக்கின்ற உதயன் பத்திரிகையின் ஆழ்ந்த, சமூக நோக்குள்ள பணிகளை இந்நேரத்தில் நினைவு கூர விரும்புகின்றேன்.

மக்கள் வங்கியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே நடைமுறையிலுள்ள, மற்றும் புதிய சேவை அறிமுகங்கள் தொடர்பான சரியான விபரங்களை உடனுக்குடன் எமது சமுதாயத்திற்கு வெளிப்படுத்துவதனூடாக, சமூதாயத்திற்கும் எமது வங்கிக்குமிடையிலான ஒரு உறவுப்பாலமாகவே உதயன் சேவையாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றிகரமான 24 வருடங்களை ஊடகத்துறையில் பூர்த்தி செய்து 25 வது அகவையில் காலடி பதிக்கும் இவ் வேளையில், உதயனின் பணி சிறக்க, மக்கள் வங்கி சார்பில் , உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


த.க.ஆனந்தராசா
உதவிப் பொது முகாமையாளர்,
மக்கள் வங்கி .

25 உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டுக்கு விஜயம் செய்த மிக முக்கிய பிரமுகர்களில் உதயனுக்கு வந்து கௌரவித்தோரில் சிலர்....




அமைச்சர் மிலிந்த மொறகொட உதயனுக்கு விஜயம் - 01.01.2003



அமெரிக்க தூதராலய அதிகாரி செல்வி கோடி-சி-ரெயிலர் உதயனுக்கு விஜயம் செய்த வேளை உதயன் - சுடர் ஒளி ஆசிரியர் என்.வித்தியாதரனுக்கு வழங்கிய விசேட பேட்டி - 11.09.2003



தென்னிந்தியச் சினிமாப் பட இயக்குநர் பாரதிராஜா உதயனுக்கு விஜயம் - 02.12.2004



எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உதயனுக்கு விஜயம் - கூட நிற்போர் பிரட்மன் வீரக்கோன் மற்றும் சி.சுவாமிநாதன் - 05.01.2005



நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஷ்கர் மற்றும் நோர்வே விசேட சமாதனத் தூதுவர் ஜோன் ஹன்சன் போவர் உதயனுக்கு விஜயம் - 05.08.2006



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரிச்சாட் பௌச்சர் மற்றும் கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் றோபேட் ஓ பிளேக் உதயன் நிர்வாக இயக்குநர் மற்றும் உதயன் பிரதம ஆசிரியரைச் சந்தித்து கலந்துரையாடிய போது - 09.05.2007



பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் மார்க் புடிங் உதயனுக்கு விஜயம் - 12.01.2009



அமெரிக்கப் பிரதித் தூதுவர் ஜேம்ஸ்ஆர்மூர் உதயனுக்கு விஜயம் - 10.02.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனுக்கு இன்று அகவை 24 நிறைவு

## தமிழ் மக்களின் நெஞ்சங்களில் தன்னை நிலைநிறுத்தியவன்



கடந்த 24 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடனும் பற்றுதியுடனும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு மட்டுமல்லாது தனது சேவையினை எங்கெல்லாம் தமிழ்மக்கள் வாழுகின்றார்களோ அங்கெல்லாம் தன்னை நிலைநிறுத்தி, மக்களின் உள்ளங்களில் என்றென்றும் வலம் வந்து கொண்டிருக்கும் உதயன், 27.11.2009 அன்று தனது 24 வது அகவையினை நிறைவு செய்து 25ஆவது அகவையில் காலடி வைப்பதனையிட்டு பெருமகிழ்வெய்துகிறோம். உதயன் இன்னும் பலகாலம் தன்னையும் வளர்த்து தனது சேவையினை அர்ப்பணிப்புடன் தமிழுலகுக்கு வழங்க வேண்டும் என்று சந்நிதிவேற் பெருமானை வேண்டி ஆசி கூறி அமைகிறேன்.

சுபம் சாந்தி
குருபணியில்
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி.

## கந்தன் அவதரித்த கார்த்திகை மாதத்தில் பிறந்த உதயனே நீ நீடுழி வாழ்க!



அதிகாலை வேளை அனைவரது கைகளிலும் தவளும் உதயன் பத்திரிகையானது 24 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து 25 ஆவது அகவையில் காலடியெடுத்து வைப்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

சூரியன் உதயமாவதற்கு முன் உதயன் உதயமாகிவிடுகின்றான். துணிச்சல் மிக்க செய்திகள், அன்றாடச் செய்திகள், மாணவர்களுக்குப் பயன் தரும் செய்திகள், கல்விச்சுடர், உலகச் செய்திகள் என அனைத்தையும் உடனுக்குடன் தரும் பத்திரிகையென்றால் அது உதயனே தான்.

பத்திரிகை வெளியீட்டுடன் தனித்து நின்றுவிடாது உதயன் பற்பல சேவைகளை ஆற்றி வருகின்றது. அதாவது பாடசாலை மாணவர்களுக்குப் பரீட்சைக் கருத்தரங்குகள் நடத்துதல், பல பிரபல்ய பாடசாலைகளின் பரீட்சை வினாத்தாள்களை வெளியிடுதல், போட்டிகளை நடத்திப் பரிசில் வழங்கி ஊக்குவித்தல் போன்ற சமூக சேவைகளையும் ஆற்றி வருகின்றது.

வெள்ளி விழாவினைக் காணும் ஆண்டில் தடம் பதிக்கும் இவ்வேளையில் உதயன் தன் பணி பல்லாண்டு காலம் தொடர எனது நல்லாசிகளைக் கூறி, இப்பணி சிறக்க உறுதுணையாக இருக்கும் நிர்வாகத்தினர், உத்தியோகத்தர்கள் அனைவரையும் வாழ்த்திப் பணி மென்மேலும் சிறக்க வேண்டும் என்று வல்வை நகரின் காவல் தெய்வமாக விளங்கும் அன்னை கோடிமாரித்தாயை வேண்டிப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளைக் கூறி நிற்கின்றேன்.

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் (JP)
சிவாச்சார்ய பீடாதிபதி, அகில உலக சைவகுருமார் சம்மேளனம்
பிரதம குரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

## படித்தேயாக வேண்டிய பத்திரிகை – உதயன்

உதயன் தனது 24வது ஆண்டினை நிறைவு செய்துவிட்டு 25வது ஆண்டாம் வெள்ளிவிழா ஆண்டிலே கால் பதித்துள்ளமை பெரும் சாதனையாகும்.

இந்த அவசர யுகத்திலே படிக்கின்ற பழக்கமானது அருகிவருவதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் பத்திரிகைகளைப் பொறுத்த வரை, அவைகளைப் படிப்பது என்றில்லாமல் பார்ப்பது என்ற நிலைமை உருவாகிவிட்டது. ஆனாலும் உதயனைப் பொறுத்தவரை- அது படிக்க வேண்டிய பத்திரிகையாக விளங்கிவருகிறது. அதற்கு உதயன் காலத்துக்கு காலம் புகுத்திவரும் சிறப்பு அம்சங்களே காரணம். வெள்ளி விழா ஆண்டில் கால் பதிப்பதாலோ என்னமோ உதயனில் சமீப காலங்களில் பல புதுப்புது அம்சங்களையும், புது மெருகினையும் காண முடிகிறது. உதயன் மேலும் வளர அதன் பணிகள் சிறக்க எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். உதயனின் வளர்ச்சி கண்டு உதயனில் எழுதியதனால் பாராட்டுக்களும் பல விருதுகளும் பெற்றவன் என்ற வகையில் எனக்கும் பெருமைதான்.

பொ.சண்முகநாதன் (சண் அங்கிள்)

## என் அன்புக்கினிய உதயனே! உதய வேளையில் வணக்கம்

என் அபிமானத்துக்குரிய உதயனுக்கு இன்று நவம்பர் 27 ஆம் நாள் 25 ஆவது அகவை ஆரம்பம் என்பது அறிந்து மிக்க மனமகிழ்ச்சியடைகின்றேன். இந்த மகிழ்ச்சியை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். இந்த 25ஆவது பிறந்தநாளுக்கு எனது இனிய நல்வாழ்த்தைத் தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன். தினசரிச் செய்திகளோடு, காலத்துக்குத் தகுந்த கருத்துக்கள், கட்டுரைகள், கவிதைகள், இனிய தமிழ் அறிவியல் ஆக்கங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் எனப் பல்வேறு சுவையான விடயங்களைத் தருவதில் உதயனின் பங்கு மகத்தானது. அம்சங்களை நுட்பமான முறையில் தரும் அருமையும், பெருமையும், உதயனுக்கே உரியது. காலத்தின் கட்டாயம் சஞ்சீவி. அதனைக் கூடிய விரைவில் வெளிக்கொணருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். பஞ்சாமிர்தம் பகுதியும் தித்திக்கின்றது. மற்றும், கல்விச்சுடர், சிறுவர் கதிர், இளவல்கள் வட்டம், சொற்சிலம்பம் பகுதிகளும் சிறப்பாக உள்ளன. தொடரட்டும்! உங்கள் நற்பணி

பிரதம ஆசிரியர், ஆசிரியர் பீட உறுப்பினர்கள், மற்றும் உதயன் பணியாளர்களையும், பொன்னான இந்த நன்நாளில் வாழ்த்துகின்றேன்.

வாழ்க உதயன்! தொடர்க உன் பணி!!

அபிமான வாசகன் கே.இராஜகோபால், வட்டுக் கோட்டை.

## உதயனே புகழோங்க வாழ்க பல்லாண்டு!

எண்டுறை இணையற்ற பணியதனால் தமிழுலகின் இமயமென விளங்குகின்ற உதயனே! அகவையது ஆண்டுகள் இருபத்து நான்கதனை நிறைவுசெய்யும் ஆற்றல்மிகு பேரிதழே! நம்தமிழர் நெஞ்சமெலாம் நீண்டு நிறைந்தெங்கும் நல்வாழ்வு நிலவிடவே நடுநிலை தொடர்ந்து நற் தகவெல்லாம் தந்து பல் ஆண்டுபல் ஆண்டு நீ ஆண்டுவர வேண்டும் எம் ஆதவனே! புகழோங்க வாழ்க நீ வாழ்க வாழ்க!

எத்தனையோ இடர்களை நீ எதிர்கொண்டாய் எங்களுக்கு ஏற்றம்தரும் பாதையிலே உன்பயணம் தொடர்கையிலே அத்தனையும் தாண்டி நீ உறுதியுடன் நலன்காக்க அர்ப்பணமாய் அரும்பணியை ஆற்றியே வருகின்றாய்! முத்தனைய உன்வரவால் முன்னேற்றம் தனைமிகுந்த மாண்பும் பெற்றிடவே எம்மவரின் தனிப்பெரும் சொத்தெனவே விளங்கி நீ செங்கதிர்போல் ஒளிதந்து செம்மைசேர் புகழோங்க வாழ்க நீ வாழ்க வாழ்க!

ப. மகேந்திரதாசன்
நாயன்மார்கட்டு.

## வெள்ளி விழாகண்டுயர்வாய் வாழி! வாழி!!

உதயன் என்றொளி நல்கிடும் தேனே
உதயத் தொளிர்வோனே
உலகுபு கழ்தமிழ் நிலத்தில் நடனம்
பயின்றே வருவானே
இருமுறு வழியில் எம்முடன் வந்தே
இனிக்கும் செய்திகளை
இற்றைப் பொழுதில் நாட்டில் நிகழ்ந்த
அனைத்தும் தனையுமே
ஏதமில் வழியில் நாமறிந் திடவே
எழுகதிர் வேளையிலே
எழில் தமிழ்க் கவிதை கட்டுரை விமர்சனம்
இலக்கிய நயம்காண
காதலு றுதமிழ்க் கன்னியென் தாயும்
கண்டே குதூகலிக்க
களிநடம் புரிந்தாய் வெள்ளி பொன் பவளம்
கண்டே நீ வாழ்க!

கவிஞர் புலவர். சு.குகதேவன்
தெல்லிப்பளை.

25 உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயனின் பணி மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்


40 ஆவது வருட வெற்றி நடை
(1969 - 2009)
40 வருட சேவையில் எமது நிறுவனத்திற்கு ஆதரவு வழங்கிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் தொடர்ந்தும் உங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.
Since 1969
JAFFNA ELECTRICALS
Authorized Dealers For
Abans LG KEVILTON ORANGE
23.11.2009 - 30.11.2009 வரை சகல பொருள்களுக்கும் விசேட கழிவும் குறிப்பிட்ட பொருள்களுக்கு அதி விசேட கழிவும் வழங்கப்படும்
Distributers for
KML CABLES KTK PVC hager OSRAM USHA Kanchan HOME APPLIANCES
தரமான மின்சார சாதனங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், PVC Pipes போன்றவற்றை குறைந்த விலையில் உயர் தரத்தில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே நிறுவனம்
Jaffna Electricals
94 (6), Stanley Rd, Jaffna
T.P- 021 2222353, 021 2224302.
Service Dept.
Jaffna Electricals
Abans Franchise Agent
279, Stanly Road, Jaffna.
T.P: 021 2227657
Jaffna Electricals
Show Room, 141, Power House Rd. Jaffna.
T.P- 0212225766, Fax: 0212228378.






RG இரத்தினகோபால்ஸ்
63,65, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
சித்தாரா பொன்னாங்காணி தைலம்
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்
Manufactured By:
Sithara Products
Puttalam, Road, Chilaw.
(Reg.No: 6382)AR/PR/No.228
யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்
இல. 288, ... யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

சிறுவர் நூல்கள், புலமைப்பரிசில் நூல்கள், பொதுநூல்கள், பயிற்சி நூல்கள், கணனி நூல்கள், பாடசாலை உபகரணங்கள், இலக்கிய நூல்கள் மற்றும் கல்விசார் CDக்கள் யாவையும் மலிவு விலையில் பெற்றிட
அன்னை புத்தகசாலை
நவீனசந்தைக் கட்டடம்
இல.07, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2229881


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org